DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
RE/MAX
Direct: 416-897-9155
Office: 416-221-0999

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurence;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

உதயம் 1386
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday October 28, 2022

# The Tamil Genocide Monument Project in Brampton would be completed very soon – *Re-elected Brampton Mayor, His Worship Patrick Brown*

# முள்ளிவாய்க்கால் இனப்புடுகொலை நினைவாலயம் பிரம்ரன் மாநகரில் விரைவில் திறந்து வைக்கப்பெறும்

## — மீண்டும் தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரம்ரன் மாநகர மேயர் பெற்றிக் பிரவுண் உறுதி

எனது கடந்த பதவிக் காலத்தில் அத்திவாரம் இடப்பெற்ற முள்ளிவாய்க்கால் இனப்புடுகொலை நினைவாலயம் பிரம்ரன் மாநகரில் விரைவில் திறந்து வைக்கப்பெறும்- இதனை நான் உறுதியாகக் கூறுகின்றேன். இந்த நினைவாலயம் திறந்து வைக்கப்பட்ட பின்னர் கனடாவிலிருந்து மாத்திரமல்ல உலகின் பல பாகங்களிலிருந்தும் கனடாவிற்கு வருகை தரும் தமிழ் மக்கள் அதனை தரிசித்துச் செல்வார்கள் என்பது உண்மையே".



இவ்வாறு தெரிவித்தார். கடந்த 24ம் திகதி பிரம்ரன் மாநகருக்கான தேர்தலில் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரம்ரன் மாநகர மேயர் பெற்றிக் பிரவுண் அவர்கள். நேற்று முன்தினம் புதன்கிழமை26ம் திகதி பிரம்ரன் மாநகரில் நடைபெற்ற "பிரம்ரன் தமிழ் மூத்தோர் கழகத்தின்" 9வது ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த மேயர் பெற்றிக் பிரவுண் அவர்கள் அங்கு சிறப்பன முறையில் வரவேற்கப்பெற்றார். (தொடர்ச்சி 9ம் பக்கத்தில்)

# FOUR TAMIL-CANADIANS HAVE BEEN ELECTED IN ONTARIO'S 2022 MUNICIPAL ELECTIONS

# ஒன்றாரியோ மாகாண நகரசபை மற்றும் கல்விச் சபைகளுக்கான 2022 தேர்தல்களில் நான்கு தமிழ் பேசும் உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர்



கடந்த 24ம் திகதி நடைபெற்ற ஒன்றாரியோ மாகாணத்தின் நகரசபை மற்றும் கல்விச் சபை ஆகியவற்றுக்கான தேர்தல்களில் நான்கு தமிழ் பேசும் உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர். இந்த நால்வரில் மூன்று பெண் உறுப்பினர்களும் ஒரு ஆணும் அடங்குகின்றார்கள். இதில் மூவர் ரொறன்ரோ கல்விச் சபைக்கான உறுப்பினர்களாகவும் இன்னும் ஒரு பெண்மணியான யுனைத்தா நாதன் மார்க்கம் நகரசபையின் 7ம் வட்டார உறுப்பினராகத் தேர்தெடுக்கப்பட்டுள்ளார்.ஏனைய மூவரான யாழினி இராஜகுலசிங்கம்.(ஸ்காபுறோ வடக்கு) அனு ஸ்ரீஸ்கந்தராஜா (ஸ்காபுறோ வடக்கு) மற்றும் நீதன் சாண் .(ஸ்காபுறோ மத்தி) ஆகியோர் ரொறன்ரோ பிராந்திய கல்விச் சபை உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
*கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்றவர்கள்
*நம்பிக்கை நாணயத்திற்கு உத்தரவாதம்
குறைந்த வட்டியுடன் எவ்வளவு தொகை வேண்டும் என்றாலும் மிசிசாகாவிலும் பிறாம்ரனிலும் அமைந்துள்ள எமது அடவு மாளிகையை நாடுங்கள்.
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East (2nd fl) Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd. Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

JENITA AREVIN
BROKER
DOWNTOWN SPECIALIST
416.320.3201
JENITA@AREVIN.CA
ROYAL LEPAGE IGNITE REALTY, BROKERAGE
Royal LePage Ignite

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX REALTRON TEAM

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் சச்சிதானந்தன்

## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### வேலை வாய்ப்பு

**McCowan//Lawrence**
பகுதியில் வசிக்கும் 4 வயது-டைய பள்ளிச் சிறுவனை காரில் **school drop off and pick up** செய்ய, முன் அனுபவம் உள்ள பெண் வாகனத்துடன் தேவை.

**தொடர்புகளுக்கு:**
**(647) 572-2345**

### குழந்தை பராமரிப்பாளர் (BABY SITTER) தேவை

ஈற்றோபிக்கோ நகரில் உள்ள வீடொன்றில் 1 வயதுடைய ஆண் குழந்தையை வாரத்தின் 4-5 நாட்கள் வீட்டிலேயே தங்கியிருந்து பராமரிக்க பெண் ஒருவர் தேவை.
அனுபவம் விரும்பத்தக்கது.
சம்பளம் - $18/hr
தொடர்புகளுக்கு:- 416 844 4207
அல்லது 416 510 8727

### வேலைக்கு ஆட்கள் தேவை

Markham நகரில்
Woodbine & 14th Ave.
சந்திப்பிற்கு அருகில் அமைந்துள்ள உணவகத்திற்கு kitchen helper மற்றும் dish wash-er, part-time line cook & South Indian cooks உடனடியாக தேவை.
Female cook also needed.

Call Amar:
(416) 988-9518

### வேலைக்கு ஆட்கள் தேவை

**Downtown Toronto** ல் **John and Adelaide** சந்திப்பில் அமைந்துள்ள
**Fox on John Restaurant க்கு**
**Line cooks உடனடியாக தேவை.**
**$20/hr + Tips**
**Full Time.**
**Parking Available.**
**தொடர்புகளுக்கு:**
**647-494-5592**

### வேலை வாய்ப்பு

**Bathurst and Hwy 7**
பகுதியில்
மாலை நேரம் 3-11
(7 நாட்களும்)
இரவு 11-7 **midnight**
வேலைகளுக்கு ஆடகள் தேவை.
**தொடர்புகளுக்கு:**
**சங்கர் 416-305-0264**

### Renovation Workers Wanted

**Workers needed for the following jobs:**

- **Drywall Installation**
- **Painting**
- **Hardwood Installation**
- **Bathroom Reno**
- **Kitchen Reno**

**Call - Siva 416-706-8160**

STEELES PODIATRY CLINIC

கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

WE ACCEPT
- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

LIST OF SERVICES
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM,
DOCTOR OF PODIATRIC MEDICINE



5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
416.298.FOOT (3668)

கனடிய செய்திகள்
Canadian News

# ஸ்காபுறோவில் அமைந்துள்ள மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றத்தில் உதயன் சர்வதேச விருது பெற்ற பிரமுகர்கள்

கடந்த 15-10-2022 அன்று வெற்றிகரமாக நடைபெற்ற உதயன் சர்வதேச விருது விழாவில் வெளிநாடுகளுக்கு உரிய சர்வதேச விருதுகளைப் பெற்ற வெளிநாட்டுப் பிரமுகர்களான திருவாளர் சங்கரநாராயணன் (தமிழ்நாடு) தியாகராஜா நிரோஷ் (யாழ்ப்பாணம் இலங்கை) ஆகியோர். கனடா-ஸ்காபுறோவில் அமைந்துள்ள மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றத்திற்கு விஜயம் செய்து அங்கு வழிபாட்டு மன்றத்தின் சக்திகள் மற்றும் ஸ்தாபகர் சக்தி ஞானம்மா ஆகியோரால் வரவேற்கப்பெற்றனர்.



முதலில் வழிபாட்டு மன்றத்தின் ஸ்தாபகர் சக்தி ஞானம்மா அவர்கள் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். அவர் தனது உரையில் “நாம் அனைவரும் இறை பணியிலும் சமூகப்பணியிலும் ஈடுபட்டு உழைத்த வரும் பெரியோர்களை மதித்து அவர்கள் கூறுகின்ற நற்கருத்துக்களை பின்பற்றி இறையருள் மற்றும் வழிபாட்டு முறைகள் ஆகியவை பற்றி அறிந்து காள்ள வேண்டும் அடைய வேண்டும்” என்று கூறி அன்றைய விருந்தினர்கள் மற்றும் உதயன் ஆசிரியர் ஆகியோர் நற்பணிகளை ஆற்றிவருகினர் என புகழாரம் சூட்டினார்.



தொடர்ந்து வெளிநாட்டு விருதுகளைப் பெற்ற வெற்றியாளர்கள் இருவரும் அங்கு உரையாற்றினார்கள். அவர்களுக்கு சக்தி ஞானம்மா அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

# ஸ்காபுறோ "ஶ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரிக்கு விஜயம் செய்த உதயன் விருது பெற்ற வெளிநாட்டுப் பிரமுகர்கள்




கடந்த 15-10-2022 அன்று வெற்றிகரமாக நடைபெற்ற உதயன் சர்வதேச விருது விழாவில் வெளிநாடுகளுக்கு உரிய சர்வதேச விருதுகளைப் பெற்ற வெளிநாட்டுப் பிரமுகர்களான திருவாளர் சங்கரநாராயணன் (தமிழ்நாடு) தியாகராஜா நி-ரோஷ் (யாழ்ப்பாணம் இலங்கை) ஆகியோர். கனடா - ஸ்காபுறோவில் அமைந்துள்ள “ஶ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரிக்கு விஜயம் செய்து அங்கு கல்லூரி நிர்வாகிகள் மற்றும் அதிபர் ஆசிரியைகள் ஆகியோரால் வரவேற்கப்பெற்றனர்.

ஆலயத்தின் பிரதம குருவும் கல்லூரியின் ஸ்தாபகருமான சிவஶ்ரீ விஜயகுமாரக்குருக்கள் மற்றும் அவரது பாரியார் மற்றும் பணியாளர்களும் அங்கு கூடியிருந்தனர்.

முதலில் சிரேஸ்ட ஆசிரியை திருமதி. கோதை அமுதன் அனை-வரையும் வரவேற்று உரையாற்றினார். அவர் தனது உரையில் “மாணவர்கள் பெரியோர்களை மதித்து அவர்கள் கூறுகின்ற நற்கருத்துக்களை பின்பற்றி தங்கள் வாழ்க்கையில் முன்னேற்றத்தை அடைய வேண்டும்” என்று கூறி அன்றை விருந்தினர்கள் மற்றும் உதயன் ஆசிரியர் ஆகியோர் நற்பணிகளை ஆற்றிவருகினர் என புகழாரம் சூட்டினார்.

தொடர்ந்து பிரதம குரு மற்றும் விருது பெற்றவர்கள் இருவர் ஆகியோர் உரையாற்றினர்.

அங்கு உரையாற்றிய பேராசிரியர் சங்கரநாராயணன் அவர்கள் மாணவர்கள் தங்கள் சமயத்தையும் மொழியையும் ஆர்வத்துடன் கற்றுத் தெளிந்து கொள்வதில் பின்நிற்கக் கூடாது என்று தெரிவித்து.



ஶ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயமும் ஶ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரியும் இந்தப் பணிகளை கனடாவில் ஆற்றிவருவது மெச்சத்தக்கது என்றார். தியாகராஜா நிரோஷ் அவர்களும் தனது கருத்துக்களை மாணவர்கள் விளங்கும் அளவிற்கு பகிர்ந்து கொண்டார்.

# உதயன் கதிரோட்டம்

## அரசாங்கத்தோடு இணைந்த பயணிக்க தயார் என அடிக்கடி சம்பந்தர் சொல்வது சிங்களத் தலைவர்கள் யாரையாவது காப்பாற்றுவதற்காக மட்டுந்தானா?

அரசாங்கத்தோடு இணைந்த பயணிக்க தயார் என அடிக்கடி சம்பந்தர் ஐயா மற்றும் சுமந்திரன் ஆகியோர் கடந்த பல தசாப்தங்களாக அடிதக்கடி சொல்லி வருவது சிங்களத் தலைவர்கள் யாரையாவது காப்பாற்றுவதற்காக மட்டுந்தான் என்பது தமிழ் மக்கள் அனைவரும் அறிவார்கள் எனவே இனிமேல் அவ்வாறு மறந்தும் கூறிவிடாதீர்கள் என்று அவர்களைப் பார்த்து ஒவ்வொரு தமிழ் பிரஜையும் தெரிவிக்க வேண்டும் என்பது தற்போதைய அரசியல் "தேவை"யாக உள்ளது.

இவ்வாறு நாம் எழுதுவதற்கு பல காரணங்கள் அன்று தொடக்கம் இன்று வரை தமிழ்த் தலைமைகள் கடைப்பிடித்துவரும் அரசியல் "சாணக்கியத்தின்" மூலம் புலனாகியுள்ளன.

பல வருடங்களுக்கு முன்னர் ரணில் பிரமராக பதவி வகித்த நேரத்தில் அவருக்கு ஏதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்ட போது. " தமிழ் மக்களின் நன்மை கருதி நாம் அரசாங்கத்தோடு சேர்ந்தே பயணிக்க விரும்புகின்றோம்" என்று கூறிய தமிழர் தரப்பு அப்போது ரணிலின் அரசியல் "தலையை" காப்பாற்றிக் கொள்ள உதவியது.

தொடர்ந்து சில வாரங்களுக்கு முன்னரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பதவியையும் எம்பி பதவியையும் " கட்டிப் பிடித்தபடி உள்ள" சம்பந்தர் அவர்கள் அரசாங்கத்தோடு சேர்ந்த பயணிக்க விரும்புகின்றோம்" என்று தெரிவித்துள்ளமை எமது மக்கள் அறிந்த ஒன்றே.

இவ்வாறாக தலைவர் சம்பந்தர். சுமந்திரன் மற்றும் ஸ்ரீதரன் சிவஞானம் ஆகிய மூவரும் சேர்ந்து ஏனைய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு "மூளைச் சலவை" செய்து ஒவ்வொரு நகர்விலும் ரணில் போன்ற புல்லுருவிகளை காப்பாற்றுவது அவர்களுக்கு வாக்களித்த தமிழ் வாக்காளர்கள் நன்கு கண்டு கொண்ட அவர்களது தந்திரமான அரசியல் நகர்வுகளே ஆகும்.

ஆனால் தொடர்ச்சியாக தமிழ் மக்களுக்கு எந்த நன்மையும் கிட்டாமல் சிறைகளின் வாடும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு எவ்விதமான மாற்றங்களும் நிகழாமல் இந்த மூன்று அரசியல் தலைவர்களுக்கு மட்டுமே நன்மைகள் கிட்டுகின்றன என்பது தெளிவாகின்றது

மேலும் "இன்றைய தமிழ்த் தலைமைகளிடம் அரசியல் தீர்வுகுறித்த எந்தவிதமான யோசனைகளும் அவர்கள் கைவசம் இருக்கின்றதா அன்றி அவர்களிடம் ஏதாவது .தீர்வுப் பொதிகள் உள்ளனவா என்று பார்த்தாலும் அவையும் இல்லை என்றே பதில் வருகின்றது. மாறாக தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்று காலத்தைக் கடத்திய வண்ணம் அரசாங்கத்திடமிருந்த சகல சலுகைகளையும் சன்மானங்களையும் பெற்றுக்கொள்வது மட்டும் தான் அவர்களின் "கைவண்ணம் என்பது நன்கு புலனாகின்றது.

ஆனால் தங்களிடம் தீர்வுத் திட்டங்கள் உள்ளதாக பொய்களைக் கூறி வந்த மாவை சேனாதிராஜா போன்றவர்கள் தற்போது பதவியில் இல்லை. என' வே இந்த மூன்று பேர் மட்டுமே இவ்வாறு தொடர்கின்றார்கள்.

கடந்த காலங்களில் தங்களிடம் நல்ல திட்டங்கள் இருப்பதாக கூட்டங்களிலும் ஊடகங்களிலும் கூறினாலும்கூட அந்த ஆவணத்தை காட்டுவதற்கு அவர்கள் தயாராக இல்லை. மக்களை முட்டாள்களாக்கி தொடர்ந்தும் "கதிரை அரசியல்" நடத்த முனைந்தனர் இவர்கள்.

அத்துடன் அவர் நின்றுவிடவில்லை இன்றைய தமிழ் தலைமைத்துவ பரம்பரை தமிழர் அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொள்ள வேண்டும். உழைப்பதற்கல்ல அரசியல் மக்களின் சேவைக்கே அரசியல் தேவை என்ற அடிப்படையில் மக்களுக்காக இதய சுத்தியுடன் பணியாற்றக் கூடியவர்களின் அரசியல் பிரவேசமே இன்றைக்குத் தேவை. ஏனெனில் இன்றைய தமிழ்த் தலைமைத்துவங்கள் அநாதைகளாக்கப்பட்டுள்ள தமிழ்ச் சமூகத்தை மீட்கும் நிலையில் இல்லை என்பதும் நன்கு புலனாகின்றது

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## இரண்டு வாரங்களுக்கு முன்னர் மார்க்கம் நகரில் விபத்தொன்றில் கொல்லப்பட்ட தமிழ்ச் சகோதரர்களின் தாயாரின் உடல் நிலையில் முன்னேற்றம்





இரண்டு வாரங்களுக்கு முன்னர் மார்க்கம் நகரில் விபத்தொன்றில் கொல்லப்பட்ட தமிழ்ச் சகோதரர்களின் தாயாரின் உடல் நிலையில் முன்னேற்றம் காணப்படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக எமது செய்தியாளர் அறிவித்துள்ளார்.

கனடாவில் கடந்த 12-10-2022 அன்று புதன்கிழமை இடம்பெற்ற விபத்தில் யாழ்ப்பாணம் இணுவில் கிராமத்தைப் பூர்விகமாக கொண்ட தமிழர்களான ஒரு ஆண் மற்றும் பெண் ஆகிய இரண்டு சகோதரர்கள் உயிரிழந்த நிலையில் சம்பவத்தில் காயமடைந்த அவர்கள் தாயாரின் உடல்நிலை குறித்த தகவல் வெளியாகியுள்ளது. விபத்தில் பாரிய வாகனம் ஒன்றை செலுத்தி வந்த சாரதி ஒருவனின் கவனயீனம் இந்த அன்புச் சகோதரர்களை அந்த இடத்திலேயே அதுவும் அவர்களது தாயாருக்கு முன்பாகவே உயிரிழக்கச் செய்தமை கனடாவெங்கும் சோக அலைகளை ஏற்படுத்தியது இங்கு குறிப்பிடத்தக்கது இந்த மிகவும் கொரூரமான வாகன விபத்து மார்க்கம் நகரில் எல்சன் மற்றும் மார்க்கம் நகரில் இடம்பெற்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது

அந்த விபரத்தில் பாரிய ட்ரக் வண்டி ஒன்றும் தமிழக் குடும்பம் ஒன்று பயணித்த கார் ஒன்றும் மோதி நடந்த விபத்தில் பதீரனா புவேந்திரன் (21) மற்றும் அவரின் சகோதரி நெலுக்சனா புவேந்திரன் (23) இருவரும் உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் படுகாயமடைந்த இவர்களின் தாய் ஸ்ரீரதி சண்முகநாதன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு தொடச்சியாக சிகிச்சை வழங்கப்பட்ட பராமரிக்கப்பட்டு வருகின்றார். . இது தொடர்பில் உயிரிழந்த பதீரனாவின் உறவினர்கள் அண்மையில் பத்திரிகையாளர்களிடம் கூறுகையில், பதீரனா மற்றும் நெலுக்சனாவின் மரணத்தை என்னால் நம்பமுடியவில்லை. சிகிச்சையில் உள்ள ஸ்ரீரதி தேறி வருகிறார், உடல்நிலை மேம்பட்டு வருகின்றது என மருத்துவமனை தெரிவித்ததாக கூறியுள்ளார்.

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
Canadian Tamils Remembrance Organization
www.tamilremembrance.com, CTRO@tamilremembrance.com - (647)-619-3619

### அறிவித்தல்.

**மாவீரர் பெற்றோர் குடும்ப மதிப்பளிப்பு நாள்-20.11.2022.**

மாவீரர் பெற்றோர் குடும்ப மதிப்பளிப்பு நாள் நினைவேந்தல், எதிர் வரும் 20.11.2022 ஞாயிற்றுக் கிழமை நடைபெறும் என்பதைக் கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம் அறியத் தருகின்றது.

மாவீர்களுக்கான வீர வணக்க நினைவேந்தல்,காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகி மதியம் 2.00 மணி வரை தொடர்ந்து நடை பெறும்.

மாவீர்களின் பெற்றோர்கள், குடும்பத்தினர், உணர்வாளர்கள், செயற்பாட்டாளர்கள், தமிழ் ஆர்வலர்கள், தன்னார்வத் தொண்டர்கள் அனைவரும் இந்த நாளில் ஒன்றிணைந்து நின்று மாவீரர்களை நினைவேந்துவோம்.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்.
தொடர்பு இலக்கம்: 647 619 3619.
CTRO@tamilremembrance.com

மண்டப முகவரி.
Metropolition Centre.
3840 Finch Ave. East. M1T 3T4.

# மன்னார் மடு வை சேர்ந்த மாணவி அகில இலங்கை ரீதியில் சாதனை

இலங்கை செய்திகள்
Sri Lanka News

## குவியும் பாராட்டுக்கள்!




அகில இலங்கை ரீதியில் இடம்பெற்ற Taekwondo போட்டியில் வெள்ளிப் பதக்கம் பெற்று வட மாகாணத்திற்கும், மன்னார் மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார் ஜெகதீஸ்வரன் ஜகி என்ற மாணவி.

இலங்கை பாடசாலைகளுக்கான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகள் தற்போது இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் கேகலை வித்தியாலயத்தில் இடம்பெற்று வருகின்ற தேசிய மட்ட Taekwondo போட்டியில் பெண்கள் பிரிவில் மன்/தட்சணாமருதமடு மகா வித்தியாலய மாணவி ஜெகதீஸ்வரன் ஜகி இவ்வாறு வெள்ளிப் பதக்கம் பெற்று குறித்த பாடசாலைக்கும், மடு கல்வி வலயத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

மேலும் ஆண்கள் பிரிவில் மாணவன் ற.காந்தரூபன் வெண்கலப் பதக்கம் பெற்று சாதித்துள்ளார்.

தட்சணாமருதமடு என்ற கிராமத்திலிருந்து சென்று தேசியளவில் சாதித்துள்ள குறித்த மாணவி மற்றும் மாணவருக்கு சமூக வலைத்தளங்களில் பாராட்டுகள் குவிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

- மன்னார் நிருபர் (23-10-2022)

# அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்! அருட்தந்தை சக்திவேல்




"பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கொடூரம் காரணமாக மிக நீண்ட காலமாக சிறை வாழ்வை அனுபவித்து வரும் ஏனைய அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படுவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்" என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஞாயிற்றுக்கிழமை (23) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, "தமிழ் அரசியல் கைதிகளில் நால்வர் கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதியின் தலையீட்டினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களின் விடுதலையில் விடுதலையானோரும், அவர்களின் குடும்பத்தினரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பும் மகிழ்வதோடு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கொடூரம் காரணமாக மிக நீண்ட காலமாகச் சிறை வாழ்வை அனுபவித்துவரும் ஏனைய அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படுவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

அரசியல் கைதிகளில் 8 பேர் ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படவுள்ளனர் என்று ஆரம்பத் தகவல்கள் ஊடகங்களில் வெளி வந்தாலும் இறுதியில் நால்வர் மட்டுமே விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலை செய்வதாக பெயர் குறிப்பிட்டுள்ள ஏனையோரையும் விடுதலைக்கான தடைகளை நீக்கி அவசரமாக விடுவிக்க ஆவன செய்திடல் வேண்டும்.

விடுதலை செய்யப்பட்டவர்களில் வீரக்குமார் ராகுலன் (மட்டக்களப்பு), ஜெபநேசன் (மன்னார்), ராமநாதன் நவதீபன் (மாத்தளை) மூவரும் 15 வருடங்களுக்கு மேலாக சிறை வாழ்வை அனுபவித்துள்ளதோடு சத்திவேல் இலங்கேஸ்வரன் (வவுனியா) 23 வருட சிறை வாழ்வை அனுபவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் வாழ்வைப் பறித்து வாழ்வை கொலை செய்ய முடியுமே தவிர வாழ்வைக் கொடுக்க முடியாது என்பது கடந்த 43 வருட கால தமிழர்களின் அனுபவமாகும்.

இத்தகைய கொடூர சட்டத்துக்கு எதிராக அது கொண்டுவரப்பட்ட 1979 இல் இருந்து தமிழர்கள் குரல் கொடுப்பதோடு, தற்போது அதன் கொடூரத்தை உணர்ந்த தெற்கின் சிங்களவர்களும் குரல் கொடுக்கின்றனர். சர்வதேச அமைப்புக்களும் குரல் கொடுக்கின்றன.

இந்தநிலையில் அதனை மாற்றுவதற்கு இன்னும் ஆட்சியாளர்கள் ஆயத்தமாக இல்லை என்பது அவர்களின் அரசியல் கொடூர முகத்தையே வெளிப்படுத்துகின்றது.

இதனைப் பாதுகாப்புக் கவசமாக வைத்துக் கொண்டே அரசியல் செய்ய முனைகின்றனர். பலமான மக்கள் எதிர்ப்பே இதற்குத் தேவை. இவ்வேளையில் தமிழ் அரசியல் தலைவர்களுக்கும் முக்கியமான வேண்டுகோள் விடுக்கின்றோம்.

ஜனாதிபதியால் தண்டனைக் கைதிகளுக்கே விடுதலை கொடுக்க முடியும். அவ்வாறே நீதிமன்றத் தண்டனைக் கைதிகளையே ஜனாதிபதி விடுதலை செய்துள்ளார்.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பு எனப் பொது வெளியில் கூறி அரசியல் கைதிகளுக்கு மூன்றாவது தண்டனையையும் கொடுக்க வேண்டாம்.

நீதிமன்றம் தண்டனை கொடுத்து, ஜனாதிபதி பொது மன்னிப்பு எனக் கூறி, அதே கூற்றைத் தமிழ் தலைமைகள் மீளக் கூறுவது என்பது அரசியல் கைதிகளைக் குற்றவாளிகள் எனப் பகிரங்கமாகக் கூறி அவமானப்படுத்துவதாகவே அமையும்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்க வேண்டும் என்பது பொதுக் கோரிக்கையாக இருக்கின்றது. அதனை ஆட்சியாளர்கள் எப்போது நீக்குவார்களோ தெரியாது. அரசியல் கைதிகள் மிக நீண்ட காலமாகத் தங்கள் இளமையைச் சிறையில் அடைந்துள்ளனர்.

இன நல்லிணக்கம் கருதி அமைச்சரவை, சட்டமா அதிபர் திணைக்களத்தோடு கதைத்து அரசியல் கைதிகள் மீது தொடுத்துள்ள வழக்குகளை மீளப்பெறுவதன் மூலம் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யலாம்.

அதனைத் தமிழ் அரசியல் தலைமைத்துவங்கள் வலியுறுத்த வேண்டும். அதுவே அரசியல் கைதிகளுக்குக் கௌரவமாக அமையும். இன நல்லிணக்கத்துக்கும் அடித்தளமாகும்" என்றுள்ளது.

(23-10-2022)

# யாழ் பொலிகண்டி பகுதியில் 30 வருடங்களுக்கு மேலாக முகாம்களில் வசித்து வரும் மக்களின் கோரிக்கை

## - சொந்த நிலம் இருந்தும் அகதி வாழ்க்கை



யாழ் மாவட்டம் பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பொலிகண்டி பகுதியில் 30 வருடங்களுக்கு மேலாக நிலவன், பாலாவி, போன்ற அகதிகள் முகாம்களில் வசித்து வரும் குடும்பங்களை மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையிலான குழுவினர் சனிக்கிழமை (22-10-2022) சந்தித்து கலந்துரையாடி அவர்களின் இன்னல்களை கேட்டறிந்தனர்.

இதன் போது அங்கு வசிக்கும் குடும்பத்தினர் கருத்துத் தெரிவிக்கும் போது, யுத்தம் காரணமாக பலாலிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து 30 வருடங்கள் கடந்து விட்டது அதுமட்டுமல்லாமல் யுத்தம் முடிவுக்கு வந்து 12 வருடங்களாகிவிட்டது.

பல இடங்களிலும் உள்ள அகதி முகாம்கள் மூடப்பட்டு அந்த மக்கள் தங்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர். ஆனால் பலாலிப் பகுதியில் எமக்கு சொந்தமான காணிகள் இராணுவத்தினர் வசம் உள்ளது. அதன் காரணமாகவே இன்னமும் நாங்கள் எமது காணிகளில் மீள் குடியேற்றம் செய்யப்படவில்லை.

கிட்டத்தட்ட 75க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தனியார் காணிகளில் 30 வருடங்களாக குடிசைகளில் வாழ்ந்து வருகிறோம். இந்த அகதி வாழ்க்கையில் எமது மூன்று தலைமுறையில் எந்த முன்னேற்றங்களும் இல்லை. எமது பிள்ளைகளுக்கு ஒழுங்கான கல்வி, உணவு, உடை, உறைவிடங்கள் இல்லை. காணி நிலம் இருந்தும் அகதியாக வாழும் வாழ்வை நினைத்து மன நோயாளிகளாக மாறும் நிலையில் உள்ளோம்.

இனி வரும் மழை காலங்களில் எமது வீடுகள் தண்ணீரில் மிதக்கும் .உறவினர்கள் வீடுகளிலும், கோவில்களிலும் வசிக்க தயாராகி விட்டோம். நாங்கள் கண்ணீர் விட்டு கதறி அழுது ஆர்ப்பாட்டங்கள் செய்து பார்த்தும் எங்களது காணிகளை இராணுவத்தினரிடம் இருந்து மீளப் பெற முடியாமல் உள்ளது.

எமது அடுத்த தலைமுறை எவ்வாறு வாழப் போகிறார்களோ தெரியவில்லை .திருமண வயதில் உள்ள பிள்ளைகளுக்கு வழங்குவதற்காகக் கூட எம்மிடம் சொந்தமாக காணித் துண்டுகள் இல்லை.

யுத்தம் முடிந்த பின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மக்கள் எவ்வளவோ சிரமத்தின் மத்தியில் ஓரளவிற்கு எழுந்து விட்டார்கள். எம்மால் இந்த அகதிக் குடிசையிலிருந்து வெளியே வர இயலாமல் உள்ளது. எமது பரம்பரைக் காணிகளில் படையினர் தென்னை மரம், வாழை, உட்பட பலன் தரும் மரங்களை உருவாக்கி அனுபவித்து வருகிறார்கள். நாங்கள் குடிசைகளில் நாதியற்ற இனமாக பஞ்சம் பசி, பட்டினி, நோய்களோடு, வாழ்ந்து வருகிறோம். என்று கண்ணீருடன் தெரிவித்தார்கள்.

இது தொடர்பாக மக்களிடம் கருத்து தெரிவித்த மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான பணிப்பாளர் ஜாட்சன் பிகிராரோ, அனைத்து ஆவணங்களும் இருக்கும் பட்சத்தில் உங்களுடைய காணிகளில் மீள்குடியேறி வசிப்பதற்கு நீங்கள் உரித் துடையவர்கள். உங்களுடைய உரிமைகளை எவருக்காகவும் விட்டுக் கொடுக்கத் தேவையில்லை. மக்கள் ஒற்றுமையாக ஜனநாயக ரீதியில் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு எமது நிறுவனம் ஒத்துழைப்பு வழங்கும்.

கடந்த காலங்களில் இரணைதீவு, மன்னார் முள்ளிக்குளம், பகுதிகளில் பாதுகாப்பு பிரிவினர் அபகரித்து வைத்திருந்த மக்களின் காணிகளை மக்கள் ஒற்றுமையாக குரல் எழுப்பி பெற்றுக் கொண்டது. அதற்காக தமது நிறுவனம் வழங்கிய ஒத்துழைப்புகள் பற்றி தெரிவித்திருந்தார்.

அத்துடன் சில தினங்களுக்கு முன்னர் மெசிடோ நிறுவனத்தால் உங்கள் குடும்பங்களுக்கு 5600 ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(23-10-2022)




இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னார் பிரதேச செயலக பிரிவில் உள்ள வசந்தபுரம் கிராமத்தில் மக்கள் போராட்டம் முன்னெடுப்பு

வடக்கு-கிழக்கு மக்களுக்கு கௌரவமான அரசியல் தீர்வை கோரும் பயணத்தில் 85 வது நாள் கவனயீர்ப்பு நிகழ்வு திங்கட்கிழமை (24) காலை 10.30 மன்னார்-தலைமன்னார் பிரதான வீதி, பேசாலை வசந்தபுரம் கிராமத்தில் இடம் பெற்றது.

குறித்த 100 நாள் செயல் முனைவின் 85 ஆம் நாள் போராட்டத்தில் வசந்தபுரம் கிராமத்தில் உள்ள பெண்கள், ஆண்கள், இளைஞர்கள், மற்றும் சிவில் அமைப்பு பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

"வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்" "நாங்கள் நாட்டை துண்டாட வோ" தனியரசு கேட்கவில்லை. இலங்கை நாட்டுக்குள் கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வை கேட்கிறோம்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும் "13வது திருத்தச் சட்டமானது அரசியலமைப்பு ரீதியாக அதிகாரப் பரவலாக்க துக்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது.



பெண்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப்போம்" எங்கள் நிலம் எமக்கு வேண்டும்,நடமாடுவது எங்கள் உரிமை, பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை, ஒன்று கூடுவது எங்கள் உரிமை, மத வழிபாடு எங்கள் சுதந்திரம், எமது மத தளங்களின் புனிதத்தை கொச்சை படுத்தாதே, இந்து மத ஆலயங்களின் இடங்களை திட்டமிட்டு சுபீகரிக்காதே என பல கோரிக்கைகளை முன் வைத்தனர்.







**- மன்னார் நிருபர் (24-10-2022)**

# மன்னார் பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தரின் நேர்மையான செயல்

மன்னார்-மதவாச்சி பிரதான வீதி, தள்ளாடி பகுதியில் உள்ள வீதியில் பணம் உட்பட ஆவணங்களுடன் கண்டெடுத்த பணப்பையை பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உரியவரிடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு தனது நேர்மையை காண்பித்த சம்பவம் மன்னாரில் இடம் பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில், திங்கட்கிழமை (24) காலை 6 மணியளவில் மன்னார் தள்ளாடி வீதியில் பொலிஸ் உத்தியோகத்தர் சமிந்த திலக்குமார (இல. பி.எஸ். 57943) என்பவர் ஒரு பணப்பையை கண்டெடுத்துள்ளார்.



அவ் பணப்பையில் பத்தாயிரம் ரூபாவும் 2 மோட்டார் சைக்கிள் ஆவணங்களும் அடையாள அட்டை ஏ.ரி.எம் காட் பெட்ரோல் காட் என்பன காணப்பட்டுள்ளது.

இவற்றை பொலிஸ் பொறுப்பதிகாரி இடம் ஒப்படைக்கப்பட்டு அவ் பண பைக்குள் இருந்த தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உரியவரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இவ் பணப்பையை தொலைத்தவர் மன்னாரில் ஒரு பிரபல பாடசாலையின் உயர்தர வகுப்பு மாணவன் என்றும் அவர் மன்னார் மூர் வீதியைச் சேர்ந்த சிவசம்பு வர்மியன் என்றும் இனம் காணப்பட்டுள்ளார்.



பின் இவர் மன்னார் பொலிஸ் பகுதிக்கு அழைக்கப்பட்டு பணப்பை சரி பார்க்கப்பட்டு மன்னார் உதவி பொலிஸ் அத்தியட்சகர் பிரபாத் விதானகே மற்றும் மன்னார் பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் மஸ்இம்புள்ள முன்னிலையில் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் உரியவரிடம் ஒப்படைக்க பட்டது.

இவ் பொருளை கண்டெடுத்த பொலிஸ் உத்தியோகத்தரை அதிகாரிகள், உரிமையாளரும் பாராட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர் (24-10-2022)**

MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinccanada.com



உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker
Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4



# போதைப்பொருளுக்கு எதிராகப் படைத்தரப்பு?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

**யா**ழ் மாவட்டத்தில் அதிகரித்துள்ள போதைப் பாவனை தொடர்பில் பலாலி படைத் தலைமையகம் ஒரு செய்திக் குறிப்பை வெளியிட்டிருந்தது.... "வடக்கில் இராணுவத்தினரால் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது கஞ்சா தொகையாகக் கைப்பற்றப்பட்டது. இந்தியாவிலிருந்து யாழ்ப்பணப் பகுதிக்கு மிகவும் பிரமாண்டமான முறையில் போதைப்பொருள் கடத்தல்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில் இளம்சந்ததியினரும் அவற்றிற்கு அடிமையாகின்ற தன்மையானது வெகுவாக அதிகரித்துள்ளது. அந்த வகையில் இந்த துர்ப்பாக்கிய நிலையினை இல்லாதொழிப்பதனை நோக்கமாகக் கொண்டு யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விஜேயசுந்தர அவர்களினுடைய தலைமையில் விசேட படைப் பிரிவானது உருவாக்கப்பட்டு விசேட சோதனை நடவடிக்கைகள் மற்றும் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு அதன் ஊடாக யாழ். மாவட்டத்தில் போதைப்பொருள் கடத்தல்களை தடுத்தல், கைதுசெய்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அதனுடன் தெடர்புள்ள நபர்களை நீதி முன்நிறுத்துதல் போன்ற செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன".

இவ்வாறு அச்செய்திக் குறிப்பில் காணப்படுகிறது. அதாவது முடிவில் படைத்தரப்பும் போதைப் பொருளுக்கு எதிராக களத்தில் இறங்கிவிட்டது என்று பொருள். தமிழ் மக்கள் அழைத்தாலும் அழைக்காவிட்டாலும் படைத்தரப்பு அவ்வாறு இறங்கும். ஏற்கனவே எஸ்.டி.எப் களத்தில் இறங்கிவிட்டது. படைத்தரப்பு இயற்கை அனர்த்தக்கங்களின் போதும் பெரும் தொற்று நோயின் போதும் களத்தில் இறங்கியது. இலங்கைத் தீவில் மேலிருந்து கீழ்நோக்கிய மிகப் பலமான நிறுவன கட்டமைப்பை படைத்தரப்பு கொண்டிருக்கிறது. இலங்கை தீவிலேயே அதிக ஆளணியையும் அதிக வளங்களையும் கொண்ட அரசு உபகரணம் அதுதான். எனவே இது போன்ற நடவடிக்கைகளில் அரசாங்கம் அவர்களை ஈடுபடுத்தும்.

ஆனால் இங்குள்ள பிரச்சினை என்னவென்றால், தீவின் மொத்த படைக்கட்டமைப்பில் மூன்றில் இரண்டு பகுதி தமிழ் பகுதிகளின் நிலை கொண்டிருப்பதாக புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. தமிழ் கடல் பெருமளவுக்கு ஸ்ரீலங்கா கடற்படையின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது. நாட்டின் படைக் கட்டமைப்பின் மூன்றில் இரண்டு பகுதி நிறுத்தப்பட்டிருக்கும் தமிழ் பகுதிக்குள் அதிகளவு போதைப்பொருள் வினியோகமும் விநியோகமும் இருக்கிறது என்றால் அதற்கு அப்பகுதியை கட்டுப்படுத்தும் படைத்தரப்பும் பதில் கூற வேண்டும் என்று தமிழ் அரசியல்வாதிகள் கேட்கிறார்கள்.

அண்மையில் இது சம்பந்தமாக நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கருத்து தெரிவித்திருந்தார். மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான சுமந்திரன் பின்வருமாறு கூறியுள்ளார்... "இதனை சட்டரீதியாக தடுக்க வேண்டியவர்களே அதற்கு உடந்தையாக இருப்பது தெரிகிறது. அது சம்பந்தமாக மிக உயர்ந்த மட்டத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும்". அதாவது போதைப்பொருள் வலை பின்னலுக்கும் குற்றவாளிகள் தப்பிச் செல்வதற்கும் படைத்தரப்பு அல்லது காவல்துறையின் மீது அவர் மறைமுகமாக குற்றம் சாட்டுகிறார். இப்படிப்பட்ட ஒரு பின்னணிக்குள் படைத்தரப்பு போதைப் பொருளுக்கு எதிராக களமிறங்கியிருக்கிறது.

அவர்கள் களமிறங்குவதற்கு முன்னரே கடந்த சில வாரங்களாக தமிழ்ப் பகுதிகளில் போலீஸும் அதிரடிப் படையும் ஆங்காங்கே போதைப் பொருள் வலைப்பின்னலுக்கு எதிராக முன்னெடுத்துவரும் முறியடிப்பு நடவடிக்கைகள் தொடர்பான செய்திகள் ஒப்பிட்டுளவில் அதிகரித்த அளவில் வெளிவருகின்றன. குறிப்பாக போதைப்பொருள் பாவனையாளர்களை கைது செய்வது, விநியோகஸ்தர்களைக் கைது செய்வது தொடர்பான செய்திகள் அடிக்கடி வெளிவருகின்றன. கைப்பற்றப்பட்ட போதை பொருட்களோடு, போதை மாத்திரைகளோடு போலீசார் காட்சியளிக்கும் படங்களும் ஊடகங்களில் பிரசுரிக்கப்படுகின்றன.

இச்செய்திகளை தொகுத்துப் பார்த்தால் போதைப் பொருளுக்கு எதிரான முறியடிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டுள்ளதான ஒரு தோற்றம் நமக்கு கிடைக்கும்.

ஆனால் அரசின் சட்டம் ஒழுங்கைப் பேணும் அமைப்புகளால் மட்டும் கட்டுப்படுத்தக்கூடிய ஒரு விடயம் இதுவல்ல என்பதனை நான் ஏற்கனவே பல தடவை எனது கட்டுரைகளில் சுட்டிக்காட்டியுள்ளேன். தமிழ் மக்களின் தேசிய இருப்பை சிதைக்கும் உள்நோக்கத்தோடு போதைப்பொருள் விநியோகம் திட்டமிட்டு ஊக்குவிக்கப்படுவதாக ஒரு சந்தேகம் பரவலாக உண்டு. சுமந்திரனும் சிறீதரனும் கூறுவது போல அது மேலிருந்து கீழ்நோக்கிய ஒரு திட்டமிட்ட செயலாக இருக்கக்கூடும். ஆனால் அதை எதிர்கொள்வதற்கு கீழிருந்து மேல் நோக்கிய ஒரு கட்டமைப்பை, சுய கவசங்களை தமிழ் மக்கள் கட்டியெழுப்ப வேண்டும். இதுதொடர்பில் கீழிருந்து மேல் நோக்கிய விழிப்பைக் கட்டி எழுப்ப வேண்டும்.

எனது நண்பர் ஒருவருக்கு ஒருவர் போல தமிழ் பகுதிகளில் கிராம மட்டத்தில் படைப்புலனாய்வுத் துறை வைத்திருப்பது போன்ற வினைத்திறன் மிக்க மேலிருந்து கீழ்நோக்கிய வலைப்பின்னல் நமது கட்சிகளிடமே கிடையாது.

தமிழ் இளையோர் மத்தியில் குறிப்பாக பாடசாலைகளில் போதைப்பொருள் பாவனை அதிகரிப்பதற்கு தனிய மேலிருந்து கீழ்நோக்கிய கட்டமைப்பை மட்டும் குறை சொல்லிக் கொண்டிருக்க முடியாது. மாறாக கீழிருந்து மேல் நோக்கிய சுயகவசங்களை தமிழ் மக்கள் கட்டி எழுப்ப வேண்டும். அதை தனிய மருத்துவர்களால் மட்டும் செய்ய முடியாது என்பதனைத்தான் அண்மை காலங்களில் கிடைக்கும் புள்ளி விவரங்கள் நமக்கு காட்டுகின்றன. மருத்துவர்கள் இதில் ஒரு பகுதி தான். மருத்துவ சிகிச்சைக்குமப்பால் ஒரு கூட்டுச் சிகிச்சை தேவைப்படுகிறது. அதை தனிய மருத்துவர்கள் மட்டும் செய்ய முடியாது. இளைய தலைமுறைக்கு தலைமை தாங்க இலட்சியப் பாங்கான தலைவர்கள் வேண்டும். இளைய தலைமுறையை இலட்சியத்தை நோக்கிச் செலுத்தப்பட்ட அம்புகளாக மாற்றினால் இது போன்ற துஷ்பிரயோகங்களுக்கு இடமிருக்காது. அரசியல்வாதிகள், செயற்பாட்டாளர்கள், அறிவுஜீவிகள், சமயப் பெரியோர், கல்விச் சமூகம், படைப்பாளிகள், ஊடகங்கள் என்று எல்லாத் தளங்களிலும் இருக்கக்கூடிய செயல்பாட்டாளர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து அதை ஒரு கூட்டுச் செயற்பாடாக முன்னெடுக்க வேண்டும். அக்கூட்டுச் செயற்பாட்டுக்கு அரசியல்வாதிகளோ அல்லது அரசியல் செயற்பாட்டாளர்களோ தலைமை தாங்க வேண்டும். ஆனால் அவ்வாறு தலைமை தாங்கும் தகுதியோ தரிசனமோ பெரும்பாலான மக்கள் பிரதிநிதிகளுக்கு இல்லை, பலமான குடிமக்கள் சமூகமும் இல்லை என்ற வெற்றிடத்தில்தான் போதைப் பொருள் பாவனை அதிகரிக்கிறது.

இதை ஒரு குற்றச் செயலாக மட்டும் கருதி அதற்குரிய முறியடிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது. மாறாக இதை ஒரு கூட்டுநோயாக ஒரு பண்பாட்டு வெற்றிடமாக, ஒரு அரசியல் தலைமைத்துவ வெற்றிடமாக, உள்ளூர் தலைமைத்துவ வெற்றிடமாக, ஆன்மீக வறட்சியாக, இன்ன பிறவாக தொகுத்துப் பார்க்க வேண்டும். இதில் தனிய மேலிருந்து கீழ் நோக்கிய கட்டமைப்பை மட்டும் குறை சொல்லிக் கொண்டிருக்காமல் ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு மத நிறுவனமும் ஒவ்வொரு பாடசாலையும் தங்களுக்குள்ள கூட்டுப் பொறுப்பை உணர வேண்டும். வீட்டில் பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையே இறுக்கமான பாசப்பிணைப்பு இருந்திருந்தால் இடையில் ஒரு போதைப் பொருள் வியாபாரி நுழைந்திருக்க முடியாது. பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் இடையே அல்லது பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே அல்லது பிள்ளைகளுக்கும் உள்ளூர் தலைவர்களுக்கும் இடையே அல்லது பிள்ளைகளுக்கும் சமயப் பெரியாருக்கு இடையே இடைவெளி அதிகரிக்கும்பொழுது இது போன்ற துஷ்பிரயோகங்களும் அதிகரிக்கும். அந்த இடைவெளி எங்கிருந்து வந்தது? என்று கண்டுபிடிக்க வேண்டும்.

அண்மையில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வடமாகாணப் பிரிவும் யாழ் போதனா வைத்தியசாலையின் சம்பந்தப்பட்ட பிரிவும் இணைந்து இது தொடர்பான அறிவுறுத்தல்களை வெளியிட்டிருந்தன. ஒரு பள்ளிக்கூடப் பிள்ளை போதைப்பொருள் பாவனையாளராக இருந்தால் அதை கண்டுபிடிப்பதற்கு வேண்டிய அறிகுறிகளை அவர்கள் விவரமாக தெரிவித்திருந்தார்கள். ஆனால் பிரச்சினை என்னவென்றால், ஒரு பிள்ளையிடம் அவ்வாறான மாற்றங்கள் ஏற்படுவதனை யார் கவனிப்பது? என்பதுதான். அதை பெற்றோரும் ஆசிரியர்களும்தான் கவனிக்க வேண்டும். வீட்டில் உள்ள மூத்த தலைமுறைதான் அதைச் செய்ய வேண்டும். ஆனால் இன்றைக்கு மூத்த தலைமுறையின் கவனத்தைக் கலைப்பதற்கு பல விடயங்கள் வந்துவிட்டன. குறிப்பாக திரைத் தொடர்கள், கைபேசிச் செயலிகள் போன்றவற்றை கூறலாம். ஒரு முதிய தலைமுறை திரைத்தொடர்களின் கைதியாகிவிட்டது. நடுத்தர வயதுக்காரரர்கள் கைபேசிகளின் கைதிகளாகி விட்டார்கள். இது பொழுதுபோக்கைகளின் காலம். மூத்த தலைமுறை பொழுதுபோக்கு சாதனங்களில் மூழ்கிக் கிடக்கும் பொழுது, இளைய தலைமுறை எங்கே போகிறது? என்ன செய்கிறது? யாருடன் தொடர்பை வைத்திருக்கின்றது? போன்றவற்றை கவனிப்பதற்கான நேரங்கள் குறைகின்றன. இவ்வாறான தொடர்ச்சியான அவதானிப்பும் கவனிப்பும் இல்லாத வெற்றிடத்தில்தான் போதைப் பொருள் நுழைகிறது. வாள்கள் நுழைகின்றன.

யாழ். போதனா மருத்துவமனை வெளியிட்டிருக்கும் அந்தப் பிரசுரத்தில் காணப்படும் குணக்குறிகளை தொடர்ச்சியாகக் கவனிப்பது என்று சொன்னால் பெற்றோர் பிள்ளைகளின் ஒவ்வொரு அசைவையும் தொடர்ச்சியாகக் கவனிக்க வேண்டும். அதாவது பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும்.பிள்ளைகளுக்கும் ஆசிரியருக்கும் இடையே அதிகபட்ச தொடர்பாடல் இருக்க வேண்டும். எனவே போதைப் பொருட்களுக்கு எதிரான சுயகவசங்களை இங்கிருந்துதான் கட்டி எழுப்ப தொடங்க வேண்டும்.

தமிழ் மக்கள் தங்களை ஒரு தேசம் என்று கூறுகிறார்கள். ஒரு தேசிய இனம் என்ற அடிப்படையில் தமக்கு சுயநிர்ணய உரிமை இருப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் ஒரு சமூகமாக, பலமான ஒரு திரட்சியாக இல்லை என்பதனை அண்மையில் எரிபொருள் வரிசைகளில் கண்டோம். இப்பொழுது அவர்கள் குடும்பமாகக்கூட இல்லையா என்று கேட்க வேண்டிய ஒரு நிலைமையை போதைப்பொருள் பாவனை ஏற்படுத்தியிருக்கிறதா?

**வீணாவின் கவிக்கணை**

அழகான தோட்டத்தில்
ஆயிரம் மலர்கள் ,
அதில்
பூத்து காய்ப்பது சில,
காய்ந்து மடிவது பல,
பூக்கும் பூக்களில்,
பூஜைக்கு போவது சில,
இறுதி ஊர்வலத்திற்கு
போவது பல,
காய்ந்த பூக்களோ,
சடலத்தின் மேல் விழுவதில்
இருந்து தப்பினோம் என்று
சந்தோஷப்படுவதுமில்லை
பூஜையறையில் புனிதமடைய
முடியவில்லையே என்று
சங்கடப்படுவதுமில்லை,
அதுபோலவே மனிதா,
இருப்பது ஒரு வாழ்க்கை,
அதை நீ பொக்கிஷம்
என உணர்ந்து,
அதன் வழி சென்று,
உன் மனம் போல அதை மாற்றிடு,
இல்லை இல்லை என்ற
சொல்லை, உதறித்தள்ளிடு,
இருப்பதை இழந்திடாமல்
வாழப்பழகிடு, உன் வெற்றி
என்னும் இலக்கை அடைந்திடு.

# தமிழ் மக்களே மீண்டும் ‘சொல்ஹெம் பொறி’



**வி.தேவராஜ்**
**மூத்த ஊடகவியலாளர்**

• **த**மிழ் மக்களும் தமிழர் விவகாரமும் புலம் பெயர் தமிழர்களும் முக்கிய துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தப்படப் போகின்றனர்

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப்பாலம் அமைக்கவென நோர்வேயின் சமாதானத் தூதுவராக எரிக்சொல்ஹெம் இலங்கையில் காலடி எடுத்து வைத்தார். இவரின் வரவுடன் இலங்கை மண்ணில் சமாதானம் மலர்ந்துவிடும் தமிழர் வாழ்வில் விடிவு விமோசனம் பிறந்துவிடும் என்ற “பரப்புரைகள்” சமாதானத்தை எதிர்பார்த்திருந்த இலங்கை மக்கள் மத்தியில் குறிப்பாக தமிழ் மக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்புகளைத் தோற்றுவித்தது. ஆனால் தென்னிலங்கை வழமைபோல் இவரது வரவை சந்தேகக் கண் கொண்டே நோக்கியது.

“சமாதானத் தூதுவர்” என்ற போர்வையில் “சமாதானப் பொறியாக” இந்தியா அமெரிக்கா உற்பட மேற்கத்தைய நாடுகளின் நிகழ்ச்சிநிரல்களுடன் இலங்கையில் காலடி எடுத்து வைத்த எரிக்சொல்ஹெம் இறுதியில் தமிழ்மக்களையும் அவர்களின் “சக்தி”யையும் அரசியல் அபிலாஷைகளையும் முள்ளிவாய்க்காலில் தள்ளிவிட்டவர் இவர்.

“சமாதானப் பொறியுடன்” அன்று வந்த எரிக்சொல்ஹெம் இன்று மீண்டும் இலங்கையில் “கால நிலைப்” பொறியாக வந்திறங்கியுள்ளார். அன்று ஆட்சியில் எதிரெதிர் அணியில் நின்ற தென்னிலங்கையின் அரசியல் கதாநாயகர்களான ரணில்விக்ரமசிங்கவும் - மஹிந்தராஜபக்ஷவும் இன்று அரசியலில் ஓரணியில் நிற்கின்றனர். ஒரு “தோற்றுப்போன” அரசை வைத்துக் கொண்டு நாட்டை நடத்த முடியாத நிலையில் உலக நாடுகளிடம் கையேந்தி நிற்கும் அரசியல் கூட்டாளிகளுக்கு “காலநிலை ஆலோசகர்” தேவையா என்ற கேள்வி எழும்புகின்றது.

யார் இந்த எரிக்சொல்ஹெம்? எவருடைய நலன்களுக்காக இவர் பணியாற்ற வந்துள்ளார் என்பதை பிரபல ஊடகவியலாளரான தராக்கி சிவராம் 2005 ஆம் ஆண்டு அவர் படுகொலை செய்யப்படுவதற்கு ஒரு சில நாட்களுக்கு முன் எழுதிய தனது பத்தியில் “சமாதானப் பேச்சுவார்த்தைக்கென எரிக்சொல்ஹெம் அடிக்கடி இலங்கை வந்து போவது என்பது சிங்களப் பேரினவாதிகளின் நலன்களுக்கு சேவை செய்வதாகவும் பங்களிப்பதாகவுமே அமைந்துள்ளது. எரிக்சொல்ஹெமின் ஒவ்வொரு இலங்கை வருகையின்போதும் இலங்கை அரசாங்கம் அர்த்தமுள்ள எந்த ஒரு விடயத்தையும் எமக்கு ஒருபோதும் வழங்காது என்ற உண்மையை நாம் எமது வீட்டுக்கு எடுத்து செல்ல வேண்டும்” என குறிப்பிட்டிருந்தார்.

தராக்கி சிவராமின் கூற்றுக்கு தமிழ் மக்கள் இன்றும் சாட்சி.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரச தரப்பான மஹிந்த ராஜபக்ஷ தரப்புடன் ஜெனிவாவில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை முறிவடைந்தது. இந்தப் பேச்சுவார்த்தையின்போது இலங்கைத்தரப்பு அடுத்த கட்ட பேச்சுவார்த்தைக்கான திகதியை தீர்மானித்துக் கொள்ள கோரினர். தமிழீழ விடுதலைப் புலிகளின் தரப்பில் அடுத்த கட்ட பேச்சுவார்த்தையின் போது அரசியல்விடயம் குறித்து பேசுவதாயின் இப்பொழுது மக்களின் வாழ்வாதாரம் குறித்துப் பேசவேண்டும் எனக் கோரினர். ஆனால் இலங்கைத்தரப்பு அடுத்த கட்ட பேச்சுவார்த்தைக்கான திகதியை தீர்மானிப்பதிலேயே விடாப்பிடியாக நின்றனர். இறுதியில் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்தது.

இதனை அடுத்து தமிழீழவிடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன் ரோயல் ஹோட்டலுக்குத் திரும்பிய வேளை ஹோட்டல்வாசலில் வைத்து அடுத்த கட்ட பேச்சுவார்த்தைக்கான திகதிகுறித்த உடன்பாட்டுக்கு வரவில்லையெனில் நீங்கள் கொழும்பு திரும்ப முடியாது எனத் தெரிவித்தார். என்னைக் கொண்டுபோய் கொழும்பில் விடுங்கள் வன்னிக்கு எவ்வாறு போவது என்பது எனக்குத் தெரியும் என்று தமிழ்ச் செல்வன் குறிப்பிட்டார்.

உண்மையிலேயே சமாதானத்தில் அக்கறை இருந்திருக்குமாயின் இலங்கைத்தரப்பு அரசியல் பேச்சு வார்த்தைக்கான திகதியுடன் மக்களின் வாழ்வாதாரம்குறித்தும் பேசியிருக்கலாம். சமாதானப் புறா இதற்கு வழிவகுத்திருக்கலாம்.

ஒஸ்லோ பேச்சுவார்த்தையின்போது தமிழீழ விடுதலைப் புலிகள் சமஷ்டிபற்றி பரிசீலிக்கத் தயார் எனக் கூறியபோது இணை அனுசரணை நாடுகள் மக்களின் வாழ்வாதாரம்குறித்து பேசவென பேச்சுவார்த்தையை திசை திருப்பின. சமாதானப் புறாவும் இசைந்தே இந்தத் தீர்மானத்திற்கு அவர்கள் வந்தனர்.

2009 இல் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டபின் 13 வருடங்களுக்குப் பிறகு “சமாதானப் புறாவான” “சமாதானப் பொறி” தற்போது “காலநிலை ஆலோசகர் பொறியாக” இலங்கையில் களம் இறக்கப்பட்டுள்ளார்.

“காலநிலை ஆலோசகர்” பதவிக்கு அப்பால் அவர் நிறையவே தமிழர் விவகாரம்குறித்தே பேசுகின்றார். அப்படியானால் அவருடைய நிகழ்ச்சி நிரல் காலநிலை அல்ல அதற்கு அப்பால் உள்ளது. அதனை நோக்கிய நகர்வில் முதலாவது வெற்றியை அவர் ஈட்டியுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் குறிப்பாக தமிழரசுக் கட்சி அவரது நிகழ்ச்சி நிரல்களுக்குள் உள்வாங்கப் பட்டுள்ளது.

கூட்டமைப்பின் பேச்சாளரும் எம்பியுமான எம்.ஏ சுமந்திரன் அவர்கள் தனக்கும் எரிக் சொல்ஹெமுக்கும் இடையிலான பத்து வருட அறிமுகம் தன்னை சந்திக்க வைத்ததாகக் குறிப்பிடுகின்றார். சாணக்கியன் எம்பி அந்த சந்திப்பில் கலந்து கொண்டமைபற்றிக் குறிப்பிடுகையில் அவர் அடிக்கடி நோர்வே சென்று வருபவர். அந்தத் தொடர்பு காரணமாக அவரை எரிக்சொல்ஹெம் சந்திக்க விரும்பி இருக்கலாம் என்று எம்.ஏ. சுமந்திரன் எம்பி ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். ஆனால் இந்த சந்திப்புக்கு கூறப்படும் காரணங்களுக்கு அப்பால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க - முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச ஆகியோரது நிகழ்ச்சி நிரல் பின்னணியாக இருப்பதற்கே கூடுதலான சாத்தியக் கூறுகள் உள்ளன எனலாம்.

மொத்தத்தில் “காலநிலை ஆலோசகர்” எரிக் சொல்ஹெம் அவர்கள் ரணில் விக்ரமசிங்க - மஹிந்த ராஜபக்ஷ அணியினர் உள் நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் முகம் கொடுக்கும் நெருக்கடிகளில் இருந்து அவர்களைக் காப்பாற்றும் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளார் என்று கூறுவதே பொருந்தும். இந்த வேலைத் திட்டத்தில் தமிழ் மக்களும் தமிழர் விவகாரமும் புலம் பெயர் தமிழர்களும் முக்கிய துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தப்படப் போகின்றனர் என்பதுமட்டும் உண்மையாகும்.

• ரணில் - மஹிந்த கூட்டுடன் எரிக் சொல்ஹெம் இணைவது இன்னொரு ஊழித் தாண்டவத்திற்கு வழிவகுப்பதாக இருக்கக் கூடாது.

• நோர்வேயின் சமாதானப் புறாவாக வந்து தமிழ் மக்களுக்கான சமாதானப் பொறிக் கிடங்கை வெட்டியவர் தற்போது தமிழ் மக்களையும் புலம்பெயர் தமிழர்களையும் ரணில் - மஹிந்த கூட்டாளிகளுக்காக இன்னொரு பொறிக்குள் தள்ள வந்துள்ளார்.

• இந்த கூட்டணியில் தமிழர் தரப்பு தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் இணைவதோ துணைபோவதோ தமிழ்மக்களை இன்னொரு முள்ளிவாய்க்காலுக்குள் தள்ளுவதாகவே அமையும்.

• தமிழ்த் தலைமைகளைப் பொருத்து மக்கள் ஆணை வழங்கி தம்மைத் தெரிவு செய்ததுடன் மக்களின் கடமை முடிந்துவிட்டது. தமிழ் மக்கள் சார்பில் முடிவுகளை மேற்கொள்ள தமக்கே உரிமை உள்ளது என்ற மனப் போக்கில் முடிவுகளை மேற் கொள்ளத் தலைப்பட்டுவிட்டனர்.

• எனவே தமிழ் மக்கள் இன்னொரு அழிவை நோக்கி இழுத்துச் செல்லப்படுவதற்கு முன் தம்மைத்தாமே காப்பாற்றிக் கொள்ள வேண்டும்.

Email : vathevaraj@gmail.com

வாகனம் ஓடும் பாதையோரம் திரண்ட பனிக்கட்டிக் குவியலை அகற்றுதல்

மூத்த குடிமக்கள் மற்றும் உடல்ரீதியான இயலாமை கொண்ட மக்களுக்காக

நவம்பர் 18 ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கவும்

mississauga.ca/windrow



311 ஐ அல்லது (நகர எல்லைகளுக்கு அப்பால்)
905-615-4311 ஐ அழைக்கவும்
TTY: 905-896-5151


MISSISSAUGA

# 22 ஏ (இப்போது 21 ஏ) மற்றொரு அரசியலமைப்பு மற்றும் அரசியல் நெருக்கடிக்கு வழிவகுக்கும்

**- மஹிந்த பத்திரன (தலைவர், இலங்கை செய்தியாளர் மன்றம்)**

அரசியலமைப்பின் 22வது திருத்தம் 21 ஒக்தோபர் 2022 அன்று நாடாளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது, ஆதரவாக 179, எதிராக 1 மற்றும் 40 க்கும் மேற்பட்ட நாடாளமன்ற உறுப்பினர்கள் வாக்களிக்கவில்லை. சனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வெற்றியைத் தொடர்ந்து 2015 இல் நிறைவேற்றப்பட்ட கருத்துமாறுபாட்டுக்குரிய 19ஏ வது திருத்தத்தின் மாதிரியாக, 22ஏ, நிறைவேற்று அதிகாரங்களைக் குறைப்பதற்கு உயர் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட சில கட்டுப்பாடுகளைத் தவிர, அதன் நோக்கத்திலும் கணிசமான அளவு வேறுபட்டதல்ல. 2015 இல் உயர் நீதிமன்றத்தின் பார்வைக்கு முரணாக, இம்முறை உயர் நீதிமன்றம் மக்களால் வழங்கப்பட்ட சனாதிபதி அதிகாரங்கள் தொடர்பான சட்டமூலத்தின் அரசியலமைப்புத் தன்மையை தீர்மானிக்கும் போது மிகவும் பகுத்தறிவுடன் செயல்பட்டதாகத் தெரிகிறது.

அரசியலமைப்பின் 19ஏ மற்றும் 22வது திருத்தங்களை அறிமுகப்படுத்துவதன் நோக்கம், 78 அரசியலமைப்பின் மூலம் சனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்துவது அல்லது கட்டுப்படுத்துவது ஆகும். இந்த நோக்கத்தை அடைவதற்காக, சபாநாயகரால் நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிவில் சமூக உறுப்பினர்கள் அடங்கிய அரசியலமைப்பு சபையை (**CC**) அமைக்க இரண்டு திருத்தங்களும் முன்மொழியப்பட்டுள்ளன. அந்த வகையில், அது நாடாளுமன்றத்திற்கு அதிகாரத்தை வழங்கவில்லை, மாறாக நாடாளுமன்ற உறுப்பினர் அல்லாதவர்களை உள்ளடக்கிய ஒரு குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கூடுதல் நாடாளுமன்றச் சபை, சட்டமன்றத்திற்கும் நிர்வாகத்திற்கும் இடையில் அமைந்து, இரண்டு உறுப்புகளுக்கு இடையில் இடைத்தரகராக செயல்படும் விதத்தில் உருவாக்கப்பட்டது.




தொடக்கத்திலேயே, "அரசியலமைப்பு சபை" என்ற பெயரே அதன் ஆணையின் அடிப்படையில் தவறாக வழிநடத்துகிறது என்பது கோடிட்டுக் காட்டவேண்டும். உலகில் பல நாடுகளின் அரசியலமைப்புடன் இணைக்கப்பட்டுள்ள அரசியலமைப்பு சபைகளை நாம் காண்கிறோம். எடுத்துக்காட்டாக, ஐந்தாவது குடியரசு என அழைக்கப்பட்ட பிரான்சில், அத்தகைய சபை 1958 முதல் செயல்பட்டு வருகிறது. கமரூன் மற்றும் கம்போடியா குடியரசிலும் அதே பெயரில் இதே போன்ற வழிமுறைகள் உள்ளன. இந்த அரசியலமைப்பு சபைகளின் நோக்கமும் இலங்கையில் உள்ள அரசியலமைப்பு சபை முன்மொழிந்தவற்றிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. இலங்கையின் உயர் நீதிமன்றம் என்ன செய்கிறது, அதாவது அரசியலமைப்பை விளக்குவது, அவ்வாறு செய்யுமாறு கோரும்போது,அரசாங்கத்திற்கும் சட்டமன்றத்திற்கும் இடையிலான சட்ட மோதல்களைத் தீர்ப்பதில் அவர்கள் பங்கு வகிக்கிறார்கள். ஆணைக்குழுக்களை நியமித்தல் போன்ற சிறிய விடயங்களை நிறைவேற்றுவதற்கு இலங்கையின் அரசியலமைப்பு செய்வது போன்று எந்தவொரு அரசியலமைப்பு சபையும் நிறைவேற்று அதிகாரத்தில் தலையிடுவதில்லை. எனவே இந்த பொறிமுறையின் பின்னால் காணப்படும் யோசனை அடிப்படையில் குறைபாடுடையது.

அப்படிச் சொல்லிவிட்டு, இப்போது சட்டம் உருவாக்கும் முக்கிய முரண்பாடுகளுக்குச் செல்வோம். நிர்வாகத்திற்கும் சட்டமன்றத்திற்கும் இடையிலான அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டை திரிப்பது சிதைப்பதில் சபையின் முக்கிய சிக்கல் ஆகும். அதிகாரப் பிரிப்புக் கோட்பாட்டைக் கடைப்பிடிப்பதில், உலகில் எங்கிருந்தும் அரசியலமைப்பை உருவாக்குபவர்கள் ஒதுக்கப்பட்ட அதிகாரங்களை மற்றொன்றிலிருந்து புத்திசாலித்தனமாகப் பிரிக்க முயல்கிறார்கள், இதனால் சனநாயகத்தின் ஒவ்வொரு தூணும் மற்றொன்று தேவையில்லாமல் தடையின்றி தனது கடமையைச் செய்ய முடியும். 1978 அரசியலமைப்பிலும், இந்த விதி பயபக்தியுடன் பின்பற்றப்பட்டு, 2020 இல் ஏற்றுக்கொள்ளப்பட்ட 20 வது திருத்தம் வரை நடைமுறையில் இருந்தது. விதிவிலக்கு 19ஏ மூலம் சிறிதுகாலம் சீர்குலைக்கப்பட்டது. புறஎல்லைக்கு அதிகாரப் பகிர்வு மூலம் மாகாண சபையை அறிமுகப்படுத்திய 13வது திருத்தச் சட்டம் கூட சமநிலையைச் சீர்குலைக்க விரும்பவில்லை. இந்தக் கோட்பாட்டை அரசியலமைப்பை உருவாக்குபவர்கள் நெருக்கமாகப் பின்பற்றுகிறார்கள், ஏனெனில் இதை மீறுவது அரசியலமைப்புக்கு முட்டுக்கட்டை அல்லது முட்டுக்கட்டையை உருவாக்கலாம். அத்தகைய முட்டுக்கட்டை அரசியலமைப்பு நெருக்கடிக்கு வழிவகுக்கிறது.



2015 இல் 19வது திருத்தம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர், இலங்கையில் இதுவே நடந்தது. இந்தத் திருத்தம் சனாதிபதி சிறிசே-னவையும் பிரதமர் விக்ரமசிங்கவையும் ஒரு மோதல் போக்குக்கு இட்டுச் சென்றது. தொடர்ச்சியான அசிங்கமான அரசியல் சண்டைகளைத் தொடர்ந்து சனாதிபதி சிறிசேனா பிரதமர் விக்கிரமசிங்கவை பதவியி-ல் இருந்து நீக்கினார். இரு தலைவர்களும் நாட்டை ஆள்வதில் தங்களுக்குத்தான் நிறைவேற்று அதிகாரம் உண்டு என சொல்லிக் கொண்டதே இத்தகைய தோல்விக்குக் காரணம் ஆகும். நன்கு அறியப்பட்ட ஜெர்மன் தத்துவஞானி சரியாகச் சொன்னது போல், அதிகாரத்திற்கான விருப்பம் மனி-தனின் உள்ளார்ந்த குணமாகும். இந்த விருப்பத்தால் தூண்டப்பட்டு, சனாதிபதியும் பிரதம மந்திரியும் இரண்டு இணை அரசாங்கங்களை நடத்த முற்பட்டனர். இதனால் ஏற்பட்ட மோசமான விளைவுகளை இருவரும் சந்திக்க வேண்டியிருந்தது. ஒரு தரப்பினர் மற்றைய கட்சி அதிகாரத்தை உறுதிப்படுத்தும் முயற்சியின் பின்னணியில், ஆட்சியின் சுமூகமான செயல்பாடுதான் பாதிக்கப்பட்டது. பொருளாதாரம் அதிகமாகப் பாதிக்கப்பட்டது. வளர்ச்சி விழுக்காடு 2015 இல் 5.01**%** என்ற விகிதத்தில் இருந்து 2019 க்குள் 2**%** ஆகக் குறைந்தது. மந்தமான வளர்ச்சி விழுக்காடு நாட்டின் பொருளாதார நெருக்கடியிலிருந்து தெளிவாகக் கண்டறியப்பட்டது. தொற்றுநோயால் உருவாக்கப்பட்ட அதிர்ச்சிகளை பொருளாதாரம் தணிக்க முடியாத நிலையில் உள்ளது.

அரசியல் உறுதித்தன்மை மற்றும் ஒத்திசைவான பொருளாதாரக் கொள்கையின் தேவையினால் பொருளாதாரம் பாதிக்கப்பட்ட நிலையில், தேசியப் பாதுகாப்புத் துறை ஏற்கனவே சீர்குலைந்து, இரண்டு பிரிவுகளாகப் பிரிந்ததன் காரணமாக, உறுதியான பொறுப்பை யாருக்கும் வழங்கத் தவறியது. காவல்துறை மற்றும் புலனாய்வு அமைப்புகள் உட்பட பாதுகாப்புப் படைகள் அரசாங்கத்தின் இரு பிரிவினரிடமிருந்தும் வழிகாட்டுதல் மற்றும் கட்டளையைப்பெறுவதில் தோல்வியடைந்தன. நெருக்கடி படிப்படியாக பாதுகாப்பு இயந்திரத்தின் அனைத்து தொடர்புடைய பிரிவுகளிலும் ஊடுருவியது. பாதுகாப்பு எந்திரங்களுக்கிடையில் நிலவிய நிச்சயமற்ற தன்மை, தீவிரவாதிகள் மற்றும் பிற தேச விரோத சக்திகளுக்கு நாட்டில் எந்த வகையான தாக்குதலையும் திட்டமிட்டு செயல்படுத்துவதற்கான வாய்ப்பை வழங்கியது. இதன் விளைவாக 2019 ஏப்ரல் மாதத்தில் ஈஸ்டர் ஞாயிறு தற்கொலைத் தாக்குதலில் 250 பேர் கெட்டகாலத்துக்கு இறந்தனர்.

தாக்குதல் குறித்து விசாரித்த அமைக்கப்பட்ட ஆணையம், உள்நாட்டு வெளிநாட்டு உளவுத்துறையால் 95 க்கும் மேற்பட்ட எச்சரிக்கைகள் (தாக்குதல்பற்றி) வந்ததாகக் கூறியது. அண்டை நாட்டில் உள்ள ஒரு பிரபலமான உளவுத்துறை தாக்குதலுக்கு 10 நிமிடங்களுக்கு முன்பு எச்சரிக்கை செய்தது. எந்த எச்சரிக்கையும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

**(தொடர்ச்சி 11ம் பக்கம்)**






## The Tamil Genocide Monument Project in Brampton would be completed very soon

### Re-elected Brampton Mayor, His Worship Patrick Brown

# முள்ளிவாய்க்கால் இனப்புடுகொலை நினைவாலயம் பிரம்ரன் மாநகரில் விரைவில் திறந்து வைக்கப்பெறும்

### மீண்டும் தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரம்ரன் மாநகர மேயர் பெற்றிக் பிரவுண் உறுதி




"எனது கடந்த பதவிக் காலத்தில் அத்திவாரம் இடப்பெற்ற முள்ளிவாய்க்கால் இனப்புடுகொலை நினைவாலயம் பிரம்ரன் மாநகரில் விரைவில் திறந்து வைக்கப்பெறும் - இதனை நான் உறுதியாகக் கூறுகின்றேன். இந்த நினைவாலயம் திறந்து வைக்கப்பட்ட பின்னர் கனடாவிலிருந்து மாத்திரமல்ல உலகின் பல பாகங்களிலிருந்தும் கனடாவிற்கு வருகை தரும் தமிழ் மக்கள் அதனை தரிசித்துச் செல்வார்கள் என்பது உண்மையே".

இவ்வாறு தெரிவித்தார். கடந்த 24ம் திகதி பிரம்ரன் மாநகருக்கான தேர்தலில் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரம்ரன் மாநகர மேயர் பெற்றிக் பிரவுண் அவர்கள். நேற்று முன்தினம் புதன்கிழமை 26ம் திகதி பிரம்ரன் மாநகரில் நடைபெற்ற "பிரம்ரன் தமிழ் மூத்தோர் கழகத்தின்" 9வது ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த மேயர் பெற்றிக் பிரவுண் அவர்கள் அங்கு சிறப்பன முறையில் வரவேற்கப்பெற்றார்.

பின்னர் அவர் "பிரம்ரன் தமிழ் மூத்தோர் கழகத்தின் தலைவர் டாக்டர் ராதாகிருஸ்ணன் மற்றும் இயக்குனர் சபை உறுப்பினர்கள் சூழ்ந்து நிற்க அவர் உரையாற்றினார். சபையோர் நிறைந்த வழிந்த அந்த மண்டபத்தில் மேயர் பெற்றிக் பிரவுண் உரையாற்றுகையில்" நான் மேயர் பதவிக்கு போட்டியிட்ட கடந்த தேர்தலிலும் இந்தத் தேர்தலிலும் பிரம்ரன் வாழ் தமிழ் மக்கள் எனக்கு வாக்களித்து எனது வெற்றிக்கு பலம் சேர்த்துள்ளார்கள். எனவே நான் அவர்களுக்கு நன்றிக் கடன் செலுத்த வேண்டிய கடப்பாட்டுக்குள் தள்ளப்பட்டுள்ளேன். எனவே எனது பதவிக் காலத்தில் தமிழ் மக்களின் எந்த வேண்டுகோளையும் நிறைவேற்ற தயாராக இருப்பேன். ஒரு தொலைபேசி அழைப்பு எனக்கு உங்களிடமிருந்து வந்தால் உடனே நான் அதற்கான நடவடிக்கை எடுப்பேன்" என்றார்.





மேற்படி விழாவில் பல கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அத்துடன் அங்கு சமூகமளித்த உதயன் பத்திரிகை ஆசிரியர் லோகேந்திரலிங்கம் மற்றும் "யுகம் வானொலி" கணபதி ரவீந்திரன் மற்றும் கிருஸ்ணா ரெலிகாஸ்ட் ஊடகத்தை நடத்தும் தென்புலோலியூருஂ கிருஸ்ணலிங்கம் ஆகியோர் "பிரம்ரன் தமிழ் மூத்தோர் கழகத்தின் இயக்குனர் சபையினரால் கௌரவிக்கப்பெற்றனர்.

கழகத்தின் உறுப்பினர்கள் பலர் இசை நடனம் நடிப்பு ஆகியவற்றில் நல்ல ஆர்வத்துடன் இருப்பதையும் திறமை வாய்ந்தவர்களாக விளங்குவதையும் காணக்கூடியதாக இருந்தது" என்பதும் குறிப்பிடத்தக்கது.








Dr. புஷ்பா வன்னித்தம்பி
பல் வைத்தியர்

Dr. Pushpa.V & Associates
Dentist

New Patients Welcome

Open 7 Days a week

சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்

Sunday by Appointment only


Scarborough
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)
416-289-7187

Markham
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)
905-201-8900



இந்தியா செய்திகள் India News

# திருப்பதியில் தமிழக மாணவர்கள் மீதும், பொது மக்கள் மீதும் ஆயுதங்களைக் கொண்டு இனவெறித்தாக்குதல்



திருப்பதியில் தமிழக மாணவர்கள் மீதும், பொது மக்கள் மீதும் ஆயுதங்களைக் கொண்டு இனவெறித்தாக்குதல் தொடுப்பதா? - சீமான் கண்டனம், நாம் தமிழர் கட்சி

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, ஆந்திர மாநிலம், திருப்பதி, எஸ். ஆர்.புரம் வடமாலாபேட்டை தேசிய நெடுஞ்சாலையிலுள்ள சுங்கச்சாவடியில் தமிழக மாணவர்களும், மக்களும் சுங்கச்சாவடி ஊழியர்களாலும், உள்ளூர் ஆட்களாலும் ஆயுதங்களைக் கொண்டு மிகக்கொடூரமான முறையில் தாக்கப்பட்ட செய்தியறிந்து பெரும் அதிர்ச்சியடைந்தேன். சுங்கச்சாவடியில் கட்டணம் செலுத்தும் பாஸ்டேக் முறை பழுதாக இருப்பதாகக்கூறி, அதற்குப் பதிலாக இரு மடங்கு சுங்கக்கட்டணத்தைப் பணமாக செலுத்தக்கூறியதை எதிர்த்துக் கேள்வி கேட்டதற்காக தமிழர்களை இழிவாகப் பேசியும், தமிழக வாகனங்களை அடித்து உடைத்தும், பெண்கள், முதியவர்கள் எனப் பாராது தமிழகத்தைச் சேர்ந்த பொதுமக்கள், ஆந்திர சட்டக்கல்லூரிகளில் படிக்கும் தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் ஆகியோர் மீது ஆயுதங்களைக் கொண்டு கோரத்தாக்குதலைத் தொடுத்ததுமான கொடுஞ்செயல்கள் கடும் கண்டனத்திற்குரியது.

தமிழ்நாட்டுக்கு வரும் அண்டை மாநிலத்தவர்களை உரிய மரியாதையோடும், பெரும் மதிப்போடும் நடத்தி, அவர்களது பாதுகாப்பையும், நலவாழ்வையும் தமிழர்கள் உறுதிசெய்துள்ள நிலையில், அண்டை மாநிலங்களின் வாழும் தமிழர்களின் பாதுகாப்பு எப்போதும் கேள்விக்குறியாக்கப்பட்டு வருவது உள்ளக்கொதிப்பைத் தருகிறது. கேரளாவில் வழிபாட்டுக்குச் சென்ற சாந்தவேலு எனும் தமிழர், அந்நிலத்தில் வெந்நீர் ஊற்றிக் கொலைசெய்யப்பட்டதும், காவிரிச்சிக்கல் பேசுபொருளாகும்போதெல்லாம் கர்நாடகாவில் வாழும் தமிழர்கள் தாக்கப்படுவதும், ஆந்திரக்காட்டுக்குள் 20 தமிழர்களை அம்மாநிலக் காவல்துறை சுட்டுக்கொலை செய்ததுமான இனவெறிச்செயல்களின் நீட்சியாகவே, தமிழகத்தைச் சேர்ந்த மாணவர்களும், மக்களும் தாக்கப்பட்ட இக்கொடுந்துயரம் அமைந்திருக்கிறது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. தமிழர்கள் நாங்கள் பெருத்த சனநாயகவாதிகள் பெருந்தன்மையாளர்கள். ஆகவேதான், பெரும் அநீதிகள் இழைக்கப்பட்டபோதிலும் நாங்கள் அறவழியில் நீதிகேட்டு நிற்கிறோம். எங்களது சனநாயக உணர்வையும், பெருந்தன்மையையும், சகிப்புத்தன்மையையும் சாதகமாக்கிக் கொண்டு, இனியும் தமிழர்களை அடக்கி ஒடுக்கிவிடலாமென்று கணக்கிட்டால், அது பெரும் எதிர்விளைவுகளை ஏற்படுத்துமென எச்சரிக்கிறேன். எந்தவிதத் தவறும் இழைக்காத அப்பாவிகளை தமிழர்கள் என்கிற ஒற்றைக் காரணத்துக்காகவே இனவெறி கொண்டு தாக்கிய ஆந்திராவைச் சேர்ந்த கொடுங்கோலர்களின் கோரத்தாக்குதலுக்கு எனது கடும் எதிர்ப்பினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆகவே, இவ்விவகாரத்தில் தமிழக அரசு உடனடியாகத் தலையிட்டு, தமிழக மாணவர்களும், மக்களும் தாக்கப்பட்ட இக்கொடுஞ்செயலுக்கு தனது கண்டனத்தைப் பதிவுசெய்வதோடு, தாக்குதல் தொடுத்த குண்டர்களை கடும் சட்டப்பிரிவுகளின் கீழ் கைதுசெய்ய ஆந்திர அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமெனவும், ஆந்திராவிலுள்ள தமிழர்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனவும் நாம் தமிழர் கட்சி சார்பாக தமிழக அரசை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# இலங்கைக்கான அமெரிக்க துணைத் தூதர் டக் சோனெக் யாழ்ப்பாணத்தி அரசியல் தரப்புக்களுடன் சந்திப்பு

இலங்கை செய்திகள் Sri Lanka News



இலங்கைக்கான அமெரிக்க துணைத் தூதர் டக் சோனெக் புதன்கிழமை (26) யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டு அரசியல் தரப்புகளை சந்தித்து கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் பிரதி நிதிகளை தனித்தனியாக அமெரிக்க துணை தூதர் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன் போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், வடமாகாண சபை அவை தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தரப்புக்கள் தனியாகவும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஸ், வாசுகி சுதாகர் ஆகியோர் தனியாகவும் சந்தித்து கலந்துரையாடினர்.



இதன்போது சமகால நிலைமைகள் தொடர்பாக அமெரிக்க துணைத் தூதர் அரசியல் பிரமுகர்களிடம் கேட்டறிந்து கொண்டார். (26-10-2022)


# MONEY PROBLEMS?
## பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

## எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

### நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

### நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




4 இடங்களில் சேவை

ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா

வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:

வசந்தி சிவராஜா - 416-616-3077

# 22 ஏ (இப்போது 21 ஏ) மற்றொரு அரசியலமைப்பு மற்றும் அரசியல் நெருக்கடிக்கு வழிவகுக்கும்

(8ம் பக்கத் தொடர்ச்சி)

அரசு மற்றும் பாதுகாப்பு இரண்டிலும் உயர் பதவிகளில் இருந்தவர்கள் பழியை மற்றவர் மீது சுமத்தினர்.

19வது திருத்தத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட சனநாயக சீர்திருத்தங்கள் என்று அழைக்கப்படுவதன் நேரடி விளைவுகள் இதுவாகும். 2015 முதல் 2019 வரையிலான காலகட்டத்தில் ஏற்பட்ட பொருளாதாரத் தேக்க நிலை, ஈஸ்டர் தாக்குதலைத் தொடர்ந்து சுற்றுலாத் துறையின் முழுமையான இழப்பு, நாட்டுக்கு பில்லியன் கணக்கான டொலர்கள் இழப்பு மற்றும் சில 2 மில்லியன் மக்களின் வாழ்வாதார இழப்பு ஆகியவற்றை கணக்கிட்டால் மட்டுமே இந்த அரசியலமைப்புத் தவறுக்கான மொத்த வாய்ப்புச் செலவைக் கண்டறிய முடியும்.

மீண்டும் 22வது திருத்தத்திற்கு வரும்போது, உயர் நீதிமன்றம், 2015ல் எடுத்த நிலைப்பாட்டில் இருந்து இம்முறை விலக முடிவெடுத்துள்ளது. பிரதமருக்கு இருக்கும் அதிகாரங்களோடு ஒப்பிடும்போது சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை நீர்த்துப்போகச் செய்வதன் மூலம், 2019 ஆம் ஆண்டு போல் மீண்டும் ஒரு அரசியலமைப்பு நெருக்கடிக்கு - உயர்நீதிமன்றத்தின் தலையீட்டுக்கு - நாடு திரும்பலாம் என நினைத்தனர். எனவே அவர்கள் 22ஏ மீதான தீர்மானத்தில் அரசியலமைப்பின் செயல்பாட்டின் நடைமுறை அர்த்தத்தில் செயல்பட்டிருக்கிறார்கள். அந்த நடைமுறை உணர்வுக்கு ஏற்ப, அமைச்சர்கள் மற்றும் துணை அமைச்சர்களை நியமிப்பது தொடர்பான 22ஏ மசோதாவின் முன்மொழியப்பட்ட வார்த்தைகளை நீதிமன்றம் "பிரதமரின் ஆலோசனையின் பேரில்" என்பதை "பிரதமருடன் கலந்தாலோசித்து" மாற்றியது. சனாதிபதி தனது விருப்பத்தின் பேரில் பிரதமரை பதவி நீக்கம் செய்யலாம் என்றும், அந்த அதிகாரத்தை நிறைவேற்று அதிகாரத்தின் இன்றியமையாத அங்கமாக மறைமுகமாக தீர்ப்பளிக்கலாம் என்றும் உயர் நீதிமன்றம் கூறியது.

அரசியலமைப்பின் பரிந்துரையின் பேரில் சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு சனாதிபதி நியமனம் செய்வதை கட்டாயமாக்காததன் மூலம் அரசியலமைப்பு சபையின் அதிகாரங்களை நீர்த்துப்போகச் செய்ய நீதிமன்றம் தலையிட்டது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், சனாதிபதி அத்தகைய நியமனங்களை காலவரையின்றி தாமதப்படுத்தலாம் அல்லது நிறுத்தலாம். 19வது திருத்தத்தில் காணப்பட்ட 22ஏ இன் அசல் சட்டமூலத்தின்படி, குறிப்பிட்ட காலத்திற்குள் அரசியலமைப்பு சபையின் பரிந்துரைத்த நபர்களை சனாதிபதி நியமிக்காவிட்டால், நியமனங்கள் செய்யப்பட்டதாகக் கருதப்படும். மேற்கூறிய அனைத்து மாற்றங்களுக்கும் சிறப்புப் பெரும்பான்மை மற்றும் மக்கள் வாக்கெடுப்பில் ஒப்புதல் தேவை என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

உயர் நீதிமன்றம், நிர்வாகத்தின் அதிகாரங்களை அதன் பழைய புகழுக்கு மீட்டெடுத்து, "இறையாண்மை மக்களிடம் உள்ளது மற்றும் பிரிக்க முடியாதது" (அரசியலமைப்பின் உறுப்பு 3) நமது அரசியலமைப்பின் அடிப்படை மதிப்பை மீண்டும் ஒருமுறை உணர்ந்துள்ளது பாராட்டத்தக்கது.

"சனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களின் பிரிக்க முடியாத அதிகாரம்" மீதான உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்திற்கு எதிரான வாதம் என்னவென்றால், சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு அமைச்சர்கள் அல்லது உறுப்பினர்களை நியமிக்கும் முடிவை முறையே பிரதமரும், அரசியலமைப்பு சபையும் எடுத்தாலும், இறுதி முடிவு சனாதிபதியால் எடுக்கப்படும். அதாவது மக்கள் மூலம் சனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரம் அவரிடமிருந்து பறிக்கப்படமாட்டாது. . இப்படி சிந்திப்பதில் கடுமையான சிக்கல் உள்ளது. இது மக்கள் அதிகாரத்தை ஏமாற்றும் செயல். குடியரசுத் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களின் இறையாண்மை என்பது குடியரசுத் தலைவரின் கையொப்பம் மற்றும் முத்திரை இடல் போன்ற செயலுக்கு அப்பாற்பட்டது என்ற உண்மையைப் புரிந்து கொள்ள ஏவுகணையை வானில்செலுத்தும் தொழில்நுட்ப அறிவியல் தேவையில்லை.

நீதித்துறை மறு ஆய்வு மூலம் சரியான திசையில் 22ஏ இன் வரைவில் அனைத்து மாற்றங்களும் செய்யப்பட்ட போதிலும், சனாதிபதியின் அதிகாரத்தைக் குறைக்க உயர் நீதிமன்றம் விதித்துள்ள கட்டுப்பாடு, நீதிமன்றத்தால் இடைநிறுத்தப்பட்ட தண்டனை போன்றது என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. ஒருவர் சிறையில் தண்டனையை அனுபவிக்காவிட்டாலும், அவன்/அவள் குற்றவாளியாகவே பார்க்கப்படுவார். அதே வழியில் சிந்தித்துப் பார்த்தால், அரசியலமைப்பு சபை பரிந்துரைத்த நியமனங்கள், உண்மையில் இல்லாவிட்டாலும், சமூகத்தால் சரியான ஒன்றாகவே பார்க்கப்படுகின்றன, சனாதிபதியால் தனது சொந்த விருப்பப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு மாறாக. அப்படியானால், ஆணையங்களின் நிர்வாகத்தின் வழியே சமூகம் துருவப்படுத்தப்பட்டு, இந்த நிறுவனங்களை மக்களுக்கு நம்பமுடியாததாக மாற்றும்.

மேலும், நியமனங்களை மேற்கொள்வதில் அரசியலமைப்பு சபையின் பரிந்துரைக்கு இணங்காதது சனாதிபதிக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையில் மோதலுக்கு வழிவகுக்கும். இரண்டு உறுப்புகளுக்கும் இடையே உள்ள ஒருவருக்கு ஒருவர் நம்பிக்கை இழக்கப்பட்டு சண்டைகள் தொடர்ந்து வருகின்றன. நீண்ட காலத்திற்கு முன்பு முன்னாள் சனாதிபதி சிறிசேன 19ஏ இன் கீழ் தனது காலத்தின் அரசியலமைப்பு சபை நிறைவேற்று சனாதிப-தியின் கவலைகளை புறக்கணிப்பதாக குற்றம் சாட்டினார். இந்த நிலை சட்டமன்றத்திற்கும் நிர்வாகத்திற்கும் இடையே மோதலாக மாறியது என்றும் அவர் கூறினார். அரசியலமைப்பு சபையின் பரிந்துரைக்கு இணைக்கப்படாத நிலையில் புதிய சுற்றிலும் இதுவே நிகழலாம்.

மொத்தத்தில், சட்டமன்றத்திற்கும் நிர்வாகத்திற்கும் இடையில் அமைக்கப்பட்ட அரசியலமைப்பு சபையின் செயல்பாடுகள், இரு நிறுவனங்களின் சுமூகமான செயல்பாட்டை உள்ளே இருந்து சீர்குலைக்கும் - ஒருவரின் உண்மையான நோக்கம் அல்லது நோக்கங்களை மறைத்தல் - அவை பயன்படுத்தப்படுகின்றன. மசோதா மீதான விவாதத்தின் போது நா.உறுப்பினர்கள் பரிந்துரைத்த சனநாயகத்தின் கற்பனையான சொல்லாட்சி அல்ல. குடியரசுத் தலைவர் மதிப்பு அல்லது அவமதிப்பு அரசியலமைப்பு சபையின் பரிந்துரைகள் முக்கியமற்றவை. இரண்டு சந்தர்ப்பங்களிலும், மோதல் விதியாக மாறக்கூடும்.

வரவிருக்கும் நெருக்கடியிலிருந்து வெளியேறுவதற்கான ஒரே வழி, தற்போதுள்ள அரசியலமைப்பை முற்றிலுமாக அகற்றுவதுதான். அதன் ஓட்டை ஒடிசலை அடைப்பது அல்ல. சனாதிபதி முறைமையை நாம் தக்கவைத்துக் கொள்கின்றோமா அல்லது நாடாளுமன்ற முறைமைக்கு செல்கிறோமா என்பதையிட்டு நாம் சிந்திக்கலாம்.

1978 இல் அறிமுகப்படுத்தப்பட்ட தற்போதைய அரசியலமைப்பின் ஓட்டை ஒடிசலை அடைப்பதில் உள்ள ஆபத்து, அதன் வடிவமைப்பு அடிப்படையில் சனாதிபதி முறைமை என்பதே. மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சனாதிபதிக்கு அரசாங்கத்தின் செயல்பாட்டைச் செயல்படுத்தும் அதிகாரம் இருக்கும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. மற்ற இரண்டு உறுப்புகளும் சனாதிபதியை ஆதரிப்பதற்கும் அதைச் சரிபார்க்கவும் உருவாக்கப்பட்டுள்ளன. நிறைவேற்று அதிகாரத்தை பலவீனப்படுத்த முயற்சிப்பது சனாதிபதியின் விருப்புரிமையை சரியான முறையில் நிறைவேற்றுவதற்குத் தடையாக உள்ளது. இது இன்றுள்ள அரசியல்முறைமையை திரித்து, எதிர்பாராத விளைவுகளுக்கு வழிவகுக்கும்.

(இந்தக் கட்டுரை ஆங்கிலத்தில் **Colombo Telegraph** இணையதளத்தில் வெளிவந்தது. ஆங்கில மூலத்தை **https://www.colombotelegraph.com/index.php/the-22nd-a-now-21a-could-lead-to-another-constitutional-cum-political-crisis/** என்ற இணையதள முகவரியில் படித்துக் கொள்ளலாம். *தமிழாக்கம் கனடா நக்கீரன்)*



உதயனின் பிரத்தியேகச் செய்தி

# நீர் வளம், நில வளம் உள்ள முல்லை மண்ணில் நிம்மதி ஏன் இல்லை!

(கனடா உதயனின் சிறப்புக் கட்டுரைத் தொடர் பாகம் - 01)

- யாழ்ப்பாணத்திலிருந்து நடராசா லோகதயாளன்




**நீ**ர் வளம் உண்டு, நில வளம் உண்டு, நிம்மதி ஒன்றுதான் இல்லை.

எனினும் இந்த மண் எங்களின் சொந்த மண்
எனினும் இந்த மண் எங்களின் சொந்த மண்

என்று-அன்று புலிகள் பாடிய மண்ணின் நிலை தொடர்பான பாடல் முல்லை மண்ணின் அவலத்தை அப்படியே இன்றும் தொட்டு நிற்கின்றது.

கொடூரமான ஒரு போர் முடிந்த 13 ஆண்டுகளிற்கும் மேலானாலும், இந்த பாடலும் அது தமிழ் மக்களிடையே ஏற்படுத்திய உணர்ச்சியும், தாக்கமும் மிகவும் ஆழமானது.

அடிப்படையில் வளம் மிகுந்த பூமியில் இருக்கும் மக்கள் வறுமையில் வாடுவதையும், அதிலிருந்து மீண்டு சுதந்திரமாக வாழ்வதையுமே அந்தப் பாடல் அடிநாதமாகக் கொண்டிருந்தது எனலாம்.

முல்லைத்தீவு வலி சுமக்கும் ஒரு பூமி - அதுவொரு சிவந்த மண். எக்காலத்திற்கும் போர் வடுக்களைத் தாங்கி நிற்கும் ஒரு நிலம். அதுமட்டுமல்ல அந்த நிலப்பரப்பு சாதனை மற்றும் வேதனைகளுக்கு அழியாத சாட்சியாக என்றென்றும் நிலைத்திருக்கும்.

இதற்குச் சிறந்த உதாரணமாக வட்டுவாகல் பாலத்தைக் கூறலாம். அங்கு நடைபெற்ற அவலங்களுக்கு அந்தப் பாலம் ஒரு மௌனமான சாட்சி. அந்த பாலத்தின் ஊடாகக் கடந்து "அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்கு" வந்த ஆயிரக்கணக்கானவர்களை இன்றும் அவர்களது உறவினர்கள் தேடுகின்றனர்.

முல்லைத்தீவு இன்றும் அவலங்கள் சுமந்து நிற்கிறது. நாட்டில் ஒப்பீட்டளவில் அதிகமாக இராணுவப் பிரசன்னம் இங்குதான் உள்ளது என்பதைத் தரவுகள் காட்டுகின்றன.

இலங்கையின் 25 நிர்வாக மாவட்டங்களில் ஒன்றான முல்லைத்தீவு மாவட்டம் சனத் தொகைகளில் குறைந்த மாவட்டமாகக் காணப்படுகின்றபோதும் வறுமையில் முதலித்தில் உள்ளது.

வறுமையைப் போக்க அரச நிர்வாக இயந்திரங்கள் செயல்பட வேண்டிய நிலையில் அந்த வறுமைக்கு அரச நிர்வாக இயந்திரமே காரணம் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

வளங்கள் பல இருந்தும் மக்கள் வறுமையில் வாடுவது ஏன்?

இதனை இந்தச் சிறப்புத் தொடர் அலசுகிறது. ஊடக அறத்தை கடைப்பிடித்து, பிரச்சனைகளைச் சுட்டிக்காட்டி அதன் மூலம் தீர்வு காண முயலும் மக்கள் நலன் சார்ந்த ஒரு தொடராகும் இது.

இத்தொடரின் மூலம் வலியைச் சுமக்கும் அந்த மண்ணிற்கும் அதன் மக்களுக்கும் சிறிதேனும் ஆறுதலும் ஆதரவும் கிடைக்கும் என்பதே நம்பிக்கை.

முல்லைத்தீவு மாவட்டமானது 2415 சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டு 6 பிரதேச செயலாளர் பிரிவுகளின் கீழ் 136 கிராம சேவகர் பிரிவுகளில் தற்போது 45 ஆயிரத்து 927 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து 38 ஆயிரத்து 516 மக்கள் வாழ்கின்றனர்.

நீர்வளம், நில வளம் இருந்தும் - வறுமையில் இருந்து மீளாத முல்லைத்தீவும் தீராத பிரச்சணைகளுமாக காணப்படுவதனை - அலச ஆரம்பிக்கும்போது இறுதி யுத்தமும் முள்ளிவாய்க்கால் அவலமும் மட்டும் கண் முன்னே தோன்றவில்லை.

போர் முடிந்து 13 ஆண்டுகள் கடந்தும் அரச நிர்வாக இயந்திரத்தினால் சீர் அமைக்க முடியாது ஆண்டுதோறும் ஏற்படும் பருவ மழையின்போது உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வட்டுவாகல் பாலத்தின் மீது பயணிக்கும் போது இறுதி யுத்தத்தில் மட்டுமல்ல இன்னும் உயிரைக் குடிக்கவே காத்திருக்கின்றேன் எனக் கூறுவது போன்று காட்சி தருகின்ற வகையில் அந்தப் பாலத்தின் ஆயுள் ஊசலாடுகின்றது. அடிப்படை வாழ்வாதாரத்திற்கான குளம் முதல் வாழ்வே முடிந்த பின்பு தகனம் செய்யும் சுடலைகூட இராணுவத்தின் பிடியில் நிற்கும் அவலப் பட்டியலும் நீள்கின்றது.




இத்தனைக்கும் மத்தியில் எஞ்சியிருக்கும் சொற்ப நிலங்களும் தொல்லியல் எனவும் மகாவலி என்றும் ஒரே தீராத தலைவலியாக உள்ள முல்லைத்தீவு மக்கள் பெரும் போராட்டத்துடனேயே இன்றும் வாழ்கின்றனர். மக்களோ சிவ பெருமானுக்கும் புத்த பகவானுக்கும் இடையே சிக்கித் தவிக்கின்றனர்.

அந்த மாவட்டத்தின் வறுமைக்கு என்ன காரணம் என்பதை ஆராய்ந்து எழுத ஆரம்பித்த வேளை எந்த அவலத்தை முதலில் பட்டியலிடுவது என்பதில் பெரும் குழப்பமாகவும் உள்ளது. ஏனெனில் அவலத்தின் பட்டியல் அந்த அளவிற்கு நீளமாகவுள்ளது. இருப்பினும் வறுமையைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய அரச நிர்வாக இயந்திரங்களே வறுமைக்கான காரணங்களில் முதலிடமாகவுள்ளது என்பதையே இக்கட்டுரையின் மையப் பொருளாக தொட்டமையினால் அதனூடாகவே பட்டியலிட்டு ஆரம்பிக்கின்றேன்.

முல்லைத்தீவு மாவட்டமானது 2415 சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவு என்னும் வகையில் 2 லட்சத்து 41 ஆயிரத்து 500 ஹெக்டயர் அல்லது 5 லட்சத்து 96 ஆயிரத்து 505 ஏக்கர் என்ற அளவீட்டைக் கொண்ட நிலப்பரப்பாகும். அவ்வாறானால் இங்கே வாழும் 45 ஆயிரத்து 927 குடும்பங்களில் நிலம் அற்றவர் என எவருமே இருக்க வேண்டிய அவசியமே கிடையாது. இருப்பினும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 ஆயிரத்து 389 குடும்பங்களுக்கு குடியிருப்பதற்கே ஒரு துண்டு நிலம்கூட இல்லை என்பதனையும் மாவட்டச் செயலகம் உறுதிப்படுத்துகின்றது. இதேபோன்று இந்த மாவட்டத்தில் காணப்படும் வாழ்வாதாரங்களில் ஒன்றான கால்நடைகள் சுமார் 120,000 கால்நடைகளிற்கும் ஒரு மேய்ச்சல் தரைகூட கிடையாது.

2021 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி வேலை வாய்ப்பற்றோருக்கு சுய தொழிலை ஊக்குவிக்க தேசிய ரீதியில் ஒரு லட்சம் பேருக்கு காணி வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்படும். இதற்கு விரும்பியவர்களை விண்ணப்பிக்குமாறு அரசு கோரியபோது நாடு முழுவதும் விண்ணப்பித்தனர் இதில் முல்லைத்தீவில் மட்டும் 28 ஆயிரத்து 676 பேர் விண்ணப்பித்தனர். எனினும்



அவர்களிற்கு வழங்க நிலம் இல்லை என்று கூறப்படுகின்றபோதும் வடக்கு கிழக்கு முழுமையாக இத் திட்டம் கிடப்பில் உள்ளது. இவ்வாறு பெரிய ஒரு மாவட்டத்தில் எதற்குமே நிலம் இல்லை எனில் இருக்கும் நிலத்தை என்ன கடல் விழுங்கி விட்டதா என்ற கேள்வி பலருக்கு எழலாம். ஆனால் அந்த கேள்விக்கான விடையே இந்தக் கட்டுரைக்கான பெரும் பதிலாகவும் அமையும்.

இலங்கையில் இடம்பெற்ற போரின் காரணமாக அரச நிர்வாக இயந்திரங்கள் பெயரளவிற்கு வெறுமனே நிவாரணப் பணிகளில் கவனம் செலுத்த வனவளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் ஆகிய 3 திணைக்களங்கள் அநுராதபுரத்தில் இருந்து முல்லைத்தீவு தொடர்பில் கன கச்சிதமாகவே செயல்பட்டுள்ளமை தற்போதைய தரவுகள் மூலம் உறுதியாகின்றன.

இந்த மூன்று திணைக்களங்களை விட மகாவலி அபிவிருத்தி அதிகார சபை அரசின் மறைமுக நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்து வருவதாகவும் அந்த மாவட்ட மக்கள் கருதுகின்றனர். இந்த திணைக்களங்கள் அன்று தொட்டு இன்றுவரை வடக்கு கிழக்கை அபகரிக்க அனைத்தையும் மேற்கொள்ளும் நிலையில் வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய இரு மாகாணத்தையும் இணைக்கும் முல்லைத்தீவில் அதிக கவனம் செலுத்தியே வந்தனர் என்பதனையும் இதற்கான தரவுகள் சான்றுகளையும் அடுத்த வரும் பகுதிகளில் புள்ளி விபரத்துடன் பார்க்கலாம்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் அங்கே வாழ்ந்த மக்களின் உணவுத் தேவையை பூர்த்தி செய்து வவுனியாவிற்கும் அரிசி அனுப்பிய மண் முல்லைத்தீவு. இறுதி யுத்தத்தில் முள்ளிவாய்க்காலில் இரத்த ஆறு ஓடும்வரை நெருப்பெரிந்த நிலத்தில் அன்று ஓலைக் குடிசையிலும் தறப்பாள்களின் கீழும் குப்பி விளக்குகளுடன் மன நிறைவோடு வாழ்ந்த மக்கள் கல் வீடுகளின் உள்ளே மின் விளக்குகள் ஒளிர மின் விசிறியின் கீழ் நிம்மதியின்றி தவிப்பதற்கு அந்த மாவட்டத்தின் அரச நிர்வாக இயந்திரம் ஏற்படுத்தும் அழுத்தங்களே காரணமாக உள்ளது என்பதே மக்கள் கூற்றாகவுள்ளது.

கடற்தொழில், விவசாயம், கைத் தொழில் மட்டுமன்றி அனைத்து வகையிலும் எந்த உணவுப் பொருளையும் பணம் இன்றி உற்பத்தி செய்த மண்ணில் இன்று பணம் இருந்தாலும் அதை போராடியே பெறவேண்டிய அவலமே காணப்படுகின்றது. 1983ஆம் ஆண்டு விரட்டப்பட்டு மக்கள் வெளியேறிய இடங்கள் பல இன்றும் விடுவிக்கப்படாமல் ஆக்கிரமிப்பிலேயே உள்ளது.



அரச நிர்வாக இயந்திரச் செயல்பாட்டைப் பொருத்தவரை கட்டடங்கள் உண்டு அதிகாரிகள் இல்லை. பல கட்டடங்கள் திறப்பு விழா கண்டதோடு எவருமே வந்து செயல்படாத "பேய் வீடு" போலுள்ளது. "ஆட்கள் வந்தால் தானே அலுவல்கள் நடக்கும்" என்று மக்கள் புலம்புகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் அனைத்து நிர்வாக மையங்களும் நகரை அண்டியதாகவே காணப்படுகின்றது. இதனால் ஏ-9 வீதிக்கு மேற்கே உள்ள 25 ஆயிரம் மக்களின் நெருக்கடிகள் ஏனைய பிரதேசங்களை விடவும் உச்சமானதாகவே என்றும் உள்ளது.

குறிப்பாக துணுக்காய், பாண்டியன்குளம் பிரதேச செயலாளர் பகுதியின் புறநகர்ப் பகுதியில் ஓர் அனர்த்தமோ அல்லது பிரச்சனை என்றாலோ அதற்கான தீர்வைப் பெறும் நோக்கில் எந்த நிர்வாக அலுவலகங்களிற்கும் ஒரு வழிப்பாதையாக 75 கிலோ மீற்றர் பயணிக்க வேண்டும். அதாவது யாழ் நகரில் இருந்து கிளநொச்சிக்குப் பயணிக்கும் தூரம். அவ்வாறெனில் சென்று வர 150 கிலோ மீற்றர் தூரம். இதற்கு தீர்வாக முல்லைத்தீவு மாவட்டத்தின் நிர்வாக இயந்திரங்களை மாங்குளத்தில் அமையுங்கள் என அந்த மக்கள் கடந்த 12 ஆண்டுகளாக எமக்கு தெரிந்து கோரிக்கை விடுத்தாலும் இதற்கு முன்பும் பல ஆண்டுகளாக முன்வைப்பதாகப் பட்டியலிடுகின்றனர்.

25 ஆயிரம் பேரிற்கு போக்குவரத்து இடையூறு என செயலகங்களை மாங்குளம் மாற்றினால் 75 ஆயிரத்திற்கும் அதிகமானோர் தற்போது 15 கிலோ மீற்றரில் தமது பணியை நிவர்த்தி செய்யும் நிலையில் அவர்களை 40 அல்லது 50 கிலோ மீற்றர் அலைய விடமுடியாது ஏனெனில் குடிசண அடர்த்தி கொண்ட பிரதேச செயலகங்கள் மாவட்டத்தின் 60 வீதமான மக்கள் புதுக்குடியிருப்பு மற்றும் கரைத்துரைப்பற்று பிரதேச செயலக எல்லைக்குள் வாழ்கின்றனர் என்கின்றனர் அதிகாரிகள்.



இந்த இழுபறியினால் நட்டாங்கண்டல், சிராட்டிகுளம், பாலைப்பாணியில் ஓர் வெள்ளிக் கிழமை கிணற்றிற்குள் வீழ்ந்தவரை திங்கள் கிழமைதான் கிணற்றிற்கு வெளியே எடுத்த அவலமும் அண்மையில் இடம்பெற்றது. ஏனெனில் திடீர் மரண விசாரணை அதிகாரி முள்ளியவளையிலேயே உள்ளார். அதேபோன்று ஐயங்குளத்தில் ஓர் அனர்த்தத்திற்கு உள்ளானவரை மல்லாவி வைத்தியசாலைக்கு மாற்றி அங்கிருந்து நோயாளர் காவு வண்டியில் கிளிநொச்சிக்கு எடுத்துச் சென்ற சமயம் பாதிக்கப்பட்ட நோயாளர் படுத்திருந்த கட்டில் ஏ-9 வீதியில் ஓடிய அவலமும் இடம்பெற்றது. மாங்குளம் சந்தியால் கிளிநொச்சி நோக்கித் திரும்பி கொக்காவிலை அண்மித்து பயணித்த சமயம் நோயாளர் காவு வண்டியின் கதவு கயிற்றினால் கட்டப்பட்டிருந்தபோது நோயாளர் காவு வண்டி 18ஆம் போர் ஏற்றத்தில் ஏறியதனால் கட்டில் கதவில் இடித்தபோது கயிறு அறுந்து கதவு திறந்தது. நோயாளர் படுத்திருந்த கண்டில் நோயாளருடன் 50 மீற்றருக்கும் அதிக தூர் கட்டிலுடன் ஓடினார்.

முல்லைத் தீவு மாவட்டத்தில் நிலவும் அவலங்களின் ஒரு மேலோட்டமே இது.

**(அவலப் பட்டியல் தொடரும்....)**

# உதயன் சர்வதேச விருது விழா-2022 வெற்றிகரமாக இடம்பெற ஆதரவுக் கரம் நீட்டியவர்கள் மேடையில் தோன்றிய காட்சிகள்

கடந்த 15-10-2022 சனிக்கிழமையன்று ஸ்காபுரோவில் அமைந்துள்ள ‘கென்னடி கொன்வென்சன் சென்றர்’ மண்டபத்தில் நடைபெற்ற உதயன் சர்வதேச விருது விழா-2022 வெற்றிகரமாக இடம்பெற ஆதரவுக் கரம் நீட்டியவர்கள் பலர் அன்றைய தினம் மேடையில் தோன்றிய காட்சிகள் பலரைக் கவர்ந்துள்ளன.

விழாவிற்கு அனுசரணையாளர்கள். கலைஞர்கள் மற்றும் நண்பர் கலை நிகழ்ச்சிகளை வழங்கியவர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கனடா உதயன் நிறுவனத்தோடு இணைந்து தொடர்ச்சியாகப் பயணிக்கின்றார்கள். அவர்களில் பலர் இவ்வாரம் இப்பக்கத்தை அலங்கரிக்கின்றார்கள். அன்றைய தினம் இறுதி நிகழ்ச்சியாக இடம்பெற்ற ‘ரிதம் தரும் ரிஷி’ என்னும் வீணை வாத்திய நிகழ்ச்சியை பார்வையாளர்கள் இறுதி வரை அமர்ந்திருந்து பார்த்து ரசித்து கொண்டாடி மகிழ்ந்தனர்.





















Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# OUR DEEP CONDOLENCES



MOURNING THE PASSING OF

## COUNCILLOR. CYNTHIA LAI

WARD 23 - SCARBOROUGH

HSB CANADA

SARAVANAA BHAVAN®

WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN

SCARBOROUGH 416 293 7755 | MISSISSAUGA 905 290 0769 | DELTA B.C 778 578 7575

இராகாலயா நுண்கலைக் கல்லூரி பெருமையுடன் வழங்கும்

# கான மாருதம்- 2022



Raghalhaya Fine Arts of Ontario

இராகாலயா நுண்கலைக் கூடம்



முன்னூறுக்கும் மேற்பட்ட இசை மேடைகளில் தம் திறமைகளை வெளிக்காட்டிய
“சங்கீத கலாவித்தகர்” “இன்னிசைவாணி”

**திருமதி. லசந்தி இராஜ்குமார் அவர்களின்**

இராகாலயா நுண்கலைக் கூடத்தின் இன்னிசைக் குழுவினர்
தங்கள் 21வது ஆண்டு நிறைவை முன்னிட்டு மீண்டும் உங்கள் செவிகளுக்கு
வீணை, வயலின், வாய்ப்பாட்டு, ஆகியவை மூலம் விருந்தளிக்க வருகின்றார்கள்.



காலம்: **Saturday, November 5th , 2022 at 4:30 PM**

இடம்: **Armenian Youth Centre,
50 Hallcrown Place,
North York, Ontario.
M2J 1P6**



**Info:**
905.943.9047/647.393.3546/
647.224.3546



**Email**: raghalhayafinearts@gmail.com



# ரிஷி சுனாக் : பிரிட்டிஷ் ஜனநாயகத்தில் புதிய பரிமாணம்

**- சிவா பரமேஸ்வரன்: மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் லண்டன்**



பிரிட்டனின் புதிய பிரதமராகப் பதவியேற்றுள்ள ரிஷி சுனாக் அவர்களுக்கு வாழ்த்துக்கள்.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறியதிலிருந்தே நாடு குழப்பமான அரசியல் சூழலை எதிர்கொண்டது. அந்த ஒன்றியத்திலிருந்து விலகிவிட்டால் பொருளாதார ரீதியில் பிரிட்டன் பெரும் ஆதாயங்களைப் பெறும், இதர நாடுகளின் நலன்களுக்கான பிரிட்டன் செலவிடும் மில்லியன் கணக்கான ஸ்டெர்லிங் பவுண்ட்ஸ் மிச்சமாகும், பிரிட்டிஷ் வர்த்தகம் மேலும் பெருகும், உள்நாட்டில் மருத்துவ கட்டமைப்பு மேம்படும், நோயாளர்களுக்கு மேம்பட்ட மருத்துவ வசதிகள் கிடைக்கும், ஐரோப்பிய சட்டங்கள்-அதிலும் குறிப்பாக மனித உரிமைச் சட்டங்கள் பிரிட்டனைக் கட்டுப்படுத்தாது என்று "உண்மைக்குப் புறம்பான" பல தகவல்கள் கூறப்பட்டு மக்கள் அதற்கு வாக்களித்தார்கள் என்கிற குற்றச்சாட்டு அதை முன்னெடுத்தவர்கள் மீது இன்றளவும் உள்ளது.

யதார்த்த ரீதியில், ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறிய பிறகு அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக பிரிட்டன் பின்னடைவையே சந்தித்துள்ளது என்பது. போரிஸ் ஜான்சன், நிஜேல் ஃபராஜ், மைக்கேல் கோவ் போன்றவர்கள் "சுயநல நோக்கத்தோடு" முன்னெடுத்த பிரெக்சிட் திட்டத்திற்கு ஆதரவளித்தவர் புதிய பிரதமரான ரிஷி சுனாக். அவருக்கு முன்னாதாக பிரிட்டிஷ் சரித்திரத்திலேயே மிகவும் குறைந்த நாட்கள் பிரதமராக இருந்த லிஸ் ட்ரஸ் அம்மையார் முதலில் பிரெக்சிட்டிற்கு எதிராகவும், பின்னர் ஆதரவாளராகவும் மாறியவர்.

பிரதமராக இருந்த போரிஸ் ஜான்சன் பதவி விலக வேண்டும் என்று முதலில் போர்க்கொடியை உயர்த்தி பதவியிலிருந்து விலகியவர் அப்போது அவரது நிதியமைச்சராக இருந்த ரிஷி. அவருடன் மற்றொரு மூத்த அமைச்சராகவும் இருந்த சாஜித் ஜாவிதும் சேர்ந்து கொண்டார். பின்னர் நடைபெற்றதை நாடே அறியும்.

பிரெக்சிட் வாக்கெடுப்பை நடத்தி அதில் தோல்வியை எதிர்கொண்ட டேவிட் கேமரன் பதவி விலக நேரிட்டது. பின்னர் தெரீசா மே அம்மையார் பிரதமரானார். அவர் பிரெக்சிட்டிற்கு எதிரான நிலைப்பாடு கொண்டவர் என்றாலும், மக்கள் தீர்ப்பை ஏற்று நடக்க வேண்டிய சூழலில், ஐரோப்பிய ஒன்றியத்துடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி அதில் எதிர்பார்த்த வெற்றியை பெற முடியாமல் பதவி விலக வேண்டிய நிலைக்கு ஆளானார். இதையடுத்து பழமைவாத அல்லது மரபுவாத கட்சியின் தலைமைப் பொறுப்பையும், பிரதமர் பதவியையும் "கோமாளி" என்று வர்ணிக்கப்பட்ட போரிஸ் ஜான்சன் ஏற்றார். கட்சிக்குள்ளேயும் வெளியிலும் கடும் எதிர்ப்பை சந்தித்த அவரும் அடுத்து பதவியிலிருந்து விலகும் நிலைக்கு தள்ளப்பட்டார். பிறகு நடைபெற்ற தலைமைப் பதவிக்கான தேர்தலில் இந்நாள் மற்றும் முன்னாள் பிரதமர்கள் களத்தில் இறங்கினர். அதில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியிலான வாக்கெடுப்பில் ரிஷி சுனாக் முதலிடத்தில் இருந்தாலும், கட்சி உறுப்பினர்களிடையே நடைபெற்ற வாக்கெடுப்பில் லிஸ் டிரஸ் வெற்றிபெற பிரதமராகும் வாய்ப்பு அவருக்கு கிட்டியது. கட்சி உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் இனவாதம் இழையோடியதைக் காண முடிந்தது. ஆனால் அந்த ஆட்சி 50 நாட்கள் கூட நீடிக்கவில்லை.

ஆட்சி கவிழ்ந்த நிலையில் அடுத்து யார் என்ற கேள்வி எழ, பலரை பதவி மோகம் ஆட்டிப் படைத்தது. அதில் முதன்மையாக இருந்தவர் ரிஷி சுனாக். கடந்த முறை நூலிழையில் வாய்ப்பை தவறவிட்டவர் இம்முறை கட்சி மற்றும் ஆட்சியின் தலைமையைப் பெறுவதில் உறுதியாக இருந்தார். அவரை எதிர்த்து யார் போட்டியிடுவார்கள் என்ற எதிர்பார்ப்பு எழுந்த போது பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் கீழவை-ஹவுஸ் ஆஃப் காமன்ஸ் - அவைத்தலைவர் பென்னி மொர்டாண்ட் முதல் ஆளாக தான் போட்டியில் உள்ளதாக அறிவித்தார். அவருக்கான ஆதரவு எதிர்ப்பார்த்தளவில் இல்லாத நிலையில், இதுவே சரியா தருணம் என்று காய் நகர்த்தினார் ரிஷி. உட்கட்சியில் அவருக்கு இருந்த ஆதரவு காரணமாக தேர்தலில் போட்டியிடத் தேவையான குறைந்தபட்சம் 100 நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கி பெருகிக் கொண்டே வந்தது. பென்னி மோர்டாண்ட்டிற்கான ஆதரவு மந்தமாகவே இருந்தது.

பதவி ஆசை யாரை விட்டது என்ற கதையாக, பதவியிலிருந்து நிலைக்கு தள்ளப்பட்ட போரிஸ் ஜான்சன், கரீபியன் தீவுகளில் தனது விடுமுறையை முடித்துக் கொண்டு நாடு திரும்பி நானும் போட்டியில் உள்ளேன் என்று அறிவித்தார். அவரது ஜால்ரா கூட்டங்களும் அதை வரவேற்றன. பிரெக்சிட் வி'யத்தில் அவருடன் நின்றவர்களும், அவர் முன்னர் பிரதமராவதற்கு துணை நின்றவர்களும் கூட இம்முறை அவருக்குத் துணையாக இருக்கவில்லை. வெற்றி பெற வாய்ப்பில்லை என்றவுடன் போட்டியிலிருந்து விலகுவதாக அவர் அறிவித்தார். கட்சித்தலைவர் பதவிக்குப் போட்டியிட தேவையான 100 உறுப்பினர்களின் ஆதரவை பென்னியால் பெற முடியாமல் போக, ரிஷி சுனாக் போட்டியின்றி கட்சித் தலைவரானார், அதையடுத்து பிரதமர் பதவியும் அவருக்கு கிட்டியது.

இலங்கையில் நடைபெற்ற ஆட்சி மாற்றத்துடன் இப்போது பிரிட்டனில் நடைபெற்றுள்ளதை தொடர்புபடுத்திப் பார்க்க இயலும். இந்த ஆண்டு தொடக்கம் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்கள், அதையடுத்து உருவான பொருளாதார நெருக்கடிகள், அதன் காரணமாக "போர்க் குற்றச்சாட்டுக்களுக்கு" ஆளான முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நாட்டைவிட்டு வெளியேறு சிங்கப்பூரிலிருந்து பதவி விலகல் கடிதத்தை அனுப்பும் நிலை ஏற்பட்டது. அதற்கு முன்னர் தம்பி கோத்தாபய ஆட்சியில் தமையன் மஹிந்த பிரதமராக இருந்த நிலையில், அவரும் நாட்டில் ஏற்பட்ட நெருக்கடிகளை அடுத்து பதவி விலகும் நிலைக்குத் தள்ளப்பட்டார்.

"ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்" என்ற பழமொழிக்கு ஏற்ப சிங்களக் கட்சிகள் மற்றும் தலைவர்களிடையே ஒற்றுமை இல்லாத சூழலில், "ஆலை இல்லாத ஊரில் இலுப்பைப் பூ சர்க்கரை" என்ற கதையாக ரணில் விக்ரமசிங்க பிரதமர் பொறுப்பை ஏற்றார். அரசியலில் தன்மானம், சுயகௌரவம், நேர்மை, நீதி, சத்தியம் தர்மம் இதற்கெல்லாம் இடமில்லை என்று நீங்கள் கூறுவது காதில் விழுகிறது.

அந்த சமயத்தில் ராஜபக்சக்களுக்கு தம்மைக் காப்பாற்றிக்கொள்ள ஒரு பலி ஆடும், தன்னைக் காப்பாற்றிக்கொள்ள ரணிலுக்கு ஒரு பதவியும் தேவைப்பட்டது. இவை இரண்டும் ஒன்றோடு ஒன்று பொருந்திப் போக ரணில் பிரதமரானார். கோத்தா ராஜிநாமா செய்ய, பின் வாசல் வழியாக ஜனாதிபதியானார் ரணில் விக்ரமசிங்க. அதாவது நேரடியாகத் தேர்தலைச் சந்தித்து மக்கள் ஆணையைப் பெறாமல், எந்தக் கட்சியை எதிர்த்து அவர் அரசியல் செய்தாரோ அதே கட்சியின் "பினாமி" வேட்பாளராக நிறுத்தப்பட்டு ஜனாதிபதியானார் ரணில்.

தனது சொந்த தேர்தல் மாவட்டமான கொழும்பில் தோல்வியடைந்து, விகிதாச்சார அடிப்படையில் கிடைக்கப்பெற்ற ஒரேயொரு தேசியப் பட்டியல் ஆசனம் வேறு யாருக்கும் கிடைத்துவடக் கூடாது என்பதில் குறியாக இருந்து ஆறு மாதங்களுக்குப் பிறகு தன்னையே அந்தப் பதவிக்கு நியமித்துக் கொண்டு நாடாளுமன்றத்தில் நுழைந்தவர் தான் "நரி" என்று சிங்கள மக்களாலேயே அழைக்கப்படும் ரணில் விக்ரமசிங்க.

ரிஷி சுனாக்கும் யதார்த்தமாக நோக்கினால், பின் வாசல் வழியாக பதவிக்கு வந்தவர் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. கன்சர்வேட்டிவ் கட்சியில் ஏற்பட்ட குழப்பங்கள் காரணமாக, அக்கட்சியையும் தமது பதவிகளையும் காப்பாற்றிக் கொள்ளவே அதன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரிஷியை ஆதரித்தனர் என்று மூத்த செய்தியாளர்களும் மற்றும் நாடாளுமன்ற வட்டாரங்களும் தெரிவிக்கின்றன. ரிஷி சுனக்கின் கருத்துக்களும் அதையொட்டியே இருந்தன என்பதையும் மறுக்க முடியாது. கட்சியை ஒற்றுமைப்படுத்தி அடுத்த தேர்தலுக்கு (2024) தயார்படுத்த வேண்டிய தேவையுள்ளது அதுவே எனது தலையாய நோக்கம் என்று புதிய பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ரிஷி சுனாக் கூறியுள்ளார்.

அடுத்து 2024 ஆண்டோ அல்லது அதற்கு முன்னரோ நடைபெறக் கூடிய பொதுத்



தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கு வாய்ப்பு குறைவு என்று இப்போதே கருத்துக்கணிப்புகள் கூற ஆரம்பித்துவிட்டன. தேர்தல் எப்போது வேண்டுமானாலும் வரலாம் என்றாலும் இப்போதுள்ள நிலையில் கன்சர்வேடிவ் கட்சிக்குள் இப்போது நீறு பூத்த நெருப்பாகவுள்ள "ஒற்றுமை" நிலைக்குமா என்ற கேள்விகள் உள்ளன.

இலங்கையில் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ள ரணில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் சந்திக்கும் அதே வகையான நெருக்கடியை ரிஷி சுனாக்கும் சந்திக்கிறார். பிரிட்டிஷ் நாணயமான ஸ்டர்லிங் பவுண்ட்ஸ் தொடர்ந்து தளும்பல் நிலையிலேயே உள்ளது. அமெரிக்க டாலர் மற்றும் யூவோவிற்கு எதிராக அந்து எந்தளவிற்கு ஸ்திரப்பட்டு பின்னர் உயரும் என்பதற்கு உடனடியாக விடை இல்லை. ஆனால் நாட்டின் பொருளாதாரத்திலுள்ள குறைபாடுகள் மற்றும் ஓட்டைகளை சரி செய்து முன்னர் இருந்த ஆட்சியாளர்கள் விட்ட பிழையைச் சரி செய்ய தான் தீவிரமாகச் செயல்படவுள்ளதாக ரிஷி சுனாக் கூறுகிறார். உள்நாட்டில் உடனடியாக பொதுத் தேர்தலை நடத்தி புதிய ஆட்சிக்கு வழிகோலப்பட வேண்டும் என்று தொழிலாளர் கட்சியும், தாராளவாத ஜனநாயக கட்சியும் (லிபரல் டெமாக்ரட்ஸ்) வலியுறுத்துகின்றன. பொதுத் தேர்தல் விரைவாக நடைபெற்றால் கன்சர்வேடிவ் கட்சி வெற்றி பெறாது என்பது அவர்களின் நம்பிக்கை. இலங்கையிலும் ரணிலின் பதவிக் காலம் அடுத்த ஆண்டு-2024 நவம்பர் வரை மட்டுமே. அங்கும் புதிய தேர்தல்கள் நடத்தப்பட்டு அதன் மூலம் காத்திரமான ஒரு ஆட்சி ஏற்பட வேண்டும் என்ற குரல்கள் ஒலிக்க ஆரம்பித்துவிட்டன.




ஆனால் இரு நாடுகளிலும் இப்போதுள்ள சூழலில் தேர்தல் நடைபெற்றால், ஆளும் தரப்பில் பெரும்பாலானவர்கள் தோல்வியைத் தழுவும் வாய்ப்பே அதிகம் என்பதால் நாடாளுமன்றத்தை கலைப்பதில் தயக்கம் உள்ளது. இருந்தாலும் ரிஷி சுனாக்கின் தேர்வில் ஒரு செய்தியும் வெளியாகியுள்ளது. அதாவது ஜனநாயகத்தின் பிறப்பிடம் என்று அறியப்படும் பிரிட்டனில், வெள்ளையர் அல்லாத ஒருவர் பிரதமராக வர முடியும்.

ரிஷி சுனாக் அடிப்படையில் ஒரு பிரிட்டி'காரர். அதாவது பிரிட்டனிலேயே பிறந்து வளர்ந்து கல்வி கற்று அரசியலிற்கு வந்தவர். அவர்களது பெற்றோர் ஆப்ரிகாவில் பிறந்தவர்கள். தந்தை கென்யாவிலும் தாய் தான்சானியாவிலும் பிறந்தவர்கள். ரிஷியின் தாய் தந்தை ஆகிய இருவழி தாத்தா பாட்டியும் இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்பே அரச பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அரச பணிக்காக ஆப்ரிக்கா சென்றவர்கள். ஆனால் இந்தியாவில் தமிழ் நாடு தொடங்கி பஞ்சாப் வரையில் ரிஷி சுனாக் என்னவோ திருச்சியிலோ அல்லது ஜலந்தரிலோ பிறந்து கடந்த ஆண்டு தான் பிரிட்டன் சென்று அந்நாட்டிற்கே பிரதமர் ஆகிவிட்டது போன்று குதூகலிக்கின்றனர்.

இதே போன்றதொரு அர்த்தமற்ற ஆர்ப்பரிப்பு கமலா ஹாரிஸ் அம்மையார் அமெரிக்காவின் துணை ஜனாதிபதியாகத் தேர்வான போதும் நடைபெற்றது. எப்படி கமலா ஹாரிஸ் அமெரிக்க நலன்களையே முன்னிலைப்படுத்திச் செயல்படுவாரோ அதே போன்று ரிஷ் சுனாக்கும் பிரித்தானிய நலன்களையே முன்னிலைப்படுத்துவார், அதைத்தான் அவர் செய்யவும் வேண்டும். அதைப் புரிந்துகொள்ளாமல் இந்தியாவிலுள்ளவர்கள் உளறுவது அறியாமையின் உச்சக்கட்டம். தமிழ்நாட்டிலுள்ள ஒரு விஸ்வகர்மா சங்கத்தினர் அவரை பாராட்டி அடித்துள்ள விளம்பரங்கள் இன்னும் அபத்தமானவை.

எனினும், இதற்கெல்லாம் அப்பாற்பட்டு பிரிட்டனில் வெள்ளையர் அல்லாத ஒருவர் நாட்டின் தலைமைப் பொறுப்பிற்கும் வர முடிந்துள்ளது. ஆனால் இலங்கையில் சிங்களவர் அல்லாத ஒருவர் நாட்டின் உயர் பதவி அல்ல, இரண்டாவது மூன்றாவது நிலையிலுள்ள பதவிக்கு கூட வர இயலாது. இலங்கைக்கான புதிய அரசியல் யாப்பு எழுதப்படும் போது அப்படியான ஒரு வழிமுறை இருக்க வேண்டும்.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# ஒன்ராறியோ இந்து சமயப்பேரவை 22ஆவது வருடமாக நடத்தும் திருமுறை முற்றோதல் பூர்த்தியை முன்னிட்டு நடைபெறும் திருமுறை விழா சிறார்களுக்கான போட்டிகள்



## போட்டிகள் நடைபெறும் இடம்: ஆத்மஜோதி இல்லம்

**1473 BIRCHMOUNT ROAD, (Birchmount & Ellesmere)**

**திருமுறை மனனப் போட்டி**

நவம்பர் 12, 2022 சனிக்கிழமை பி.ப. 3மணிக்கு நடைபெறும்

**பேச்சுப் போட்டி**

நவம்பர் 13, 2022 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3மணிக்கு நடைபெறும்

# திருமுறைவிழா 2022

## இடம்: சன்னிதி முருகன் ஆலயம்

1085 Bellamy Road, Unit 7-8, Scarborough, Ontario

காலம்: நவம்பர் 19 சனிக்கிழமை (19-11-2022) மாலை 3:00 மணி - இரவு 9:00 மணி வரை

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

| | | | | |
|---|---|---|---|---|
| கீழ்ப்பிரிவு: | 31-10-2013 | - | 1-10-2016 | க்கும் இடைப்பட்டவர்கள் |
| மத்தியபிரிவு: | 31-10-2010 | - | 1-10-2013 | க்கும் இடைப்பட்டவர்கள் |
| மேற்பிரிவு: | 31-10-2006 | - | 1-10-2010 | க்கும் இடைப்பட்டவர்கள் |

**பேச்சுப் போட்டி விடயங்களை விண்ணப்படிவத்துடன் கேட்டுப் பெற்றுக்கொள்ளவும்.**

திருமுறைப் மனனப் போட்டிக்கு தேவையான பாடல்கள் யாவற்றையும் இந்து சமயப் பேரவை வெளியீடான பயன்தரவல்ல திருமுறைப்பாக்கள் என்ற நூலில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி ஒக்டோபர் 31, 2022**

**விண்ணப்பக் கட்டணம் போட்டி ஒன்றுக்கு 10 டொலர்**

**தொடர்புகளுக்கு**
Siva. Muthulingam
Arthmajothy Illam
1473, Birchmount Road
Scarborough, ON. M1P 2G4

**விண்ணப்பப் படிவமும் மனனம் பண்ணும் பேச்சுப் போட்டிக்குரிய விடயமும் கிடைக்கும் இடம்**
முருகன் புத்தகசாலை,
GTA MALL 5215 Finch Ave. E. 416-321-0285
**ஆத்மஜோதி இல்லம்** 1473 BIRCHMOUNT ROAD
416-724-6240

சகல போட்டிகளிலும் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு பொற்கிழி வழங்கப்படும். 1ஆம் 2ஆம் 3ஆம் இடம் பெறும் மாணவர்களுக்கு வெற்றிக் கிண்ணமும் பங்கு பற்றும் சகல மாணவர்களுக்கும் ஆறுதல் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு: 416-724-6240**
**416-278-7445**

**ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை, கனடா**

ROYAAL TOURS







# CHIANG MAI (THAILAND), CAMBODIA, VIETNAM, BALI (INDONESIA) & MALAYSIA

THE GOLDEN TRIANGLE - Myanmar (Burma), Laos & Thailand

5 countries

**$6599**

Jan 23rd to Feb 14th, 2023

21 days tour!

## All Tours are All Inclusive

(Ticket, Breakfast, Lunch, Dinner, Transportation and Entering Fees)

** Travel Insurance Not Included * Visa for the countries not included*

# SOUTH INDIAN TOUR ALL TEMPLES






**$4599**

March 1st to 17th, 2023

17 days tour!

**BALAN: 647-657-0848**

**atoz_balan@yahoo.com**

*The tours will be departuring from and arriving at Toronto Pearson Airport*

## யாழ். நகரில் Hotel விற்பனைக்குண்டு

**யாழ். நகரில்**
**SKY LIGHT QUEST Inn Hotel**
**விற்பனைக்குண்டு**



*3 Triple rooms (AC, TV, attached bathroom)*
*3 Double rooms (AC, TV, attached bathroom)*
*3 Double rooms (attached bathroom )*
*3 Single rooms (attached bathroom )*
*3 Single rooms (outside bathroom)*
*2 Double rooms (with kitchen, hall and bathroom)*

7 வருடங்கள், யாழ். நகரில் இருந்து 1Km தூரத்தில் பலாலி வீதியில், இல. 1, 2nd Lane, Palaly Road, Jaffna வில் போதிய வருமானத்துடன் நல்ல பராமரிப்புடனும் இயங்கிக் கொண்டிருக்கும் Hotel விற்பனைக்குண்டு.

Google இல் சென்று SKY LIGHT Quest Inn, Jaffna என்று பார்வையிடுவதன் மூலம் எல்லா விபரங்களையும் பெற்றுக்கொள்ளலாம். விலை 7,50,000$ (கனடிய டொலரில்)

**மேலதிக விபரங்களிற்கு 94 77 059 6776**

**94 76 022 6746 இல் whatsapp ல் தொடர்பில் கொள்ளலாம்.**

## Important Message for all Sri Lankan Pensioners

The Annual General Meeting of the Ontario Sri Lankan Pensioners Association will be held on Saturday 29th of October 2022 from 9am at Council Chambers, Scarborough Civic Centre, 150 Borough Drive, Scarborough ON M1P 4N7.

1) The Meeting will be held at the Council Chambers of the Scarborough Civic Centre.
2) The Consul General of Sri Lanka in Toronto will be the Chief Guest at this function.
3) All Sri Lankan Pensioners whether members or non- members are Invited.
4) Lunch and Refreshments will be served at this Function.
5) Methods of Withdrawal of Funds from Canada from the Pensions Account will be Favourably discussed.
6) All Pensioners, please inform your Presence and also whether non Vegetarian or Vegetarian Lunch preferred to any one of the following Office Bearers:

Mr. Maya Kandiah
Email: mayakandiah@yahoo.ca
Tel: (416) 895-8111

Mr. Sundar Rajalingam
Email: sundar114@gmail.com
Tel: (416) 454-6360

Mr. N. Sathananthan
Email: satha41@gmail.com
Tel: (416) 908-1156

Mr. A. Kaneshalingam
Email: kanesh1946@gmail.com
Tel: (437) 778-1904

7) Any Outstanding Problem, please come with a letter with details.
8) Please inform your friends, contacts and other Sri Lankan Pensioners.
9) No individual Invitations will be sent.

Please Come, Meet, Greet and Enjoy before the Cold Winter Prevents You.
Mr. Sundar Rajalingam will Email those who have Email facility.

Thank you,

R. Ragupathy, Hon.Secretary, OSPA
ragucanada@gmail.com
Tel: (437) 779-5995

# 'கோவையில் நடந்தது தற்கொலைப்படைத் தாக்குதல்' அண்ணாமலை குற்றச்சாட்டு

கோவையில் நடந்தது தற்கொலைப்படைத் தாக்குதல். கோவையில் கார் வெடி விபத்தில் இறந்த நபரின் வீடுகளில் சோதனை நடத்தியபோது கிட்டத்தட்ட 55 கிலோ அம்மோனியம் நைட்ரேட், பொட்டாசியம், சோடியம், ஃப்யூஸ் வயர்ஸ், 7 ஓல்ட் பேட்டரி இவை அனைத்தையும் கைபற்றியுள்ளனர். இந்த தகவலை காவல்துறை இன்னும் தெரிவிக்கவில்லை. தமிழக அரசு ஏன் இந்த தகவலை வெளியிட மறுக்கிறது என்று தெரியவில்லை'' என்று பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.சென்னையில் பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை இன்று செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் கூறியது: " தீபாவளிக்கு முன்தினம் அக்.23, கோயம்புத்தூரில் கோட்டை ஈஸ்வரன் கோயில் முன்பு அதிகாலை 4 மணிக்கு ஒரு கார் விபத்து நிகழ்ந்ததாக செய்தி வந்தது. பின்னர், அந்தக் காரிலிருந்த சிலிண்டர் வெடித்துள்ளது என்று செய்தி வந்தது. அதன்பிறகு தமிழக காவல்துறை டிஜிபி, ஏடிஜிபி போன்றோர் விரைந்து கோவை சென்றனர்.பின்னர், மாலைக்குள் ஒரு 6 தனிப்படைகள் அமைத்தனர். அதன்பிறகு எந்த செய்தியும் இல்லை. பாஜக வலியுறுத்திய பின்னர், சிலிண்டர் வெடித்து விபத்து நிகழ்ந்ததாக டிஜிபி செய்தியாளர்களிடம் கூறினார். இதில் உண்மையை சொல்ல வேண்டிய கடமை பாஜகவுக்கு உள்ளது.

கோவை மாநகரம் என்பது தீவிரவாதிகளின் கூடாரமாக மாறியிருக்கிறது என்பது ஜூன் 2019 ல் அனைவருக்கும் தெரியவந்தது. 1998ல் நடந்த வெடிகுண்டு விபத்தில் 58 அப்பாவிகள் பலியாகினர். அத்தனை சென்சிட்டிவான ஒரு பகுதி. அதன்பின்னர் ஜூன் 2019ல் என்ஐஏ 5 நபர்களை கோவையில் இருந்து கைது செய்தனர். அவர்கள் அனைவருமே முகமது



அசாருதீன் என்பவர் மூலம், கேரளாவில் இருக்கும் அபுபக்கர் என்பவரோடு தொடர்புடையவர்கள்.அவர்கள் இருவருமே இலங்கையில் ஒரு தேவாலயத்தில் ஈஸ்டா அன்று நடந்த தற்கொலைப்படைத் தாக்குதல் நடக்க முக்கிய காரணமாக இருந்த ஐஎஸ்ஐஎஸ் அமைப்பு மற்றும் ஜெஹ்ரான் ஹாஸ்மி ஆகியோருடன் தொடர்பில் இருந்தவர்கள். இவர்கள் பேஸ்புக், டெலிகிராம் மூலம் தொடர்பில் இருந்துள்ளனர். நிறைய மனிதர்களை மூளைச்சலவை செய்து, ஒரே நாளில் ஏப்.21, 2019ல் 3 தேவாலயங்கள், 3 உயர்தர நட்சத்திர விடுதிகள், வேறு வேறு நிறுவனங்கள் என தாக்குதல் நடத்தி ஈஸ்டர் தினத்தில் கிட்டத்தட்ட 269 பேர் உயிரிழந்தனர்.

இந்த விசாரணை சிரியா, துருக்கி என சர்வதேச அளவில் நடந்தது. அதன் விசாரணை இந்தியாவில் குறிப்பாக கோவைக்கு அருகில் இருக்கும் பாலக்காட்டில் நடந்தது. இதில் பாலக்காட்டில் அபுபக்கர், கோவையில் அசாருதீன் ஆகியோர் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளனர். இதில் தொடர்பு இருக்கலாம் என்ற வகையில், காவல்துறை சில/ர்டம் விசாரணை நடத்தினர். ஜமேசா முபீனிடமும் அந்த விசாரணை நடத்தப்பட்டது. அக்.23 விபத்திலும் காரை ஓட்டி வந்து விபத்து ஏற்படுத்திய நபர் ஜமேசா முபீன் என்று காவல்துறை தெரிவித்துள்ளது. இது தீவிரவாத தாக்குதல் என்பதை ஒப்புக்கொண்டு அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்க பாஜக வலியுறுத்தியும்கூட காதில் விழாத மாநில அரசு, காவல்துறை இந்த விபத்து ஏதோ எல்பிஜி சிலிண்டர் வெடித்தது போலவே ஒரு ஜோடனையை செய்து கொண்டுள்ளனர்.பின்னர், அந்த இறந்த நபரின் வீடுகளில் சோதனை நடத்தியபோது கிட்டத்தட்ட 55 கிலோ அம்மோனியம் நைட்ரேட், பொட்டாசியம், சோடியம், ஃப்யூஸ் வயர்ஸ், 7 ஓல்ட் பேட்டரி இவை அனைத்தையும் கைபற்றியுள்ளனர். இந்த தகவலை காவல்துறை இன்னும் தெரிவிக்கவில்லை. தமிழக அரசு ஏன் இந்த தகவலை வெளியிட மறுக்கிறது என்று தெரியவில்லை.கோவையில் நடந்தது தற்கொலைப்படை தாக்குதல்.

இரண்டு தினங்களுக்கு முன், காரை ஓட்டி இறந்த ஜமேசா முபீன் தனது வாட்ஸ்அப் ஸ்டேட்டஸை மாற்றியுள்ளார். If the news about my death reaches you forgive my mistake. come particpate in my janesha and pray for me என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். அதாவது, என்னுடைய இறப்பு செய்தி உங்களுக்கு தெரியும் முன்பு நான் செய்த தவறை மன்னித்து விடுங்கள் என் குற்றங்களை மறந்துவிடுங்கள் என் இறுதிச்சடங்கில் பங்கேறுங்கள், எனக்காக வழிபாடு செய்யுங்கள் என்று பதிவிட்டுள்ளார். இது ஐஎஸ்ஐஎஸ் படையில் தற்கொலைப்படை தாக்குதல் நடத்துபவர்கள் பயன்படுத்தும் அதே வார்த்தைகள்'' என்று அவர் கூறினார்.

# கரோனா ஊரடங்குக்கு பிறகு புதிய சாதனை: நாடு முழுவதும் பட்டாசு வர்த்தகம் ரூ.6 ஆயிரம் கோடியை கடந்தது



கரோனா ஊரடங்குக்கு பிறகு இந்த ஆண்டு தீபாவளி களைகட்டியதால், நாடு முழுவதும் ரூ.6 ஆயிரம் கோடிக்கு மேல் பட்டாசு விற்பனை நடந்துள்ளது. சிவகாசி சுற்று வட்டாரப் பகுதிகளில் 1,070 பட்டாசு ஆலைகள் உள்ளன. இங்கு நாட்டின் மொத்த உற்பத்தியில் 95 சதவீதத்துக்கு மேல் தயாராகிறது. சிவகாசி பட்டாசு ஆலைகளில் 5 லட்சம் தொழிலாளர்கள் நேரடி வேலை வாய்ப்பு பெறுகின்றனர். 2015ல் உச்ச நீதிமன்ற வழக்கின் மூலம் பட்டாசு தொழிலுக்கு பிரச்சினை தொடங்கியது.


பேரியம் நைட்ரேட் பயன்படுத்த தடை, சரவெடிகளுக்கு தடை, சுற்றுச் சூழல் கட்டுப்பாடுகள், நீதிமன்றக் கட்டுப்பாடு, பசுமைப் பட்டாசு மட்டுமே தயாரிக்கஅனுமதி, சீன பட்டாசுகள் வருகை உள்ளிட்ட காரணங்களால் சிவகாசி பட்டாசு உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டது.கடந்த 2 ஆண்டுகளாக கரோனா ஊரடங்கால் பட்டாசு உற்பத்தி மற்றும் விற்பனை முடங்கியது. இந்த ஆண்டு மூலப் பொருட்கள் தட்டுப்பாடு, உச்ச நீதிமன்ற விதிகளை மீறியதாக 60 பட்டாசு ஆலைகளின் உரிமத்தை ரத்து செய்தது, மூலப்பொருட்கள் மற்றும் பட்டாசுகளை இருப்பு வைக்க விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளால் பட்டாசு உற்பத்தி குறைந்தது. ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபரில் தீபாவளி சீசன் உற்பத்தி தொடர் மழையால் பாதிக்கப்பட்டது.

ஆனாலும் வழக்கம்போல் இந்த ஆண்டு தீபாவளிக்கு 20க்கும் மேற்பட்ட புதிய ரக பட்டாசுகள் அறிமுகப்படுத்தப்பட்டன. கடந்த 2 ஆண்டுகளாக கரோனா ஊரடங்கால் தீபாவளியை சிறப்பாகக் கொண்டாட முடியாததால், இந்த முறை அதிக ஆர்வத்துடன் சிவகாசியில் பட்டாசு வாங்க பொதுமக்கள் திரண்டனர். இதனால் உற்பத்தியான பட்டாசுகள் அனைத்தும் விற்று தீர்ந்தன. நாடு முழுவதும் இந்த ஆண்டு ரூ.6 ஆயிரம் கோடி அளவுக்கு பட்டாசு விற்பனை நடந்துள்ளது.குறிப்பாக மகாராஷ்ட்ரா, குஜராத், உத்தரப்பிரதேசம், ஆந்திரா, கர்நாடகா, ராஜஸ்தான், மேற்கு வங்காளம், பிகார் உள்ளிட்ட மாநிலங்களில் அதிக அளவு விற்பனை நடந்துள்ளது. தமிழகத்தில் பட்டாசு வர்த்தகம் ரூ.400 கோடியை கடந்துள்ளது. சென்னையில் மட்டும் ரூ.150 கோடிக்கு பட்டாசு வர்த்தகம் நடந்துள்ளது. மூலப்பொருட்கள் விலையேற்றம் மற்றும் உற்பத்தி குறைவால் இந்த ஆண்டு பட்டாசு விலை 20 முதல் 40 சதவீதம் வரை உயர்ந்தது. தமிழ்நாடு பட்டாசு மற்றும் கேப் வெடி உற்பத்தியாளர் சங்க (டான்பாமா) தலைவர் கணேசன் கூறுகையில், 'இந்த ஆண்டு பட்டாசு வாங்க மக்களிடம் அதிக ஆர்வம் இருந்தது. நாடு முழுவதும் ரூ.6 ஆயிரம் கோடி அளவுக்கு பட்டாசு விற்பனை நடந்துள்ளது. இது கடந்த ஆண்டை விட 30 சதவீதம் அதிகம்' என்றார்.

# தமிழக கோயில்களில் உள் பிரகாரத்தில் யாகங்கள் நடத்த அனுமதிக்கக்கூடாது: உயர் நீதிமன்றக் கிளை உத்தரவு

தமிழக கோயில்களில் உள் பிரகாரத்தில் தனி நபர் யாகங்கள், சிறப்பு யாகங்கள் நடத்த அனுமதிக்கக்கூடாது என உயர் நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டுள்ளது.தூத்துக்குடி மாவட்ட பாஜக செயலாளர் சித்ரங்கநாதன் உயர் நீதிமன்ற கிளையில் தாக்கல் செய்த மனுவில்: "திருச்செந்தூர் முருகன் கோயிலில் கந்த சஷ்டி திருவிழா 2022 அக்டோபர் 25 முதல் 2022 அக்டோபர் 30 ஆம் தேதி வரை நடைபெறும். அக்டோபர் 30 ஆம் தேதி சூரசம்ஹார நிகழ்ச்சி நடைபெறும்.

திருச்செந்தூர் முருகன் கோயிலில் உள் பிரகாரத்தில் பக்தர்கள் தங்கி விரதம் இருப்பது வழக்கம் ஆனால், இந்த வருடம் திருச்செந்தூர் முருகன் கோயிலில் உள் பிரகாரத்தில் பக்தர்கள் தங்கி விரதம் இருக்க அனுமதி அளிக்கவில்லை. எனவே,



திருச்செந்தூர் முருகன் கோயிலில் உள் பிரகாரத்தில் கந்த சஷ்டி விரதம் இருப்பவர்களுக்கு இடம் ஒதுக்க உத்தரவிட வேண்டும்.'' என்று மனுவில் கூறப்பட்டு இருந்தது.

இந்த மனு நீதிபதிகள் ஆர்.மகாதேவன், ஜெ. சத்ய நாராயண பிரசாத் அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் திருச்செந்தூர், பழனி, மதுரை மீனாட்சி அம்மன் கோயில், ராமேஸ்வரம் கோயில் உட்பட தமிழகத்தில் உள்ள அனைத்து கோயில்களிலும் திருப்பதி கோயிலில் உள்ளது போன்ற கட்டுபாடுகளை கொண்டு வர வேண்டும். தமிழகத்தில் கோயில் வளாகத்திற்குள் யாகத்திற்கு அனுமதி அளிக்கக் கூடாது. யாகங்கள் கோயிலின் வெளியே நடைபெற வேண்டும். தமிழகத்தில் இந்து அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து கோயில்களிலும் ஒரே மாதிரியான நடைமுறைகளை, கட்டுப்பாடுகளை பின்பற்ற வேண்டும்'' என நீதிபதிகள் கூறினர். மேலும் மனு தொடர்பாக திருச்செந்தூர் முருகன் கோயில் இணை ஆணையர் விளக்கம் அளிக்க உத்தரவிட்டதுடன், விசாரணையை நவம்பர் 15 ஆம் தேதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டனர்.

# தீர்வுகுறித்த வாக்கெடுப்பு அவசியம்!



**வி.தேவராஜ்**
**மூத்த ஊடகவியலாளர்**

• "**தீ**ர்வு" சாத்தான்கள் ஓதும் வேதம்.

"அரசியல் தீர்வு" மீண்டும் பேசு பொருளாக வந்துள்ளது. ஐ. தே. க. தலைவரும் ஜனாதிபதியுமான ரணில்விக்ரமசிங்க அதனை தொடக்கி வைத்துள்ளார். வழமையாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் ஐயா அவர்கள் ஒவ்வொரு புது வருடத்தின் போதும், தீபாவளியின் போதும் பொங்கல் பண்டிகையின் போதும் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வருவதாக ஆரூடம் கூறிக் கொண்டிருந்தார். இந்த ஆரூடம் பலிக்காது போகவே சத்தமின்றி அதனை அவர் நிறுத்திக் கொண்டார். தற்போது சம்பந்தன் ஐயாவின் பாணியில் ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்க இவ்வருட தீபாவளி நாளில் தொடக்கி வைத்துள்ளார். ஜனாதிபதியைத் தொடர்ந்து பிரதமர் தினேஸ் குணவர்தனவும் தமிழர் பிரச்சனைக்கான தீர்வுக்கு இதுவே இறுதி சந்தர்ப்பம் என்றும் தமிழர் தரப்பு இந்தச் சந்தர்ப்பத்தை தவறவிடக் கூடாது என்றும் தமிழர் தரப்பிற்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

• கூட்டமைப்பு வரவேற்பு

ஜனாதிபதியின் அரசியல் தீர்வு குறித்த அறிவிப்பு வந்தவுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் எம். பி. வரவேற்று ஜனாதிபதியின் முயற்சிக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவதாக அறிவித்துள்ளார். ஜனாதிபதியின் தீபாவளி நிகழ்வில் கலந்து கொண்ட தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட எம்.பியுமான மனோ கணேசனும் வரவேற்பதாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளார். ஜனாதிபதியின் அரசியல் தீர்வு குறித்த விடயத்தில் மலையகம் குறித்தும் கவனம் செலுத்துமாறும் தீர்வுப் பொதிக்குள் மலையகத்தையும் உள்ளடக்குமாறும் ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டதாக மனோ கணேசன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

தேசிய இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு புதிய அரசமைப்பு மூலம் கிடைக்கும் .ஒருவருடத்திற்குள் இந்தப் பணிகள் முற்றுப்பெற வேண்டும் என்பதே எனது நோக்கம் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசியல் தீர்வு புதிய அரசியலமைப்பின் மூலம் கிடைக்கும். இது தொடர்பில் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியும் வருகின்றேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மொத்தத்தில் ரணில் - மஹிந்ததரப்பினர் தமக்கான அரசியல் நிகழ்ச்சி நிரலை நோக்கி காய்களை நகர்த்தத் தொடங்கிவிட்டனர்.

தீர்வை முன் வையுங்கள் என்றால் தமிழர் தரப்பு கோபித்துக் கொள்கின்றது. தீர்வை முன் வைத்து இனவிவகாரத்துக்குத் தீர்வு காணுங்கள் என்று அரசாங்கத்தரப்பிடமும் தென்னிலங்கை சக்திகளிடமும் கோரிக்கை முன் வைத்தால் தமிழர் தரப்பு இனவாதத்தை வளர்ப்பதாகவும் நாட்டைப் பிளவுபடுத்த முயல்வதாகவும் கண்டனக் கருத்துக்கள் சீறிப் பாய்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் தீர்வை முன்வைத்து இனவிவகாரத்துக்கு முடிவுகட்டி தென்னிலங்கை பேசுகின்ற "தமிழ்ப் பயங்கரவாதத்தை ஓரம் கட்டுங்கள் என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டபோது தமிழ்ப் பத்திரிகையாளர் மீது புலி முத்திரை குத்தப்பட்டது.

அமைதி திரும்பியதாகக் கூறப்படும் இன்றைய நிலையிலும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைஇ அதிகாரப் பகிர்வு என்பனகுறித்துப் பேசினால் அது நாடு பிளவுபடுவதற்கு வழிவகுப்பதாக குற்றம் சுமத்தப்படுகின்றது. ஏனெனில் தென்னிலங்கையின் கருத்தியலில் தமிழ் மக்கள் கொண்டுள்ள அரசியல் அபிலாஷை, அதிகாரப்பகிர்வுகுறித்த கோரிக்கை என்பன பிரிவினைவாதமாகச் சித்தரிக்கப்படுகின்றது.

பிரிவினைவாத முத்திரை குத்தப்படுகின்றது என்பதற்காக தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாஷைகளை விட்டுக் கொடுப்பதற்கோ அல்லது தமது அதிகாரப் பகிர்வுகுறித்த கோரிக்கையை சலுகை அரசியலுக்காக தாரை வார்த்துக் கொடுக்கவோ தயாராக இல்லை என்பதை தமிழ் மக்கள் தமது அரசியல் பயணத்தில் பலமுறை பதிவு செய்துள்ளனர்.

இதனை மையமாக வைத்தே அரசியல் தீர்வுப் பொதியை தமிழ்த் தலைமைத்துவங்கள் முன்வைக்கவேண்டும், அரசாங்கத்தரப்புடன் பேச்சு வார்த்தைக்குச் செல்லும்போது தமிழர்தரப்பு வெறும் கையுடன் பேச்சு வார்த்தை மேசைக்கு செல்லாது தீர்வுப் பொதியுடன் செல்ல வேண்டுமென எனது அரசியல் பத்தியில் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டது.

இந்தக் கோரிக்கை சில தமிழ்த் தலைமைத்துவங்களுக்கு எரிச்சல் ஊட்டுவதாக அவ் வேளையில் இருந்தது.

கடந்த பத்து வருடங்களுக்கு முன் ( 10.02.2012) அன்று பழம்பெரும் தமிழ்க் கட்சியொன்றின் மூத்த, பழுத்த அரசியல்வாதியுமான ஒரு புத்திஜீவி இவ்வாறு தெரிவித்தார்.

• தீர்வுகுறித்த பொதி இன்றி தமிழ் தலைமைத்துவங்கள்

"இன்றைய தமிழ்த் தலைமைகளிடம் அரசியல் தீர்வுகுறித்த எந்தவிதமான யோசனைகளும் அவர்கள் கைவசம் இல்லை.தீர்வு இருப்பதாக கூட்டங்களிலும் ஊடகங்களிலும் கூறினாலும்கூட அந்த ஆவணத்தை காட்டுவதற்கு அவர்கள் தயாராக இல்லை. மக்களை முட்டாள்களாக்கி தொடர்ந்தும் "கதிரை அரசியல்" நடத்த முனைகின்றனர் என்று தெரிவித்தார்.

அத்துடன் அவர் நின்றுவிடவில்லை இன்றைய தமிழ் தலைமைத்துவ பரம்பரை தமிழர் அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொள்ள வேண்டும். உழைப்பதற்கல்ல அரசியல் மக்களின் சேவைக்கே அரசியல் தேவை என்ற அடிப்படையில் மக்களுக்காக இதய சுத்தியுடன் பணியாற்றக் கூடியவர்களின் அரசியல் பிரவேசமே இன்றைக்குத் தேவை. ஏனெனில் இன்றைய தமிழ்த் தலைமைத்துவங்கள் அநாதைகளாக்கப்பட்டுள்ள தமிழ்ச் சமூகத்தை மீட்கும் நிலையில் இல்லை என்றும் தெரிவித்தார்.

2012 இல் தமிழர் தரப்பில் கூறப்பட்ட கருத்தியலைத்தான் இன்று தென்னிலங்கை மாற்றத்தை விரும்பும் சக்திகளான "அரகலய" பேசுகின்றது.

2009 இல் போர் மௌனிக்கப்பட்ட பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதியாக மார்தட்டிக் கொண்டிருந்த வேளை 2012 ஆம் ஆண்டு மேற்கூறிய வார்த்தைகள் வெளிவந்திருந்தன. அதற்குப் பிறகு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ரணில் விக்ரமசிங்க மற்றும் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்துடன் இன விவகாரத் தீர்வுக்கென பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியது. இறுதியில் பேச்சு வார்த்தை வெற்றி அளிக்கவில்லை, ஒரு அங்குலம்தானும் நகரவில்லை என்பனபோன்ற வார்த்தைகளுடன் கூட்டமைப்பு முடித்துக் கொண்டது.

2009க்கு பிந்திய கடந்த 13 வருடங்களும் இவ்வாறே கடந்து போயுள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்தை தாமே கொண்டு வந்ததாக பெருமை பேசிய கூட்டமைப்பு தலைவர்களால் இன விவகாரத்துக்கான தீர்வினை நல்லாட்சி காலத்தில் ஒரு அங்குலம்தானும் நகர்த்த முடியாது போயிற்று.

தற்போதைய ரணில் - மஹிந்த அரசாங்கத்தின் "ஒட்சிசன்" மஹிந்த தரப்பினரே அன்றி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அல்ல. அந்தவகையில் இன விவகாரத் தீர்வுக்கான பொதியுடனான அரசியலமைப்பு உயிர் பெறுமா என்பது சந்தேகமே. எனினும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் இன்றைய அறிவிப்பு ரணில் - மஹிந்த அணியினரின் அரசியல் எதிர்காலத்தை நோக்கிய நகர்வுக்கான வியூகமே அன்றி வேறு ஒன்றும் இல்லை. இந்த வியூகத்தை நகர்த்தவே "சொல்ஹெம் பொறி" களம் இறக்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கை அரசியல்வாதிகள் காலத்துக்குக் காலம் ஓதுகின்ற "சாத்தான் வேதத்தை" வைத்து இன்றைய தமிழ்த் தலைமைத்துவங்கள் தமிழ் மக்களை எவ்வளவு காலத்துக்கு இருட்டுக் குகைக்குள் தீர்வைத் தேடும் பயணத்தைத் தொடரப் போகின்றன. எவ்வளவு காலத்திற்கு பேரினவாத வேதாளம் முருங்கை மரம் ஏறும் கதையைக் கூறப்போகின்றனர். இதற்கு முற்றுப் புள்ளி இடப்பட வேண்டும்.

தமிழ் மக்களுக்கு இன்று தேவை ஒரு சர்வசன வாக்கெடுப்பு. அது தாயகத்திலும் புலம் பெயர் தேசங்களிலும் ஒருசேர நடத்தப்பட வேண்டும்.

இந்த வாக்கெடுப்பு தமக்கான அரசியல் தீர்வை தமிழ் மக்களே தீர்மானிப்பதாகவும் இருக்க வேண்டும். இலங்கைக்கும் சர்வதேசத்திற்கும் தமிழ் மக்களின் இந்தத் தீர்வு ஒட்டு மொத்த சர்வதேசத்திற்கும் செய்தியாக இருக்க வேண்டும்.

ஏனெனில் 2012 ஆம் ஆண்டளவில் இலங்கைக்கு விஜயம் செய்த பிரிட்டிஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு தமது நிலைப்பாடுபற்றி தெரிவிக்கையில் "நாட்டன் இனப் பிரச்சனைக்கான அரசியல் தீர்வென்பது எமது கைகளில் இல்லை. அதற்குத் தேவையான ஒத்துழைப்புக்களையே எம்மால் வழங்க முடியும் என்று தெரிவித்தது.

ஆனால் சர்வதேச பூகோள அரசியல் கள நிலவரம் அதுவல்ல என்பது தமிழ் மக்கள் அறிவர். தமிழ் மக்களின் அரசியல் தலைவிதியை தீர்மானிக்கும் பெரும் சக்தியாக சர்வதேசமே உள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.

சர்வதேசத்துக்கான செய்தியாக வாக்கெடுப்பு செய்தி அமையட்டும்!

Email : vathevaraj@gmail.com



# தொடரும் நெருக்கடி: மாற்றுத்திறனாளிகள் உட்பட 4 பேர் தமிழகத்தில் தஞ்சம்


- எமது யாழ் செய்தியாளர்



இலங்கையில் இருந்து ராமேஸ்வரம் -தனுஷ்கோடி இடையே உள்ள கோதண்டராமர் கோவில் கடற்கரைக்கு இரு மாற்றுத்திறனாளிகளான கணவன் மற்றும் மனைவி உட்பட நால்வர் சென்றடைந்துள்ளனர்.

இலங்கையில் தொடரும் பொருளாதார நெருக்கடியால் வாழ வழியில்லாமல் தவித்து வரும் அப்பாவி மக்கள் அபயம் தேடி இந்தியாவிற்கு (ராமேஸ்வரத்திற்கு) அகதிகளாக செல்வது தொடர்ந்து வருகிறது.

இந்தநிலையில் இலங்கை திருகோணமலை திருக்கடலூர் எண்-514, கோவிந்தன் வீதியைச்சேர்ந்த மாற்றுத்திறனாளியான ஜெ.ஜனார்த்தன் (29), மாற்றுத்திறனாளியான. அவரது மனைவி பிரவீனா (26), மகன்கள் சுதர்சன் (09), சுதிசன் (05) ஆகியோர் மன்னாரில் இருந்து புறப்பட்டு படகு கட்டணமாக 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் கொடுத்து ஞாயிறு (23) இரவு 8 மணிக்கு பிளாஸ்டிக்படகு மூலம் ராமேஸ்வரம் சென்றடைந்துள்ளனர்.



தனுஷ்கோடியில் உள்ள கோதண்டராமர் கோவில் கடற்கரையில் இறக்கிவிட்டு படகு திரும்பிச்சென்றுள்ளது.

கடலோர பாதுகாப்பு குழுமப் போலீசார் இவர்களை மண்டபத்தில் உள்ள கடலோர பாதுகாப்பு போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணைசெய்து மண்டபம் முகாமிற்கு அனுப்பி வைத்தனர்.



# யாழ்ப்பாணக் கல்லூரிக்கு முதல் பெண் அதிபர் நியமனம்

- எமது யாழ் செய்தியாளர்

இலங்கையில் 200 ஆண்டுகால வரலாறு கொண்ட யாழ்ப்பாணக் கல்லூரிக்கு முதல் தடவையாக ஓர் பெண் அதிபராக நியமனம் செய்யப்படுகின்றார்.

1823 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட யாழ்ப்பாணக் கல்லூரியின் 17 ஆவது அதிபராக ஓர் பெண் பொறுப்பேற்கவுள்ளவர் என அக்கல்லூரியின் பணிப்பாளர் சபை தற்போது உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளனர்.

திருமதி. ருஷிரா குலசிங்கம் 2023 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபராகச் செயல்படுவார் எனவும் அக்கல்லூரியின் பணிப்பாளர் சபை குறிப்பிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் முதல் பெண் அதிபராக திருமதி. ருஷிரா குலசிங்கம் தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் வட்டுக்கோட்டையில் உள்ள தோமஸ் பேராலயத்தில் 2022 நவம்பர் 6 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை புதிய அதிபராக பதவியேற்கவுள்ளார்.

திருமதி. ருஷிரா குலசிங்கம் தனது ஆரம்பக்கல்வியை கொழும்பு மெதடிஸ்ட் கல்லூரியிலும் யாழ்ப்பாணம் சுண்டிக்குளி பெண்கள் கல்லூரியிலும் கற்றார். பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்டு BA பட்டமும், களனிப் பல்கலைக்கழகத்தில் மொழியியலில் ஆயு பட்டமும் பெற்றுள்ளார்.

தொழில்முறை தகுதிகளில் பணியாளர்கள் மற்றும் கல்வி மேம்பாட்டுச் சங்கம் (SEDA) ஆசிரியர் அங்கீகாரம் (UK), கொழும்பு பல்கலைக்கழகத்தின் உயர் கல்வி கற்பித்தல் சான்றிதழ் (CTHE) மற்றும் எடின்பரோ பல்கலைக்கழகத்தில் (UK) வணிக நோக்கங்களுக்காக ஆங்கிலம் கற்பித்தல் சான்றிதழ் ஆகியவை அடங்குகின்றன.

இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆங்கில மொழி கற்பித்தல் நிலையத்திலும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஆங்கில மொழி கற்பித்தல் அலகிலும் பயிற்றுவிப்பாளர் மற்றும் விரிவுரையாளர் பதவிகளை வகித்தார். கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவின் தலைவராகவும், கொழும்பு பல்கலைக்கழகத்தின் கிங் செஜோங் நிறுவனத்தின் பணிப்பாளராகவும், நுகேகொடை சேகிஸ் வளாகத்தில் மொழிகள் துறையின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். திருமதி. குலசிங்கம் அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவை முழு அளவ-லான கல்வித்துறையாக தரமுயர்த்துவதில் அவரது முன்னணி பங்களிப்பிற்காக பாராட்டப்பட்டவர்.





திருமதி. குலசிங்கம் ஆலோசகராக உயர் கல்வி அமைச்சினால் ஆங்கிலம் கற்பித்தல் தொடர்பான பல்வேறு முயற்சிகளுக்குப் பங்களித்தார். கூடுதலாக, 2011 இல் தகவல் தொழில் நுட்பம் மற்றும் ஆங்கிலம் தொடர்பான ஜனாதிபதி செயலணியிலும் பணியாற்றியவர்.

திருமதி. ருஷிரா குலசிங்கம் CMS பாடசாலைகளின் நிர்வாக சபையில் கடமையாற்றியதுடன் யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் முகாமையாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவரது தந்தை சாளி குணநாயகம் இலங்கை வங்கி யாழ்ப்பாணக் கிளையின் முக-ாமையாளராக பணியாற்றினார். தாயார் ஆசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரது பரம்பரையில் இவர் மூன்றாவது அதிபராகியுள்ளார்.

## நீல வண்ணக் கண்ணா!



நீல வண்ணக் கண்ணா! - உன்
மேனி வண்ணம் காட்டுதடா வானம்

கருவறைச் சக்கரம் போல் தெரியுதடா
பெருவெளிச் சந்திரனின் கோலம் - அன்று

உயர்ந்த பெரு மணல்மலைகள் மூன்று - மிக
பரந்த வெளி பசுந்தரைகள் இடையே - அங்கு

பளபளக்க பட்டுப் பாவாடை கட்டி - கைக்கு
கலகலக்க வண்ண வளையல்கள் போட்டு

சல் சல்லென கொலுசுகள் ஒலிக்க
நில் நில்லென பெரியோரும் தடுக்க

குடு குடு என்று ஓடி - மணலில்
சறு சறு என்று சறுக்கி

உருண்டும் புரண்டும் விளையாடி - பின்
முரண்டு பிடித்து தூக்கிவித்து - மிக

தூரவுள்ள கண்ணனுன் கோபுரத்தை - உனைத்
தூக்கி வரும் பக்தர்களின் வடிவழகை - கடலில்

விரைந்து ஓடும் வள்ளங்களை - வெள்ளை
நுரையாய்ப் பொங்கிப் பாயும் கடலலையை - அங்கு

நிறைந்து நிற்கும் மக்களினை - அலை
விரைந்து தள்ளும் தன்மையினை - மக்கள்

பயந்து ஓடும் செயலதனை - மீண்டும்
துணிந்து தாமாய் வருவதனை என்பதோடு

கண்ணனே நீ தீர்த்தமாடும் அழகினையும் - சிங்கார
வண்ணனவனே நீ திரும்பிச்செல்லும் வடிவினையும்

பார்த்த பின்பும் மனம் ஆர்ப்பரிக்கும்
காத்திருந்த கச்சானும் குளிர்களியும்

மனம் மகிழக் கையில் வர,
உடல் குளிரும் முழு நிலவால்

சில் என்ற குளிரில் தோள்மீது - மீண்டும்
மெல்லமாய் ஒரு சவாரி

நல்லவன் வல்லவன் எங்கள் மாயவனே - உன்
வல்லிபுர ஆழ்வார் ஆலயம் நோக்கி.

-- (உமா மோகன் - Montreal- Canada) --

## தீபாவளித் திருநாள்
## நிலைமண்டில ஆசிரியப்பா)

----------------------------

தீபாவளித் திருநாள் தித்திக்கும் பெருநாள்.
பாபங்கள் நீங்கிய புனித நன்நாள்.
கோபம் தொலையக் குளிர்ந்த நீராடியே!
தீபங்கள் ஏற்றியே திருப்தி கொண்டோம்.
புத்துடை அணிந்து பூரிப்புப் பெற்றோம்
கோவில் சென்று கடவுளைத் தொழுது
மாவிளக் கேற்றி மனநிறைவு கொண்டோம்
பட்சணம் செய்து பகிர்ந்து உண்டோம்
விட்ட உறவுடன் விரும்பி இணைந்தோம்
சொந்தம் எல்லாம் சகிபோல் கூடியே
சந்தோசம் மிகிந்திடச் சரசம் செய்தோம்
விருப்புடன் உணவுகள் வீட்டில் செய்தே
விருந்தினர் அழைத்து விருந்து கொடுத்தோம்
பாட்டுப் பாடியும் பகடிகள் சொல்லியும்
ஆட்டம் போட்டும் ஆனந்தம் கொண்டோம்
சிறுவர்கள் சேர்ந்தே சீனவெடி வெடித்தனர்
சிறுமிகள் கூடியே சடுகுடு ஆடினர்
பல்லிலா பாட்டன் பாட்டிகள் எல்லாம்
செல்லக் கதையுடன் சிரித்து மகிழ்ந்தனர்
எப்போது வருமென ஏங்கும் இந்நாள்
இப்போ நினைத்தால் இதயம் இனிக்குதே!
வருடம் ஒருநாள் வந்திடும் திருநாளை
விருப்பொடு நாமெலாம் வரவேற்று நிற்போமே!

----------------------------

**ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
(416) 844-7453

கனடிய செய்திகள்
Canadian News

# கனடா – பிக்கரிங் நகரில் அமைந்துள்ள அருள்ஜோதி சிவாலயத்தின் சார்பில் தமிழ்நாடு பேராசிரியர் சங்கரநாராயணனுக்கு வழங்கப்பெற்ற சிறப்புப் பட்டம்

கனடா - பிக்கரிங் நகரில் அமைந்துள்ள அருள்ஜோதி சிவாலயத்தின் சார்பில் கனடா உதயன் சர்வதேச விருது விழாவில் வாழ் நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற தமிழ்நாடு பேராசிரியர் சங்கரநாராயணனுக்கும் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் நாகமணி லோகேந்திரலிங்கம் அவர்களுக்கும் சிறப்புப் பட்டங்கள் வழங்கப்பெற்றன.

கடந்த சனிக்கிழமையன்று ஆலய மண்டபத்தில் நடைபெற்ற சிறப்புப் பூஜைகள் மற்றும் அபிசேகங்கள் ஆகியவற்றைத் தொடர்ந்து ஆலயத்தின் குரு முதல்வர் கலைமாமணி சாம்பசிவக் குருக்கள் அவர்களால் தமிழ்நாடு பேராசிரியர் சங்கரநாராயணனுக்கு “ஆன்மீக சொற்சுடர்” மற்றும் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் நாகமணி லோகேந்திரலிங்கம் அவர்களுக்கு “ஊடகக் கலா வினோதன்” ஆகிய சிறப்புப் பட்டங்கள் வழங்கப்பெற்றன.

நூற்றுக்கணக்கான பக்தர்கள் மற்றும் இருபத்தைந்துக்கு மேற்பட்ட இந்துக் குருமார்கள் ஆகியோர் அமர்ந்திருந்த ஆலய மண்டபத்தில் இந்த சிறப்புக் கௌரவங்கள் இடம்பெற்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.









# ஒட்டாவா சிவன் கோவிலுக்கு இணைந்து சென்று சிவனருளைப் பெற்ற கியூபெக் மூத்தோர் இணைய உறுப்பினர்கள்

**இளவரசி இளங்கோவன் - மொன்றியல், கனடா**

15/10/2022ம் நாள் சனிக்கிழமைகாலை 7 மணி வரை மதில் மேல் பூனை போல் போகலாமா வேண்டாமா என்று குழப்பத்திற்கு இடையில் ஒவ்வொரு விடயத்தையும் வாய்ப்பாகவும் நமக்கு ஏதோ ஒன்று கிடைக்கப்போகிறது என்று எதிர்பார்போடும் அணுகுவதால் கடைசி நிமிடத்தில் நிச்சயமாக நாம் இன்று சிவனைப் போய் தரிசிக்க வேண்டும் என்று உள்ளிருந்து ஒரு குரல் கேட்கவே 7 வயது மகனோடு கிளம்பினேன்.

ஒட்டாவா சிவன் கோவிலுக்கு புறப்பட்டு வீட்டை விட்டு வெளியில் வந்த பொழுது மிகப் பெரிய ஆச்சரியம் காத்திருந்தது. ஆமாம் கடந்த வருடம் இதே போல புரட்டாசி கடைசி சனியில் நாங்கள் ஒட்டாவா சிவன் கோவிலுக்கு சென்ற பொழுது எப்படி ஒரு புகை சூழ்ந்த மேகமூட்டத்துடன் அதிகாலை காட்சியளித்ததோ அதேபோல இந்த பயணத்தின் போதும் காட்சியளித்தது எனக்கு மிகவும் அதிசயமாக இருந்தது.

கியூபெக் மூத்தோர் இணையம் அறிவித்தபடி ஒட்டோவா சிவன் கோவிலுக்கு 15/10/2022ம் நாள் சனிக்கிழமை காலை 8 மணிக்கு Van Horne Tim Hortons க்கு (Station Plamondon) முன்பாக இருந்து பேருந்து புறப்பட்டு பின் முருகன் கோவில் முன்பாக 15 நிமிடங்கள் நின்று மேலும் பல பக்தர்களை அரவணைத்துக்கொண்டு மொத்தம் 43 பேருடன் (பெரியவர்கள் 42, சிறுவர்கள் 1) பெரிய பேருந்து ஆலயம் நோக்கி புறப்பட்டது.

கியூபெக் மூத்தோர் இணையத்தலைவர் ஐயா திரு. முத்துக்குமார் சிவானந்தன் பேருந்திலிருந்த அனைவரையும் அன்புடன் வரவேற்று வசதியை உறுதி செய்து கொண்டார்.

எல்லோரும் காலையிலிருந்து விரதத்தை கடைபிடித்து எதுவும் சாப்பிடாமல் பக்தி பயணத்தை தொடங்கினர்.

இடையில் நிமிடங்கள் தேநீர் இயற்கை உபாதைகளுக்கு ஒதுக்கப்பட்டு பக்திபயணம் தொடர்ந்தது. இரண்டு மணிநேர பயணம் ஒரு சிறிய தடங்கலுக்கு பிறகு ஈசனின் அருளால் அனைவரும் பத்திரமாக போய் சிவன் கோவிலில் இறங்கினோம்.

சிறிய அளவில் தற்போது கோவில் அமைந்தாலும் பெரிய கோவில்கட்டும் பணிக்காக காத்திருந்தது சிவனாலயம். நிர்ணயிக்கப்படட 5M தொகையில் பாதி சேர்ந்திருப்பதாக அறிய நேர்ந்தது.

சிவபக்தர்கள் அனைவரும் அர்ச்சனை, எள் தீபம் வேண்டி உள்நுளைய ஆலயம் நிரம்பி வழிந்தது. ஏற்கனவே தரிசித்த பக்தர்களுக்கு தெரியும். இருப்பினும் வசிக்கும் புதியவர்களுக்காக இந்த தகவல். கற்பகவிநாயகர், செல்வ முத்துக்குமாரசாமி இருபுறமும் வீற்றிருக்க வைத்தியநாத சுவாமி சிவலிங்கமாக தலையில் நாகமுடி சூட காட்சி தருகிறார். தையல்நாயகி அம்மாளும், நடராசா பெருமாளும், நவக்கிரக மூர்த்திகளும் பைரவரும், சூரிய பகவானும் உடனுறைந்திருக்கிறார்கள்.

எள் விளக்கு ஏற்றப்பட்டு வெளியில் வைக்க வழி செய்யப்பட்டுள்ளது. மூத்தோர் இணைய தலைமையாளர் ஐயா திரு. முத்துக்குமார் சிவானந்தன் கணீரென தீந்தமிழில் பாட பக்தியோடு ஒன்ற முடிந்தது.

ஆலயத்தின் முன்பும் பேருந்தின் முன்பும் புகைப்படம் எடுத்து கொண்டபின் வீடு நோக்கிய பயணம் தொடங்கியது.

அதனை தொடர்ந்து மொன்றியல் நகைச்சுவை நாயகர் திரு. பாலா அண்ணா அவர்களோடு சேர்ந்து நல்ல பாட்டுக்கள், நகைச்சுவை என வாய்விட்டு சிரிக்க வாய்த்திட்டது நல்ல வாய்ப்பு.

மேலும் சில அன்பர்களால் உளுந்து வடை வழங்கபட்டது.

இந்த மாதிரி பயணங்கள் நிச்சயமாக தேவைப்படும். இளையவர்களோடு நாம் உறவாடும் போது நாம் இளமையாக உணர்வோம். முதியவர்களோடு உறவாடும் போது நிறைய அனுபவங்களை பெறுவோம். நம் வயது ஒத்தவர்களோடு இருக்கும்போது பொழுது மகிழ்ச்சியாக உணர்வோம்.

இந்த முதியவர்களோடு பயணிக்கும் பொழுது நிறைய ஆசீர்வாதங்களும் அன்பும் நிறைய அனுபவமும் அவர்களுடைய வாழ்வியல் பாடங்களும் அவர்கள் பேச்சின் வழியாக அறியக்கூடியதாக இருந்தது. அந்த வகையில் பயணம் சிறப்பாக இருந்தது. திரும்பி வரும் பொழுது பக்தி பாடலில் தொடங்கி ஐயப்பப் பக்தி பாடல்கள், மனதை மயக்கும் பழைய பாடல்கள் பாடி மகிழ்ந்தனர். அபிமானி திருமதி. தில்லை யசோதா தொடக்கி வைக்க அனைவரும் உற்சாகமாக பாடினர்.

மொத்தத்தில் ஒட்டவா வைத்தியநாதன் ஆலய பயணம் பக்தி பரவச பயணமாகவும் மனிதர்களை சந்தித்து ஒரு புத்துணர்வு பயணமாகவும் இருந்தது.

வாய்ப்பு உள்ளவர்கள் சென்று வாருங்கள். மொன்றியலில் இருந்து 2 மணித்தியால பயணம் தான். மறக்காமல் புதிய ஆலய பணிக்கு நன்கொடையாக அர்ச்சனையோ, எள்விளக்கோ வாங்கி பயன்பெறுங்கள்.

தென்னாடுடைய சிவனே போற்றி என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி என்று ஒவ்வொரு சிவ தலங்களிலும் சிவனை தரிசிக்கும்போது மனதார ஆழ்ந்த மனதாக உச்சரிப்போம். எதற்காக தென்னாடுடைய சிவனே போற்றி என்று உச்சரிக்கிறோம். அதாவது சிவனை ஒரு குறிப்பிட்ட தினத்தில் வணங்கினால் நம் வாழ்வில் இருக்கக்கூடிய கர்மவினைகள் காணாமல் போகும்.

முக்தி தலங்கள்

1. பிறக்க முக்தியளிப்பது திருவாரூர்
2. வாழ முக்தியளிப்பது காஞ்சிபுரம்
3. இறக்க முக்தியளிப்பது வாரணாசி (காசி)
4. தரிசிக்க முக்தியளிப்பது தில்லை (சிதம்பரம்)
5. சொல்ல முக்தியளிப்பது திருஆலவாய் (மதுரை)
6. கேட்க முக்தியளிப்பது அவிநாசி
7. நினைக்க முக்தியளிப்பது திருவண்ணாமலை மேற்கண்ட முக்தி தலவரிசையை நம்மில் பலர் அறிந்திருப்பார்கள்.

இவற்றில் காசியை தவிர மற்ற அனைத்தும் தென்னாட்டில் அமைந்துள்ளன. இதனால் தான் தென்னாடுடைய சிவனே போற்றி...! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி...!! என்ற முழக்கம் உருவாயிற்று போலும்.

ஒவ்வொரு மாதமும் வரும் திருவாதிரை நாளில் மேற்கண்ட தலங்களில் ஏதாவது ஒன்றிற்கு சென்று இறைவனை வழிபட்டால் நமது கர்மவினைகள் அடியோடு அழிந்து மிகுந்த புண்ணியம் கிட்டும்.

ஒரு சிலரால் மட்டுமே இது சாத்தியம். அவ்வாறு செய்பவர்கள் மிகுந்த புண்ணியசாலிகள். மேற்கண்ட தலங்களுக்கு செல்ல இயலாவிடில் அதற்காக கவலை கொள்ள வேண்டாம். அருகில் உள்ள சிவதலத்திற்கு குடும்பத்துடன் சென்று சிவபெருமானுக்கு அபிசேகம் செய்து வரலாம். அர்ச்சனை செய்யலாம். அன்னதானம் செய்யலாம். சிவத்தலத்தில் மந்திரம் செபிக்கலாம். அவ்வாறும் செய்ய இயலாவிடில் சிவனது மந்திரங்களை கேட்கலாம். சிவபெருமானின் பெருமைகளை பேசலாம்.

அவ்வாறும் செய்ய இயலாவிடில் சிவபெருமானை நினைத்து கொண்டே இருக்கலாம். இவ்வாறு செய்யும் போது நமது கர்மவினைகள் அடியோடு அழியத்தொடங்கும். மிகுந்த புண்ணியம் கிட்டும். 16 பேறுகளும் கிட்டும். சிவபெருமானின் அருளால் நிம்மதியான வாழ்வு கிட்டும். தென்னாடுடைய சிவனே போற்றி...! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி...!







நன்றி,
இளவரசி இளங்கோவன் - மொன்றியல், கனடா

# இவ்வார ராசிபலன்

**28-10-2022 வெள்ளி தொடக்கம் 03-11-2022 வியாழன் வரையும்**




**மேஷம்:** தொட்டது துலங்கும் வாரம். ஆறுதலான சூழ்நிலை அமையும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். பணியில் உயர்வு கிட்டும். பணிவும், துணிவும் கூடும். கஷ்ட காலம் மறையும். வெளியூர் பயணம் வெற்றித் தரும். உத்தியோக இடமாற்றம் ஏற்படும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உற்சாகம் களைகட்டும். பெண்களின் ஆலோசனை பூர்த்தியாகும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். தொல்லை தந்தவர் விலகிடுவர். திடீர் செலவு ஏற்படும். மங்கள செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். அலைபேசி தகவல் ஆதாயம் தரும். எதிரிகளால் ஏற்றம் கிட்டும். பொது வாழ்வில் புகழ் கூடும். சோதனைகள் நீங்கும். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். பணியில் கண்டிப்பு தேவை. தனவரவுகள் அதிகரிக்கும். எதிரிகளின் தொல்லை குறையும். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு விலகும். ஆன்மீக சிந்தனை உருவாகும். நட்பில் பிரிவு ஏற்படும். எண்ணங்கள் மாறுபடும். மாணவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர் ஆலோசனை பயன் தரும். செல்வாக்கு பெருகும். செயலில் துணிவு கூடும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். உடல்நிலையில் கவனம் தேவை. சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். புண்ணியம் சேர்க்கும் காலம்.

வழிபட வேண்டிய தெய்வம்: அரசமரப் பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: *1,9,8,4*
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,P





**ரிஷபம்:** தார்மீகப் பொறுப்புகள் நிறைவேறும் வாரம். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வாகனச் செலவுகள் ஏற்படும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். புதிய தொழிலமையும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல்வலி தோன்றி மறையும். பேச்சில் கம்பீரம் இருக்கும். குளிர்பான தொழிலில் கவனம் தேவை. உதவும் குணம் உண்டு. பேச்சில் நிதானம் தேவை. விபரீத எண்ணங்கள் விலகும். சிந்தனைகள் மேலோங்கும். சிரமங்கள் குறையும். ஆரோக்கியம் அதிகரிக்கும். பழைய பாக்கி வசூலாகும். எண்ணிய காரியம் கைகூடும். மன சந்தோஷம் அதிகரிக்கும். கடன் தொல்லை நீங்கும். ஆடை, அணிகலன் சேரும். செல்வாக்கு உயரும். தேக ஆரோக்கியம் மிளிரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தன வரவில் தடங்கல் ஏற்படும். தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். பழையக்கடன் தீரும். பொறுமையை கையாண்டு முன் கோபத்தை குறைக்க வேண்டும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். போட்டிகள் அதிகமாகும். கல்வியில் அக்கறை தேவை. இடமாற்றம் உண்டு. கணவன், மனைவி உறவு சீராகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் அகலும். கற்பனை ஆற்றல் பெருகும். காரியத் தாமதம் ஏற்படும். மனக்கலக்கம் உருவாகும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். தந்தை நலன் கூடும். உறவு நன்மை தரும். பயணம் தடைப்படும். பணியாளர்களின் பாராட்டு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கைகொடுக்கும் காமாட்சி, அதிர்ஷ்ட எண்: *7,9,4,3*
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,C




**மிதுனம்:** பெண்களால் ஆதாயம் கிடைக்கும் வாரம். வெளிநாட்டுப் பழக்கம் அதிகமாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். சிக்கனத்தை கடைப்பிடிப்பது நல்லது. ஆடை, அணிகலன் சேரும். மன சஞ்சலம் ஏற்படும். பகைவர்களிடம் எச்சரிக்கை தேவை. பேச்சுத்திறமை அதிகரிக்கும். பொறியியல் துறை லாபம் தரும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். திருமண வாய்ப்பு கூடி வரும். மன அமைதி குறையும். ஆதாயம் பெருகும். நல்லவர் நட்பு கிட்டும். தோற்றப் பொலிவு கூடும். செயல் திறமை அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். தொழில் லாபம் பெருகும். பிரச்சனைகள் முடிவுக்கு வரும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். நீண்ட நாளைய முயற்சி நிறைவேறும். ஊதிய உயர்வு கிட்டும். கடன் தொல்லை தீரும். சுறுசுறுப்பு அதிகரிக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஆண்களின் அதிகாரம் உயரும். நினைத்தது நிறைவேறும். அனுகூலச் செய்தி வந்து சேரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். மாற்று மருத்துவம் பலன் தரும். உடல்நலம் சீராகும். கூடுதல் லாபம் குதூகலம் தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். தாய்வழி உறவில் ஆதரவு பெருகும். பிள்ளைகளின் கல்வியால் பெருமை சேரும். திருப்பு முனை ஏற்படும். எதிர்பார்த்த உதவியால் ஏற்றம் உண்டு. குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. விரோதங்கள் விலகும். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும். பாகப்பிரிவினை சுமூகமாகும். உற்சாகம் மேலோங்கும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். எடுத்த தொழில் முயற்சி வெற்றி பெறும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அருணாச்சலேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: *8,1,5,3*
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,F




**கடகம்:** புத்துணர்வோடு செயல்படும் வாரம். நட்பு வட்டம் விரிவடையும். கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். தாராளமான தனவரவு உண்டு. காரிய வெற்றி கிடைக்கும். மதிநுட்பம் மாபெரும் வெற்றி தரும். நிம்மதி பெருகும். பேச்சில் நிதானம் தேவை. மறைமுக எதிர்ப்பு உருவாகும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை துளிர்விடும். வாழ்வில் வசந்தம் கூடும். உத்தியோக உயர்வு தாமதமாகும். தொழில் மந்த நிலை மாறும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. புதிய பொருள் சேர்க்கையுண்டு. மருத்துவச் செலவுகள் குறையும். வரவுகள் திருப்தி தரும். புதிய சொத்துக்கள் சேரும். பூர்வீகச் சொத்துக்கள் விற்பனையாகும். செல்வாக்கு உயரும். நீண்ட நாளைய அசைகள் நிறைவேறும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். பிரச்சனைகள் அகலும். செயல்பாட்டின் தீவிரம் கூடும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். அலைச்சல் அதிகமாகும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். எண்ணங்கள் வண்ணமயமாகும். வம்பு வழக்குகள் தீரும். யோக பலம் கூடும். பெண்களுக்கு அணிகலன் சேரும். புதிய தொழில் முயற்சிகளை தள்ளிப் போடவும். மாணவர்களுக்கு கல்வியில் அக்கறை தேவை. மாற்று யோசனை பயன் தரும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். வார்த்தையில் நிதானம் தேவை. மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. பெற்றோர்களின் அன்பு அதிகரிக்கும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். சுபிட்ஷங்கள் பெருகும். பணியாளர்களின் ஒத்துழைப்பு தரும். வியாபாரம் விருத்தியாகும். பெரியோர்களின் பாராட்டுக் கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பல்லவ கணபதி, அதிர்ஷ்ட எண்: *3,9,2,4*
அதிர்ஷ்ட நிறம்: வெளிர்நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,Q




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377





**சிம்மம்:** ஆன்மீகச் சிந்தனை அதிகரிக்கும். நிதி நிலைமை சீராகும். பணவரவு உண்டு. பணப்பற்றாக்குறை நீங்கும். நீண்ட நாள் பிரச்சனைகள் முடிவுக்கு வரும். கணவன், மனைவி கருத்து வேறுபாடு அகலும். பொன்னான காலமாக அமையும். தாய்வழி உறவில் நன்மை உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். காதல் எண்ணம் நிறைவேறும். கலையார்வம் கூடும். தனவரவில் மேன்மை உண்டு. சேய் நலம் கூடும். பேச்சில் நிதானம் தேவை. குழந்தைகளால் அல்லல் ஏற்படும். இனிப்பானச் செய்தியால் மனம் மகிழும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கமிஷன் தொழில் கவனம் தேவை. ஆரோக்கியம் சீராகும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். நல்லோர் நட்பு கிட்டும். மறைமுக எதிர்ப்பு அதிகமாகும். பக்குவமான பேச்சு பயன் தரும். குழப்பங்கள் அகலும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். வாகன அபிவிருத்தி உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து உயரும். நினைத்தது நிறைவேறும். வீடு, மனை யோகம் உண்டு. ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. பால் தானம் பாவம் போக்கும். சச்சரவுகள் அகலும். தோல்விகள் விலகும். கட்டிடத் தொழில் லாபம் தரும். பொருள் சேதம் தரும். புதிய முயற்சி பலன் தரும். இனிய எண்ணம் உதயமாகும். பொருள் வரவு திருப்தி தரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேரும். எதிர்ப்புக்கள் அடங்கும். பிரார்த்தனை நிறைவேறும். பித்தளைத் தொழில் லாபம் தரும். மாணவர் திறமை பளிச்சிடும். இடமாற்றம் நன்மை தரும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். வீண் விரயம் அதிகமாகும். அரசியலில் புகழ் கூடும். கால்நடைகளால் பலன் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: பராசக்தியம்மன், அதிர்ஷ்ட எண்: *3,1,4,9*
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,X




**கன்னி:** வீண் விரயங்கள் குறையும் வாரம். பொறுப்புக்கள் கூடும். புதிய நட்பு உருவாகும். மனைவி உடல் நலம் பாதிக்கும். உறவினரால் பாதகம் உண்டு. திடீர் கடன் வசூலாகும். காரிய தாமதம் ஏற்படும். உத்தியோக அலைச்சல் உண்டு. பழைய நட்பு பலன் தரும். உள்ளம் மகிழும். அரசியலில் புகழ் கூடும். அரசு வழி ஆதாயம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பணியாட்களால் தொல்லை ஏற்படும். நண்பர்கள் கவனம் தேவை. உலோகத்தொழில் உயர்வு தரும். இடமாற்றம் ஏற்படும். குடும்ப பாசம் அதிகரிக்கும். முடிவுகள் சாதகமாகும். ஆலய வழிபாடு ஆறுதல் தரும். புகழ்ச்சி அதிகரிக்கும். உஷ்ணம் அதிகரிக்கும். பொருளாதார உயர்வு ஏற்படும். காரியம் இழுபறியாகும். பழிச்சொல் தேடி வரும். முயற்சி பலன் தரும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன் பிறப்புகளால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். போட்டிகள் அதிகரிக்கும். நிர்வாகச் செலவுகள் கூடும். தொழில் வாய்ப்புகள் வந்து போகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். பொது பிரச்சனைகள் விலகும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். வாழ்வில் வளம் உண்டு. விரும்பிய பொருள் சேரும். சுபகாரியம் கைகூடும். தோஷங்கள் ஒதுங்கும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். வேலை பளு அதிகரிக்கும். நல்லோர்களின் பாராட்டுக்கள் கிட்டும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பார்வதி தேவி, அதிர்ஷ்ட எண்: *6,9,2,1*
அதிர்ஷ்ட நிறம்: வெளிர் பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,H




**துலாம்:** பிரியமானவர்களின் சந்திப்பு கிட்டும் வாரம். திடீர் பயணம் உற்சாகம் தரும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். மற்றவரிடம் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். தடைகள் விலகும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். பழைய பாக்கி வசூலாகும். வார்த்தைகளில் நிதானம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். வீண்செலவு அதிகரிக்கும். வறுமைகள் அகலும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். பங்குச்சந்தையில் பணம் புரளும். பொதுபணிகளில் ஆர்வம் கூடும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். தொல்லைகள் அகலும். முகப்பொலிவு கூடும். இடமாற்றம் ஏற்படும். மதிப்பும், மரியாதையும் உயரும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். வாழ்த்துச் செய்திகள் வரும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். கல்வியில் ஆர்வம் கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். வார்த்தைகளில் நிதானம் தேவை. வழக்குகள் வெற்றி பெறும். புதிய நட்பு ஏற்படும். மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். நீண்ட நாளைய நோய் விலகும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். இல்லத்தில் அமைதி கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். தேக பலம் கூடும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். நண்பர்கள் உதவி கிட்டும். தொழில் முயற்சி வெற்றி தரும். தொட்ட காரியம் ஜெயமாகும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முதலீடுகள் கவனம் தேவை. வேண்டாத விஷயங்கள் விலகும். உடல்நலம் சீராகும். புதிய கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிரபஞ்சக் கடவுள், அதிர்ஷ்ட எண்: *2,9,6,8*
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,F




**விருச்சிகம்:** பிள்ளைகளால் சொத்து சேரும் வாரம். எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். புதிய நட்பில் கவனம் தேவை. வெளியூர் பயணம் வெற்றி தரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. மாணவர்களுக்கு சாதகமான காலம். கலைஞர்களுக்கு புகழ் கூடும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. பொறுப்புக்கள் கூடும். பணவரவு சுமாராக இருக்கும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். விரக்திகள் மறையும். வீடு, மனை யோகம் உண்டு. சாதனையான காலம். அற்புதமான காலம். வரவுகள் பெருகும். அன்னிய தேசப்பயணம் உண்டு. திட்டமிட்ட காரியம் வெற்றி முகமாகும். உடல் ஆரோக்கியம் சீராகும். மன ஆரோக்கியம் சிறக்கும். செய்த்தொழில் லாபம் தரும். புத்துணர்ச்சியோடு செயல்படும். புத்தி சாதுர்யம் பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். மனதில் மகிழ்ச்சி கூடும். பிள்ளைவழிச் செலவுகள் அதிகரிக்கும். பாதகமான சூழ்நிலை விலகும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். பயணம் அனுகூலம் தரும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். விருந்தினர் வருகை உண்டு. நீண்ட நாள் ஆசை நிறைவேறும். மற்றவர்கள் உதவி கிட்டும். திட்டங்கள் நிறைவேறும். உத்தியோக ஈடுபாடு அதிகரிக்கும். மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. அயல்நாட்டுப் பயணம் உண்டு. திறமைகள் வெளிப்படும். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டைத் தவிர்க்கவும். மனநிம்மதி அதிகரிக்கும். கடன் வாங்க நேரிடும். பெண்களுக்கு அணிகலன் சேரும். வருமானம் திருப்தி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: *9,4,3,1*
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,H

(தொடர்ச்சி 26 பக்கம்)



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள்



## அருள்மிகு முத்துக்குமாரசுவாமி கோயில் திருகோணமலை

"அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சல்என வேல்தோன்றும் – நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகா என்றோதுவோர் முன்"

மக்களது மேம்பாட்டிற்கும், பண்பாட்டு விழுமியங்களைப் பேணுவதிலும் ஆலயங்கள் வழிகாட்டியாக விளங்குகின்றன. ஈழமெங்கும் கணக்கிலடங்காத இந்து ஆலயங்கள் எங்கும் பரவிக் காணப்படுகின்றன. தெட்சணகைலாயம் எனப் போற்றப்படும் திருகோணமலை, இலங்கையின் கிழக்குக்கரையில் அமைந்துள்ள கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த அழகிய பிரதேசமாக விளங்குகின்றது. இங்குள்ள பாடல்பெற்ற திருக்கோணேஸ்வரத்தை மத்திய பேரருட் தலமாகக் கொண்டு அருள் பரப்பும் கோயில்கள் பல திருகோணமலையிலே காணப்படுகின்றன. இவற்றுள் பல்வேறு சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்ட அருள்மிகு முத்துக்குமாரசுவாமி கோயில் புகழ்பெற்று விளங்குகின்றது.

இக்கோயில் திருகோணமலைப்பட்டணத்தில் புகையிரத நிலையத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் திருஞானசம்பந்தர் வீதியில், அழகுற அமைந்து காணப்படுகின்றது. இவ்வாலயத்திற்குக் கிழக்கே பிரசித்திபெற்ற பத்திரகாளி கோயிலும், வடக்கே விஸ்வநாத சுவாமி கோயிலும், அமைந்து மேலும் சிறப்புச் செய்கின்றன. இலங்கையிலே பல்வேறு வணக்கமுறைகள் காணப்பட்டாலும், மக்களால் பெரிதும் போற்றப்படும் தெய்வ வணக்கமாக, முருக வணக்கம் விளங்குகின்றது. தமிழ்த் தெய்வம் என்று போற்றப்படும் முருகவணக்கம் இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே முக்கியத்துவம் பெற்று விளங்கியமையைத் தமிழ்நாட்டிலுள்ள ஆதிச்சநல்லூர் முதலான பிரதேசங்களிலே நடத்தப்பட்ட புதைபொருள் ஆய்வுகளும், தமிழ் இலக்கியங்களிலே பரந்து காணப்படும் செய்திகளும் புலனாக்கியுள்ளன. புத்தளம் மாவட்டத்திலே 1955 ஆம் ஆண்டு இடம்பெற்ற புதைபொருள் ஆராய்ச்சிகள், இலங்கையில் மிகப் பழைய காலத்திலிருந்தே முருக வழிபாடு காணப்பட்டுள்ளமையைத் தெளிவாக்கியுள்ளது. "சேயோன் மேய மைவரை உலகம்" என்ற தொல்காப்பியக் குறிப்பிலிருந்து குறிஞ்சி நிலத்தின் தெய்வமாக முருகன் விளங்கியமை புலப்படுகின்றது. "விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ" எனத் திருமுருகாற்றுப்படை முருகனை ஏற்றிப் போற்றியுள்ளது.

இலங்கையிலே ஏறக்குறைய இருநூற்றுக்கும் மேற்பட்ட முருகன் திருக்கோயில்கள் காணப்படுகின்றன. இலங்கைத்தமிழர்கள் மட்டுமன்றி, சிங்கள மக்களும் முருகனை வழிபடும் மரபைக் கொண்டுள்ளனர். தற்காலத்திலும் பௌத்த விகாரைகள் சிலவற்றின் பிரகாரங்களிலே முருகனுக்கு இடமளித்துள்ளனர். திருகோணமலையிலே அமைந்துள்ள அருள்மிகு முத்துக்குமாரசுவாமி கோயில் வரலாறு, ஏனைய கோயில் வரலாறுகளினின்றும் சற்று மாறுபட்டுக் காண்படுகின்றது.

முருகு என்ற சொல்லுக்குத் தமிழிலே பல கருத்துக்கள் காணப்படுகின்றன. அழகு, இளமை, மணமுடமை, தெய்வத்தன்மை போன்ற கருத்துக்கள் அனைத்தும் முருகனுக்கே உரிய பொருளாக விளங்குகின்றது. முருகனுக்குப் பல்வேறு நாமங்கள் காணப்படுகின்றன. சேய், சேயோன், செவ்வேள் ஆகிய பெயர்களால் அழைக்கப்பட்ட முருகன், காலகதியில் வேதக் கடவுள்களுடனும், வழிபாட்டு முறைகளுடனும் ஏற்பட்ட கலப்பின் காரணமாக வேறும் பல்வேறு நாமங்களைக் கொண்டவராக விளங்குகின்றார். முருகனுடைய திருநாமங்களுள் முத்துக்குமாரன் என்னும் திருநாமமும் ஒன்றாகும்.

குமாரன் என்ற சொல்லுக்கு மூன்று பொருள்கள் உண்டு. மாரன் என்பது மன்மதனையும், கு என்பது இகழ்ச்சிக் குறிப்பாகவும் இடம்பெற்று, தன் அழகால் மன்மதனை இகழ்ந்தவன் எனப் பொருள் கொள்வர். இரண்டாவதாக, கு என்றால் உலகம். மா என்றால் திருமகள். ர என்றால் தருபவன் என்பதைப் பொருளாகக் கொண்டு, உலகில் பல செல்வங்களையும் தருபவன் குமாரன் எனவும் பொருள் கொள்வர். அவ்வாறே, குமாரன் என்பது குமரன் என்ற கருத்தில் அமைந்து என்றும் இளையோனாக விளங்குபவன் முருகன் என்றும் பொருள் கொள்வர். அழகனாகவும், என்றும் இளையோனாகவும், குன்றாத செல்வங்களைக் குறையாது வழங்குவோனாகவும் விளங்குகின்ற குமாரசுவாமி, முத்தைப் போன்று குளிர்ந்த கருணையுடையோனாக விளங்குவதால் முத்துக்குமாரசுவாமி என்னும் திருநாமம் முருகனுக்கு வழங்குகின்றது. திருநாமங்களிலே வல்லமை பொருந்திய திருநாமமாகக் காணப்படும் இப்பெயருடன் திருகோணமலையில் முருகப் பெருமான் எழுந்தருளி அருள் பாலிக்கின்றார்.

துன்பம் நிறைந்த வேளைகளில் இறைவனிடம் சரணாகதியடைந்து தமது துயர்களைப் போக்கிக் கொள்ள விளைவது மனித இயல்பு. 1942 ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது உலகமகாயுத்தத்தில் திருகோணமலையிலுள்ள எல்லாக் கோயில்களும் பூட்டப்பட்டுக் காணப்பட்டன. ஆனால் திருகோணமலையிலுள்ள அருள்மிகு முத்துக்குமாரசுவாமி கோயில் மட்டும் இக்காலப் பகுதியிலும் திறந்து பூசைகள் நடைபெற்றது. துன்பம் சூழ்ந்த வேளையில் மக்களுடைய துயர் தீர்த்து ஆறுதலளிக்கும் ஆலயமாக இக்காலப்பகுதியில் இவ்வாலயம் விளங்கியமை, அருள்மிகு முத்துக்குமாரசுவாமி கோயிலின் சிறப்புக்களிலொன்றாக விளங்குகின்றது.

*வளரும்...*




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court -Unit 300
Scarborough ON M1B 3C6

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# அன்பின் தொனி - 668

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**படைப்புகளை வணங்காதே** - Worship not the Creations

**உன்னை படைத்தவரை வணங்கு** - Worship your Creator

**ஜெபத்திற்கு பதில் கிடைப்பதற்கான ஏழு (7) வழிமுறைகள்**

**1. பிதாவினிடத்தில் வேண்டுதல் செய்தல்** - Pray to the Father

அந்த நாளிலே நீங்கள் என்னிடத்தில் ஒன்றுங் கேட்கமாட்டீர்கள். மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார். **- யோவான் 16: 23**

**2. இயேசுவின் நாமத்திலே விண்ணப்பம்** - Pray In the name of Jesus

மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான். நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன். நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்.
**- யோவான் 14: 12-15**

**3. ஆவியானவரின் வழிநடத்துதல்** - By the Holy Spirit

அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார். **- ரோமர் 8: 26**

**4. முழு உரிமையோடு கருத்தாய் விண்ணப்பிப்பது** - Pray With full understanding and rights

என்னத்தினாலெனில், நான் அந்நியபாஷையிலே விண்ணப்பம்பண்ணினால், என் ஆவி விண்ணப்பம்பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாயிருக்கும். இப்படியிருக்க, செய்யவேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம்பண்ணுவேன், நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன். **- 1 கொரிந்தியர் 14: 14-15**

**5. வார்த்தைக்கு அமைய ஜெபம்** - In harmoany with the Word

நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.
**- யோவான் 15: 7**

**6. சந்தேகப்படாத விசுவாசத்தோடே கேட்டுதல்** - In faith,nothing doubting

ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன், சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். **- யாக்கோபு 1: 6**

**7. ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபம்** - Prayer with praise

நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள். **- பிலிப்பியர் 4: 6**

மேலே கொடுக்கப்பட்ட வேத அடிப்படையிலே, தேவ சித்தத்தின்படி எம்மைத் தாழ்த்தி, உடைந்த உள்ளத்தோடு தேவனிடத்தில் எமது தேவைகளைக்குறித்து உண்மையாக விண்ணப்பிக்கும்போது, வாக்குமாறாத ஜீவனுள்ள தேவன் ஏற்றகாலத்தில் தக்க பதில்களைத்தந்து எம்மை ஆசீர்வதிப்பார்.

**விக்கிரக வழிபாடுகளும் வழிபாட்டு முறைகளும்**

இந்த சந்தற்பத்தில் விக்கிரக ஆராதனைக்காரருடைய வழிபாடுகளையும், வழிப்பாட்டு முறைகளையும் கவனித்து அறிவது அவர்களுடைய அறியாமையையும் மூட நம்பிக்கைகளையும் எமக்கு தெரியப்படுத்தி, அப்படிப்பட்ட சூழ்நிலைகளிலிருந்து நாம் தப்பித்து வாழ உதவியாய் அமையும். அப்படியாக விக்கிரக வழிபாடுகளில் கடைப்பிடித்த சில வழிபாட்டு முறைகளை, பரிசுத்த வேதாகமத்திலிருந்து இங்கே எடுத்துக் காட்டுகிறோம்.

**விக்கிரகங்களிடம் ஜெபம் ஏறெடுத்தல்** - Prayers to idols

நீங்கள் போய், உங்களுக்காகத் தெரிந்துகொண்ட தேவர்களை நோக்கி முறையிடுங்கள், அவைகள் உங்கள் ஆபத்தின் காலத்தில் உங்களை இரட்சிக்கட்டும் என்றார். **- நியாதிபதி 10: 14**

அவன் தனக்கு கேதுருக்களை வெட்டுகிறான், ஒரு மருதமரத்தையாவது ஒரு கர்வாலிமரத்தையாவது, தெரிந்துகொண்டு, காட்டுமரங்களிலே பெலத்த மரத்தைத் தன் காரியத்துக்காக வளர்க்கிறான், அல்லது அசோகமரத்தை நடுகிறான், மழை அதை வளரச்செய்யும். மனுஷனுக்கு அவைகள் அடுப்புக்காகும்போது, அவன் அவைகளில் எடுத்துக் குளிர்காய்கிறான், நெருப்பைமூட்டி அப்பமும் சுடுகிறான், அதினால் ஒரு தெய்வத்தையும் உண்டுபண்ணி, அதைப் பணிந்துகொள்ளுகிறான் ஒரு விக்கிரகத்தையும் அதினால் செய்து, அதை வணங்குகிறான். அதில் ஒரு துண்டை அடுப்பில் எரிக்கிறான், ஒரு துண் டினால் இறைச்சியைச் சமைத்துப் புசித்து, பொா-ியலைப் பொரித்து திருப்தியாகி, குளிருங்காய்ந்து: ஆஆ, அனலானேன் நெருப்பைக் கண்டேன் என்று சொல்லி, அதில் மீதியான துண்டைத் தனக்கு விக்கிரகதெய்வமாகச் செய்து, அதற்குமுன் அதைவணங்கி: நீ தெய்வம், என்னை இரட்சிக்கவேண்டுமென்று அதை நோக்கி மன்றாடுகிறான்.
**- ஏசாயா 44: 14-17**

**தொடரும்...**

## இவ்வார ராசிபலன்

(24 பக்கம் தொடர்ச்சி)





**தனுசு:** புதிய வாய்ப்புக்கள் வரும் வாரம். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உடல் உஷ்ணம் அதிகரிக்கும். பாக்கிகள் வசூலாகும். பணவரவு மேலோங்கும். குடும்பத்தில் குழப்பம் தீரும். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் கூடும். சேமிப்பு அதிகரிக்கும். பணியாட்களிடம் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். சாதகமான சந்தர்ப்பங்கள் நிகழும். ஆக்கப்பூர்வமான எண்ணங்கள் உதயமாகும். ஆழமான மேன்மைகள் அமையும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வேண்டாத நபர்கள் விலகுவர். நல்லச் செய்திகள் நாடி வரும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். தடைகள் முற்றிலும் அகலும். உயர்பதவி யோகமுண்டு. உற்சாகம் களைகட்டும். தெய்வத் திருப்பணியில் ஆர்வம் கூடும். பயணம் அனுகூலம் தரும். பாராட்டுக்கள் உயரும். ஆடை, அணிகலன் சேரும். வயிறு உபாதைகள் வந்து போகும். களவுப் போனப் பொருள் திரும்ப கிடைக்கும். காரியம் கைகூடும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். வீடு, மனை யோகம் உண்டு. பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. தொழில் போட்டி மறையும். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். திருமண பேச்சு முடிவிற்கு வரும். திருஷ்டிகள் விலகும். மாற்று மருத்துவம் பயன் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: முருகர், அதிர்ஷ்ட எண்: 5,3,9,1
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,J




**மகரம்:** சுபச்செய்தி வரும் வாரம். தேவைகள் பூர்த்தியாகும். அனுகூலச் செய்திகள் வரும். நட்பு வட்டம் விரிவடையும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். வணிகத்தொழில் விரிவடையும். உடல்நலம் சீராகும். சமுதாய விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. எதிரிகளின் தொல்லைகள் ஒழியும். மாணவர்கள் படிப்பில் உற்சாகம் காண்பார்கள். வீண் வம்பு விலகும். ஆபரணத் தொழிலில் கவனம் தேவை. வாயில் தேடி வாய்ப்பு வரும். வழக்குகள் சாதகமாகும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வெளியூர் பயணம் வெகுமானம் சேர்க்கும். மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்குப் பெறுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். திறமைகள் வெளிப்படும். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும். பகைவர் பணிந்து நிற்பர். மதிப்பும், மரியாதையும் உயரும். பணவரவு திருப்தி தரும். பொது வாழ்வில் புகழ் கூடும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். உறவினர் வருகை உற்சாகம் தரும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. சுபிட்ஷங்கள் பெருகும். புதுமையை விரும்புவீர்கள். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். வரவுகள் பெருகும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். மாலை நேரப் பிரார்த்தனை மன அமைதியைத் தரும். பெண்களுக்கு ஆபரணங்கள் சேரும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். எதிர்ப்புக்கள் மாயமாய் மறையும். கர்ம வினைகள் அகலும். நண்பர்கள் உதவி கிட்டும். தேகப்பலம் கூடும். இல்லத்தில் அமைதி கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மாசாணியம்மன், அதிர்ஷ்ட எண்: 3,4,9,6
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,M




**கும்பம்:** வியாபாரிகளுக்கு லாபம் கிட்டும் வாரம். மற்றவர்களால் உதவி கிடைக்கும். பெண்களுக்கு யோகம் உண்டு. மனமகிழ்ச்சி அதிகரிக்கும். இல்லத்தில் அமைதி கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். புதிய கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். மனக்குழப்பங்கள் அகலும். திருமணம் கைகூடி வரும். பொருளாதார நிலை உயரும். தொட்ட காரியத்தில் வெற்றி உண்டு. நண்பகலில் நல்ல தகவல் வரும். அத்தியாவசிய செலவுகள் ஏற்படும். தான தர்மங்கள் பலன் தரும். வழக்குகள் தள்ளிப் போகும். உடல்பொலிவு கூடும். பணியில் பாராட்டு கிடைக்கும். வாகனச்செலவு ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். கண்ணாடிப் பொருட்கள் சேதம் ஏற்படும். கலக்கமான மனநிலை காணப்படும். புதிய சிந்தனை உதயமாகும். சேமிப்பு அதிகமாகும். பொறுப்புக்கள் கூடும். உல்லாசப் பயணம் இனிக்கும். கன்னிப் பெண்களின் விருப்பம் ஈடேறும். நலமே விளையும் இனிய வாரமாகும். வெளி வட்டாரப் பழக்க வழக்கங்கள் நலம் தரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. ஏற்றுமதி தொழிலில் ஏற்றம் உண்டு. பிள்ளைகளின் கல்விச்செலவு அதிகமாகும். நினைத்த காரியம் நிறைவேறும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. மருத்துவச் செலவுகள் குறையும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். எதிர்கால தேவைகள் பூர்த்தியாகும். நல்லோர்களின் வாழ்த்து கிடைக்கும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிகை தேவி, அதிர்ஷ்ட எண்: 8,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,R




**மீனம்:** சுறுசுறுப்பு அதிகரிக்கும் வாரம். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். அலைபேசியால் அலைச்சல் அதிகமாகும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். சாமர்த்தியமாக செயல்படுவீர்கள். புதுமைகள் நிறைந்த காலம். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. ஆரோக்கியம் சீராகும். நீண்ட நாளைய ஆசைகள் நிறைவேறும். பணியில் பாராட்டுக் கிடைக்கும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். விலகி சென்றவர் விரும்பி வருவர். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். வாழ்வில் வசந்தம் உண்டு. பாகப் பிரிவினை சுமூகமாகும். பொல்லாதவர்கள் தொல்லைகள் ஒழியும். எடுத்த முயற்சியில் வெற்றி பெறும். காதலர்களுக்குள் மனக்கசப்பு நீங்கும். கடன் சுமை குறையும். கனவுகள் பலிதமாகும். கலைகளில் ஆர்வம் கூடும். மனைவி வழி சொந்தம் மூலம் நன்மை உண்டு. கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். வாய்ப்புக்கள் வந்து சேரும். பொதுப்பிரச்சனைகள் விலகும். உடல் உஷ்ணம் வந்து போகும். தேக ஆரோக்கியம் மிளிரும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். போட்டிகள் உருவாகி மறையும். விரும்பிய பொருள் கிடைக்கும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. சந்தோஷம் பெருகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: முத்தாரம்மன், அதிர்ஷ்ட எண்: 9,2,1,3
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,R

# மரண அறிவித்தல்



மலர்வு: 05 - 04 - 1955

உதிர்வு: 26 - 10 - 2022

## திருமதி. யோகேஸ்வரி (பவா) சுகுமார்

யாழ்ப்பாணம், 86 கொழும்புத்துறை வீதியைப் பிறப்பிடமாகவும், ஸ்காபரோ கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. யோகேஸ்வரி (பவா) சுகுமார் அவர்கள் 26-10-2022 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி. ஆறுமுகம் புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு. திருமதி. மனுவேற்பிள்ளை, அன்னபூரணி தம்பதிகளின் பாசமிகு மருமகளும்,

செலஸ்ரீன் சுகுமார் அலோஷியஸின் (குமார்) அவர்களின் ஆருயிர் மனைவியும்,

அலோய் ஜனகன், தானியா ஆகியோரின் பாசமிகு தாயாரும், அனுஜ் யோகநாதன், Rebecca சுகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும்,

அர்ஜுனா, மீனாக்ஷி, இசக்கியேல் ஆகியோரின் பேத்தியும்,

பத்மராணி, பத்மாவதி, சத்யபாமா, மற்றும் காலஞ்சென்றவர்களான வரதராஜன், யுவலோகராஜன் (ராஜா) ஆகியோரின் சகோதரரும்,

Baba, Bhavani, Bama, Alli ஜெயாவின் அன்பு மைத்துனியுமாவர்.

*அன்னாரின் பூதவுடல் 29-10-2022 சனிக்கிழமை மாலை 5:00 மணி தொடக்கம் 9:00 மணிவரை Ajax Crematorium Visitation Centre (384 Finley Ave., Ajax L1S 2E3 இல் பார்வைக்காக வைக்கப்பட்டு பின் 30-10-2022 ஞாயிற்றுக்கிழமையன்று பிறபகல் 1:00 தொடக்கம் 3:00 வரை கிரியைகள் நடைபெற்று அதே இடத்தில் தகனம் செய்யப்படும்.*

இவ்வறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்: குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு:
சுகுமார் (கணவர்): (647) 985-8264
ஜனகன் (மகன்) Aloy: (416) 670-6704
தானியா (மகள்): (647) 828-8687
பாமா (மச்சாள்): (416) 577-7363

Carefirst Family Health Team



புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario
ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGREMENT CANADA

Clinic Location:
Carefirst One-Stop Multi Services Centre
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca



26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்



RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com



உதயம் 1386 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday October 28, 2022


# வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு முதல் பெண் அதிபர் நியமனம்



இலங்கையில் 200 ஆண்டுகால வரலாறு கொண்ட வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு முதல் தடவையாக ஓர் பெண் அதிபராக நியமனம் செய்யப்படுகின்றார். 1823 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட யாழ்ப்பாணக் கல்லூரியின் 17 ஆவது அதிபராக ஓர் பெண் பொறுப்பேற்கவுள்ளவர் என அக்கல்லூரியின் பணிப்பாளர் சபை தற்போது உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளனர். திருமதி ருரா குலசிங்கம் 2023 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபராகச் செயல்படுவார் எனவும் அக்கல்லூரியின் பணிப்பாளர் சபை குறிப்பிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் முதல் பெண் அதிபராக திருமதி ருரா குலசிங்கம் தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் வட்டுக்கோட்டையில் உள்ள தோமஸ் பேராலயத்தில் 2022 நவம்பர் 6 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை புதிய அதிபராக பதவியேற்கவுள்ளார்.

(தொடர்ச்சி □.ம் பக்கத்தில்)

# ஸ்காபுறோ மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றத்தில் உதயன் சர்வதேச விருது பெற்ற வெளிநாட்டுப் பிரமுகர்கள்



கடந்த 15-10-2022 அன்று வெற்றிகரமாக நடைபெற்ற உதயன் சர்வதேச விருது விழாவில் வெளிநாடுகளுக்கு உரிய சர்வதேச விருதுகளைப் பெற்ற வெளிநாட்டுப் பிரமுகர்களான திருவாளர் சங்கரநாராயணன் (தமிழ்நாடு) தியாகராஜா நிரோர்' (யாழ்ப்பாணம் இலங்கை0 ஆகியோர் . கனடா- ஸ்காபுறோவில் அமைந்துள்ள மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றத்திற்கு விஜயம் செய்து அங்கு வழிபாட்டு மன்றத்தின் சக்திகள் மற்றும் ஸ்தாபகர் சக்தி ஞானம்மா ஆகியோரால் வரவேற்கப்பெற்றனர்.

# Ontario's Premier Doug Ford visits BAPS Shri Swaminarayan Temple in Toronto with his Hindu MPPs for Diwali Celebrations

## சுவாமிநாராயணன் ஆலயத்தின் தீபாவளி கொண்டாட்டத்திற்கு தனது இந்து உறுப்பினர்கள் சகிதம் விஜயம் செய்த ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட்



கடந்த அன்று ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் போர்ட் அவர்கள் ரொறன்ரோவில் அமைந்துள்ள பாப்ஸ் ஸ்ரீ சத்தியநாராயணன் ஆலயத்தில் இடம்பெற்ற தீபாவளி கொண்டாட்ட வழிபாடுகளுக்கு தனது இந்து உறுப்பினர்கள் சகிதம் சென்று வழிபாடுகளில் கலந்து கொண்டார்.

ஆலய வளாகத்தில் அறங்காவல் சபையினரால் வரவேற்கப்பெற்ற முதல்வரும் சபை உறுப்பினர்களும் பின்னர் ஆலய மண்டபத்தில் பக்தர்கள் மத்தியில் உரையாற்றினர்.

அவர்களின் தமிழ் பேசும் இந்து மாகாண சபை உறுப்பினரான லோகன் கணபதி அவர்களும் அடங்கியிருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அங்கு உரையாற்றிய முதல்வர் டக்போர்ட் அவர்கள் ஒன்றாரியோ மாகாணத்தில் உள்ள இந்து ஆலயங்களும் அதன் நிர்வாகிகளும் மக்களும் மதம் சார்ந்த பண்பாட்டு முறைகளினால் மாகாணத்தின் வளர்ச்சிக்கும் வளளத்திற்கும் பலமாக விளங்குகின்றார்கள் என்று புகழாரம் சூட்டினார்கள்.

# ஸ்காபுறோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரிக்கு விஜயம் செய்த உதயன் சர்வதேச விருது பெற்ற வெளிநாட்டுப் பிரமுகர்கள்



கடந்த 15-10-2022 அன்று வெற்றிகரமாக நடைபெற்ற உதயன் சர்வதேச விருது விழாவில் வெளிநாடுகளுக்கு உரிய சர்வதேச விருதுகளைப் பெற்ற வெளிநாட்டுப் பிரமுகர்களான திருவாளர் சங்கரநாராயணன் (தமிழ்நாடு) தியாகராஜா நிரோஸ் (யாழ்ப்பாணம் இலங்கை0 ஆகியோர் . கனடா- ஸ்காபுறோவில் அமைந்துள்ள ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரிக்கு விஜயம் செய்து அங்கு கல்லூரி நிர்வாகிகள் மற்றும் அதிபர் ஆசிரியைகள் ஆகியோரால் வரவேற்கப்பெற்றனர்.

(தொடர்ச்சி 8ம் பக்கத்தில)

# "பனி பொழியும் தேசத்தில் பத்து நாட்கள்" நூலின் பிரதிகளை ஆவலுடன்பெற்று மகிழ்ந்த கனடா வாழ் கல்வி மற்றும் கலை இலக்கிய வல்லுனர்கள் மற்றும் சமூக உறுப்பினர்கள்





கடந்த வெள்ளிக்கிழமை 21ம் திகதி கனடா கந்தசுவாமி ஆலயத்தின் கலாச்சார மண்டபத்தில் உதயன் பத்திரிகை நிறுவனத்தின் வெளியீடாக வந்துள்ள"பனி பொழியும் தேசத்தில் பத்து நாட்கள்" நூலின் வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரபல பட்டி மன்றப் பேச்சாளர் பேராசிரியர் சங்கரநாராயணன் அவர்கள் மேற்படி நூலை எழுதியிருந்தார். இந்தக் கட்டுரைத் தொடர் ஏற்கெனவே கனடா உதயன் வார இதழில் தொடர்ச்சியாக 32 வாரங்கள் வெளியாகிருந்தது.

இங்கே காணப்படும் படத்தில் விழாவில் கலந்து கொண்ட பல்வேறு துறை சார்ந்த பிரமுகர்கள் உரைகளை ஆற்றும் போதும், மற்றும் நூலின் பிரதிகளை பெற்றுக்கொண்ட போதும் எடுக்கப்பட்ட படங்கள் இங்கே காணப்படுகின்றன.

இந்த நூல்வெளியீட்டு விழாவிற்கு கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் அகணி சுரேஸ் அவர்கள் தலைமை வகித்தார்.


புலம்பெயர் உறவுகளே! தாயகம் செல்லுகையில் இங்கு தங்கிப் பாருங்கள்..
தமிழர் நிர்வாகத்தில் இயங்கும் தரமான நட்சத்திர விடுதி

MaRadha HOTEL
COLOMBO • SRI LANKA
SALES@MARADHA.LK
+94112550136